நல்லவர்களின் நாடித் துடிப்பு

# நம் வாழ்வு

'எழுத்துகள் நம்மை எழுப்பட்டும்!'
JOURNALISM THAT INSPIRES

தமிழக இறைமக்களின் தனிப்பெரும் அரசியல், ஆன்மீக, சமூக விழிப்புணர்வு வார இதழ்
www.namvazhvu.in ★ மலர் 16 ★ இதழ் 29 ★ 17.07.2022 ★ ₹10

தூத்துக்குடி தூய பனிமய மாதா திருத்தலத் திருவிழா

கோபிசெட்டிபாளையம் திருஇருதய ஆண்டவர் திருவிழா

திருச்சி கலைக்காவிரி கல்லூரி அட்மிஷன்



## 'அக்னிபத்' யோஜனா

அருள்பணி. ம. டைட்டஸ் மோகன்

காவியடிக்கப்பட்ட கல்லறைகள்



ஸ்டான் சுவாமி நினைவு தினம்

Fr. ஆரோக்கிய அமலன் சே.ச




தமிழ் தெரியாத் தமிழ் குழந்தைகள் சந்தாவைப் புதுப்பிக்க..

முனைவர் இ.ஜெ. சுந்தர்



UPI - GPay/Amazon

# கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி

9, பென்வெல்ஸ் சாலை, திருச்சிராப்பள்ளி - 620 001.

(An Aided & A Minority College)

Nationally Re-Accredited With **'A' grade (III Cycle)** by NAAC

**(Affiliated to the Tamil Nadu Dr. J. Jayalalithaa Music and Fine Arts University)**

ISO 9001 : 2015 (QC19JVI8919) Certified Institution

**+1 தேர்ச்சி பெறாதோரும் பட்டம் பயிலலாம்**

## பரதம் & இசைக் கலைகளில் பல்கலைக் கழகப் பட்டப்படிப்புகள்

| | |
|---|---|
| +2 தேர்ச்சி பெற்றோர்க்கு | 3 ஆண்டுகள் பட்டப் பயிற்சி |
| 10th தேர்ச்சி பெற்றோர்க்கு<br>+1 தேர்ச்சி பெறாதோர்க்கும் | 5 ஆண்டுகள் பட்டப் பயிற்சிகள் |
| B.A. 3 ஆண்டுகள் | M.A. 2 ஆண்டுகள் |
| I.B.A. 5 ஆண்டுகள் | M.Phill (இசை) 1 ஆண்டு |
| Ph.D பகுதி / முழு நேரம் | |



✷ சிறந்த வேலை வாய்ப்பு ✷ மிகக் குறைந்த கல்விக்கட்டணம் ✷ விடுதி வசதி உண்டு

## கலைக்காவிரி நுண்கலைப் பள்ளி வழங்கும் மாலை நேரப் பயிற்சிகள்



| | | | | |
|---|---|---|---|---|
| பரதநாட்டியம் | மோகினியாட்டம் | குச்சுப்புடி | கதக் | குரலிசை |
| ஹார்மோனியம் | வீணை | வயலின் | தபேலா | மிருதங்கம் |
| புல்லாங்குழல் | ஓவியம் | கிட்டார் (Guitar) | கீபோர்டு (Keyboard) (Western Classical) | நாட்டுப்புற நடனங்கள் |

## சேர்க்கைக்கு முந்துங்கள்

தொடர்புக்கு :

9, பென்வெல்ஸ் சாலை, கண்டோன்மெண்ட், திருச்சி - 620 001.

தொலைபேசி - 0431 - 2460678,2460670

E.mail : kalaikaviri@kkcfa.ac.in / frlouisbritto@gmail.com

Website : www.kalaikavirifinearts.in



# காவியடிக்கப்பட்ட கல்லறைகள்

'நல்ல மாட்டுக்கு ஒரு சூடு. அடங்காத மாட்டுக்கு அங்கமெல்லாம் சூடு வைச்சாலும் அது அடங்கவே அடங்காது' என்பது கிராமத்து வழக்கு மொழி. இது யாருக்கு பொருந்துகிறதோ இல்லையோ, பாஜகவினருக்கு இது முற்றிலும் பொருந்தும் போலும். அறிவுரை யார் சொன்னாலும் கேளாமல் காதுகேளாதோர் காதில் ஊதிய சங்காகவே கேளாமல் கடந்துவிடுகின்றனர். எதையுமே சிந்தித்து ஆராய்ந்து, மறுபரிசீலனை செய்து, அல்லவை நீக்கி, நல்லவைச் சேர்க்கும் பகுத்தறியும் மூளையே அவர்களிடம் அறவே இல்லை.

உச்ச நீதிமன்றமே கொட்டுவைத்தாலும் சரி, எது சொன்னாலும் உரைக்காதவர்களாக, அப்படியே துடைத்தெறிந்துவிட்டு அடுத்த வேலைக்குச் சென்றுவிடுகின்றனர். நுபுர் ஷர்மா வழக்கில் ஒரு நீதிபதி தெரிவித்த கண்டன கருத்து இந்திய அளவில் பாஜகவினரிடம் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. அண்மையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைச்சர் மனோ தங்கராஜ் ஒரு கிறிஸ்தவர் என்பதற்காக, அவருக்கு எதிராக பாஜகவினர் செய்த மதவெறி அரசியல் நீதிமன்றத் தீர்ப்பில் இடித்துரைக்கப்பட்டுள்ளது நமக்கெல்லாம் மிகப்பெரிய ஆறுதல். அவர்களின் கீழ்த்தரமான அரசியல் புத்திக்கு ஓர் உதாரணம். அவ்வளவே.

கன்னியாகுமரி மாவட்டம் வேளிமலை குமாரசுவாமி கோயில் தேர் வடம் பிடிக்கச் சென்ற தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சர் மனோ தங்கராஜுக்கு பாஜகவினர் கடும் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தினர். அதேபோல மண்டைக்காடு பகவதி அம்மன் கோயிலில் நடைபெற்ற திருவிளக்கு பூஜை வழிபாட்டை தொடங்கிவைத்தபோதும் பாஜகவினர் எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்தினர். இந்த ஜூலை ஆறாம் தேதி திருவட்டாறு ஆதிகேசவ பெருமாள் கோவிலில் கும்பாபிஷேகத்தின்போதும் பங்கேற்க எதிர்ப்பு தெரிவித்து எச்சரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையில், கன்னியாகுமரி மாவட்டம் பிரம்மபுரத்தைச் சேர்ந்த சோமன் என்பவர் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் பொதுநல வழக்கு தாக்கல் செய்தார். அம்மனுவில் தாந்திரீக விதிப்படி மேல்சட்டை கழற்ற வேண்டும் என்று ஒரு விதியை மேற்கோள் காட்டியும் இந்துக்கள் அல்லாதோர் கோயிலுக்குள் நுழைய அனுமதிக்கக்கூடாது என்றும் உத்தரவிட கோரியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் பி.என்.பிரகாஷ், ஹேமலதா அமர்வு, 'இந்துக்கள் அல்லாதோர் குடமுழுக்கு விழாவில் பங்கேற்கக் கூடாது என்று இந்து சமய அறநிலையத் துறையில் எந்த விதிகளும் இல்லை. 120 கோடி மக்கள்தொகை கொண்ட தேசத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் கோயிலுக்குச் செல்லும்போது அவர்களை நிறுத்தி, அவர்களுடைய மதத்தினை உறுதி செய்வது பெரும் பிரச்சனைக்கு வழிவகுக்கும்' என்று தெரிவித்து, ''பாடகர் யேசுதாஸ் வேறு சமயத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் அவர் ஏராளமான இந்துக் கடவுள்களின் பாடல்களைப் பாடியுள்ளார். அவை கோயில்களிலும் ஒலிக்கப்படுகின்றன. வேளாங்கண்ணி தேவாலயத்திற்கும், நாகூர் தர்காவிற்கும் ஏராளமான இந்துக்கள் சென்று வழிபட்டு வருகின்றனர். ஆகவே இந்த விவகாரத்தை நீதிமன்றம் குறுகிய பார்வையில் அணுக விரும்பவில்லை. இந்த விஷயங்களை பரந்த மனப்பான்மையுடன் அணுக வேண்டும் என்ற அடிப்படையில் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது" என்று பாஜகவினரின் முகத்தில் காரி உமிழாத குறையாக தீர்ப்பளித்துள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஒரே பாஜக சட்டமன்ற உறுப்பினர் ஆ.சு. காந்தி. கால்களில் அவர் அணியாத செருப்பை தன் மனதில் அணிந்துள்ளார். உடலுக்கு உடுத்துவது வெள்ளாடை. உள்ளத்திற்கோ காவியாடை. முழுக்க முழுக்க அழுக்கடைந்த மனமே இவருடையது. மூச்சுவிடும்போதெல்லாம் மதவெறி அரசியல் செய்தே கட்சி வளர்க்கிறார். இவரைப் போலவே இவரது கட்சியினரும் எதை எடுத்தாலும் மதங்கொண்டு மாட்டு மூளையுடன் அணுகி, நாட்டுக்கு கேடு விளைவிக்கின்றனர். அமைச்சர் மனோ தங்கராஜ், ஒரு கிறித்தவர் என்பதுதான் இவர்களின் வெறுப்புக்கு காரணம். நெருப்பாக அனல் கக்குகின்றனர். அறநிலையத்துறையும் அரசாங்கமும் ஒன்றுதான் என்று தெரியாத அறிவிலிகள் இவர்கள். ஆ.சு.காந்தி, இந்துக்களின் ஏகோபித்த பிரதிநிதியாக தனக்குத்தானே மகுடம் சூடி களமாடுகிறார். இந்து வாக்கு வங்கிதான் இவரது ஒரே குறி. எதைத் தின்றால் பித்தம் தெளியும் என்று அறியாமலே கண்டதையும் தின்று வாந்தி எடுக்கும் வகையறாக்களே இந்த ஆ.சு. காந்தி வகையறாக்கள்.

அரசாங்கத்தின் பிரதிநிதி, மக்களின் பிரதிநிதி, எல்லாவற்றிற்கும் மேலாக சத்திய பிரமாணம் எடுத்துக்கொண்ட ஓர் அமைச்சர், சாதி-மதம்-இனங்களுக்கு அப்பாற்பட்டவர் என்பதையெல்லாம் வசதியாகவே இவர்கள் மறந்துவிடுகின்றனர் போலும்.

இம்மாவட்டத்தில் ஏறக்குறைய ஐம்பது கோடி செலவில் அறநிலையத்துறை சார்பில் கோயில் உழவாரப்பணிகள் நடப்பதை பொறுத்துக்கொள்ளாமல் சிறுமைத்தனத்துடன் அரசியல் செய்கிறார். இந்த கிறித்தவ அமைச்சர் மனோ தங்கராஜ், தேர் வடம் பிடித்து இழுக்கக்கூடாது என்று பாஜகவினர் போராட்டம் நடத்துகின்றனர்.

அந்தத் தேரை நகர்த்த பிணைக்கப்பட்டுள்ள வடக்கயிறு எங்கிருந்து வந்தது? யார் அந்தக் கயிறைத் திரித்தார், அதற்கான மூலப்பொருள் தேங்காய் எந்த தென்னந்தோப்பில் விளைந்தது? அந்த தென்னங்கன்றை நட்டவர் யார்? என்று இவர்கள் அறிவார்களா? இதனை அறிந்துகொள்ள விரும்பமாட்டார்கள். அந்தத் தேரைச் செய்த தச்சர் யார் என்றாவது இவர்களுக்குத் தெரியுமா?

நாம் ஒவ்வொருவரும் உண்ணும் உணவுக்கும் உடுத்தும் உடைக்கும் இது பொருந்தும். கிறிஸ்தவ விவசாயி பயிரிட்டான் என்பதற்காக இவர்கள் உண்ணாமல் பட்டினி கிடப்பார்களா? இஸ்லாமிய நெசவாளி நெய்தான் என்பதற்காக ஆடை உடுத்தாமல் நிர்வாணியாய் நிற்பார்களா?

இப்படி தேர் வடம் பிடிப்பதை அடம் பிடித்து, தரையில் விழுந்து அழுது புரண்டு நிப்பாட்ட போராடியதில் இடுப்பில் இருந்த பட்டாபட்டி தேய்ந்து ஓட்டையாகி இறுதியில் தபால்பெட்டியாகி, அவமானப்பட்டதுதான் மிச்சம். சும்மாயிராமல் நீதிமன்றத்தை நாடினார்கள். அதுவும் சாட்டையெடுத்து, ஒட்டை விழுந்த இடத்திலேயே இப்படி ஒரு போடு போட்டுள்ளது.

புறாவுக்கு மசூதியாயிருந்தால் என்ன? மாதா கோவிலாக இருந்தால் என்ன? மாரியாத்தா கோயிலாக இருந்தால் என்ன? எல்லாம் ஒன்றுதான்.

தூங்குபவரை எழுப்பிவிடலாம். ஆனால், தூங்குபவர்களைப் போல பாசாங்கு செய்பவர்களை எழுப்புவது கடினம். ஆ.சு காந்தி போன்றவர்கள் சாப்பிடமாட்டார்கள்; பசியோடு உண்பாரையும் உண்ண விடமாட்டார்கள். தானும் படுத்து தூங்கமாட்டார்கள்; தள்ளியும் படுக்க மாட்டார்கள். எப்போதும் மக்களை, தன்னைப் போலவே பதற்றத்தில் வைக்கவே இவர்கள் மோடியின் வழியில் முயற்சிக்கின்றனர்.

அமைச்சர் என்பவர் அரசியல் சாசனத்தின் காவலன் என்பதை இவர்கள் உணர்ந்திட வேண்டும். காவியடிக்கப்பட்ட கல்லறைகளாக இருப்பதில் பெருமை ஒன்றும் இல்லை. கல்லறை காவியாக இருந்தால் என்ன? பச்சையாக இருந்தால் என்ன? வெள்ளையாக இருந்தால் என்ன? கல்லறை என்பது மட்டுமே அதன் வரையறை.

வாக்கு சேகரிக்கும்போது ஆயர் இல்லங்களைத் தேடும் இவர்கள், நோன்பு திறக்கும்போது கஞ்சிகுடிக்க கெஞ்சும் இவர்கள், தங்கள் கடந்த காலத்தையும் எண்ணிப் பார்க்க வேண்டும். எதையும் காவிக்கண்ணாடி கொண்டே பார்ப்பது நல்லதல்ல.

பாஜக வகையறாக்களே! நாம் குடியிருப்பது கோவிலிலோ, மசூதியிலோ, ஆலயத்திலோ அல்ல; மாறாக, இந்தச் சமூகத்தில். பிறப்பு முதல் இறப்பு வரை ஒருவரையொருவர் நாம் சார்ந்தே வாழ வேண்டும். இதுதான் விதி. தனி மரம் ஒருபோதும் தோப்பு ஆகாது. கூடி வாழும் ஊரில் எல்லாருக்கும் இடமுண்டு. உங்கள் கோவிலுக்குள் உள்ள தீண்டாமையை போக்கிவிட்டு, இந்துக்கள் அல்லாத அமைச்சர் வடம் பிடிப்பதற்கும் திருவிளக்கு ஏற்றுவதற்கும் குடமுழுக்கில் குடம் தூக்குவதற்கும் எதிராகப் போராடுங்கள்.

'நீதியின் சதகம்' என்ற நூலில் அதன் ஆசிரியர் பர்த்ருஹரி 'சமூகம் என்பது நாலுபேர்' என்று வரையறுக்கிறார். முதலாவதாக, பிறர்வாழத் தாம் வாழும் சான்றோர் (மிகவும் நல்லவர்கள்). இரண்டாவதாக, சுயநலமும் பொதுநலமும் கலந்த சாதாரண மனிதர்கள் (நல்லவர்கள்). தன்னலத்திற்காகப் பிறர் நலத்தை அழிக்கும் மனித மிருகங்கள் (கெட்டவர்கள்). பிறரைக் காரணமின்றி அழிப்பதிலேயே ஆனந்தம் காணும் மனித அரக்கர்கள் (மிகவும் கெட்டவர்கள்). அதாவது சுயநலத்தைக் கொன்று அழித்தவர்கள்: சுயநலத்தைக் கடக்க முனைபவர்கள்: சுயநலத்தில் நிலைத்து நிற்பவர்கள்: சுயநலத்தில் மூழ்கியவர்கள். யார் இவர்கள்? ■


# நம் வாழ்வு

"எழுத்துகள் நம்மை எழுப்பட்டும்"

**Journalism that inspires**

முதன்மை ஆசிரியர்

**குடந்தை ஞானி**

*துணை ஆசிரியர்*

பணி. **பா. ஜான் பால்**

மலர் 16 ★ 17.07.2022 ★ இதழ் 29

தி.பி.2053

*தலைமை அலுவலக முகவரி*

62, லஸ் சர்ச் ரோடு,

மயிலாப்பூர், சென்னை - 600 004.

Tel: 044- 24670439 / WhatsApp: 9498032244

SMS No: 8778724533

editor@namvazhvu.in

subscription@namvazhvu.in

www.namvazhvu.in

**சந்தா விவரம்** Subscription Details

| | | |
|---|---|---|
| 1 ஆண்டு | : ரூ. 500/- | **ஆயுள் சந்தா** |
| 2 ஆண்டுகள் | : ரூ. 950/- | தனி நபருக்கு |
| 3 ஆண்டுகள் | : ரூ. 1,400/- | ரூ.10,000/– |
| 4 ஆண்டுகள் | : ரூ. 1,850/- | நிறுவனங்களுக்கு |
| 5 ஆண்டுகள் | : ரூ. 2,300/- | ரூ. 15,000/– |
| 10 ஆண்டுகள் | : ரூ. 4,500/- | வெளிநாட்டுச் சந்தா |
| | | 100 Euros / $120 |

For NEFT : A/C Name : NAM VAZHVU WEEKLY

Savings Bank A/C No. 0149053000006878

IFSC : SIBL 0000149 South Indian Bank, Mylapore

After NEFT payment kindly call and confirm

044 - 2467 0439 / 87787 24533 / 94980 32244

மணியார்டர், காசோலை, டி.டி. வழியாகவும் சந்தா செலுத்தலாம்.

*for online payment:* www.namvazhvu.in/products

## இரத்து செய்யப்பட்ட திருத்தந்தையின் 37வது திருத்தூதுப்பயணம்

# நம்பிக்கையைக் கைவிடாதிருக்க திருத்தந்தை பிரான்சிஸ் அழைப்பு

காங்கோ மக்களாட்சி குடியரசு மற்றும் தென் சூடான் ஆகிய இரு ஆப்ரிக்க நாடுகளுக்கு இந்நேரத்தில் தனது திருத்தூதுப் பயணம் மேற்கொள்ள இயலாமல் இருப்பதற்கு அந்நாடுகளின் மக்களிடம் தனது ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்து அதேசமயம், அம்மக்கள் தங்களின் இறைநம்பிக்கையை விட்டுவிடாமல் இருக்குமாறு திருத்தந்தை பிரான்சிஸ் ஊக்கப்படுத்தியுள்ளார்.



ஜூலை 2 ஆம் தேதி, சனிக்கிழமையன்று அந்நாடுகளுக்கான தனது 37வது வெளிநாட்டுத் திருத்தூதுப் பயண நிகழ்வுகளைத் தொடங்குவதற்குத் திட்டமிட்டிருந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இதே நாளில் அவ்விரு நாடுகளின் மக்களுக்கு, காணொளிச் செய்தி வழியாக தன் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு, முழங்கால் மூட்டில் ஏற்பட்டுள்ள வலி காரணமாக, அவர் தனது 37வது வெளிநாட்டுத் திருத்தூதுப் பயணத்தை தள்ளிவைத்துள்ளார். மிகவும் விரும்பிய மற்றும் நீண்டகாலமாக காத்திருந்த இத்திருத்தூதுப் பயணத்தை கட்டாயமாகத் தள்ளிவைப்பதற்கு, நான் எவ்வளவு தூரம் வருத்தப்பட்டேன் என்பதை ஆண்டவர் அறிவார். ஆயினும், நம்பிக்கையை இழக்காதிருப்போம், மாறாக, கூடிய விரைவில் சந்திப்போம் என்ற நம்பிக்கையை வளர்த்துக்கொள்வோம் எனவும், அக்காணொளிச் செய்தியில் திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார்.

### நீண்ட காலத் துன்பங்கள்

காங்கோ மக்களாட்சி குடியரசு மற்றும் தென் சூடான் நாடுகளின் மக்களை, குறிப்பாக, அவர்கள் நீண்ட காலம் சகித்துக்கொண்டுள்ள துன்பங்களை, எக்காலத்தையும்விட அண்மை வாரங்களில் அதிகமாக நினைத்தேன் என்று குறிப்பிட்டுள்ள திருத்தந்தை, முதலில் காங்கோ மக்களாட்சி குடியரசு பற்றிய தன் எண்ணங்களை வெளிப்படுத்தியுள்ளார். காங்கோ மக்களாட்சி குடியரசில், குறிப்பாக ஆயுத மோதல்கள் தொடர்ந்து இடம்பெற்றுவரும் அந்நாட்டின் கிழக்குப் பகுதியில், உரிமை மீறல், வன்முறை மற்றும் பாதுகாப்பின்மை ஆகியவை, பலரின் புறக்கணிப்பு மற்றும் சுய ஆதாயங்களால், எண்ணற்ற மற்றும் கடும் துன்பங்களுக்கு காரணமாகியுள்ளன என்று திருத்தந்தை கவலை தெரிவித்துள்ளார்.

### தென் சூடான்

அடுத்து, தென் சூடான் நாடு பற்றிக் கூறியுள்ள திருத்தந்தை, அந்நாட்டில் அமைதிக்கான அழுகுரல் அதிகம் கேட்கிறது எனவும், வன்முறை மற்றும் வறுமை ஆகியவற்றால் மனச்சோர்வடைந்துள்ள பலர், தேசிய ஒப்புரவு நடவடிக்கை வழியாக தெளிவான தீர்வுகளுக்காகக் காத்திருக்கின்றனர் என்றும் கூறியுள்ளார். கான்டர்பரி பேராயர் மற்றும் ஸ்காட்லாந்து திரு அவையின் தலைவர் ஆகிய எனது இரு அன்பு சகோதரர்களுடன் கிறிஸ்தவ ஒன்றிப்பு திருப்பயணம் மேற்கொண்டு, அது வழியாக அமைதிக்கான முயற்சிகளுக்கு உதவ நினைத்தேன் என்றுரைத்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவ்விரு ஆப்ரிக்க நாடுகளின் மக்களை ஊக்கப்படுத்தியுள்ளார்.

எனதன்பு காங்கோ மற்றும் தென் சூடான் நண்பர்களே, இந்நேரத்தில் எனது அருகாமையைத் தெரிவிப்பதற்கு வார்த்தைகள் போதாது. நான் உங்கள் மீது வைத்திருக்கும் பாச உணர்வுகளை வெளிப்படுத்த விரும்புகிறேன். உங்களிடமிருந்து நம்பிக்கையை திருடப்பட்டுவிட அனுமதிக்காதீர்கள். கடவுள், தம்மில் நம்பிக்கை வைத்திருப்பவர்களை ஒருபோதும் ஏமாற்றமாட்டார் என்றும் திருத்தந்தை கூறியுள்ளார்.

### இளையோருக்கு புதிய அத்தியாயம்

இவ்விரு நாடுகளின் அரசியல்வாதிகளுக்கு இருக்கின்ற முக்கிய பணியை நினைவுபடுத்தியுள்ள திருத்தந்தை, ஒப்புரவு, மன்னிப்பு, அமைதியான நல்லிணக்கம், வளர்ச்சி ஆகியவற்றின் புதிய பாதைகளைத் திறக்கின்ற அத்தியாயம் பக்கம் உங்கள் எண்ணங்களைத் திருப்புங்கள் என்று கேட்டுக்கொண்டார்.

இதுவே வருங்காலப் பணி என்றும், இளையோரை புதிய வாய்ப்புகளின் ஒளியால் நிரப்புங்கள் என்றும் அரசியல்வாதிகளிடம் கூறியுள்ள திருத்தந்தை, இளையோர் கனவு காணவேண்டும், அது மெய்ப்படுவதையும், அமைதியின் நாள்களையும் பார்ப்பதற்கு, அவர்கள் தகுதியுள்ளவர்கள் என்றும், அவர்களுக்காக நாம் ஆயுதங்களைக் கைவிடவேண்டும், உடன்பிறந்த உணர்வின் புதிய பக்கங்களை எழுதவேண்டும் என்றும் உரைத்துள்ளார்.

இந்நாடுகளின் மக்கள் விண்ணை நோக்கிச் சிந்தும் கண்ணீர் வீணாய்ப் போகாது. ஏனெனில் கடவுள் அவர்களுக்காக அமைதிக்கான திட்டம் வைத்திருக்கிறார். உங்கள் மீதுள்ள பாசம் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது, கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக என, திருத்தந்தை பிரான்சிஸ் தன் காணொளிச் செய்தியை முடித்துள்ளார். ■

## கர்தினால் ஹம்மஸ் அவர்களின் மறைவுக்கு திருத்தந்தை இரங்கல்

பிரேசில் நாட்டில் ஜூலை 04 ஆம் தேதி, திங்களன்று இறைவனடி சேர்ந்துள்ள 87 வயது நிரம்பிய கர்தினால் கிளாடியோ ஹம்மஸ் அவர்கள், நற்செய்தியின் விழுமியங்களுக்கும், திரு அவைக்கும் மிகுந்த அர்ப்பணத்தோடு நீண்ட காலமாக ஆற்றியுள்ள பணிகளுக்கு கடவுளுக்கு நன்றி சொல்கிறேன் எனவும், அவரது ஆன்மா நிறையமைதியடையத் தான் செபிப்பதாகவும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார்.



கர்தினால் ஹம்மஸ் அவர்களின் இறப்பை முன்னிட்டு சாஹோ பவுலோ, உயர்மறைமாவட்டத்தின் இந்நாள் பேராயராகிய கர்தினால் பெட்ரோ ஷெரர் அவர்களுக்கு திருத்தந்தை அனுப்பியுள்ள இரங்கல் தந்தியில், கர்தினால் ஹம்மஸ் அவர்கள், பிரேசில் தலத்திரு அவை, திருப்பீட தலைமையகம் உட்பட, அன்னை திரு அவை தன்னிடம் ஒப்படைத்த பல்வேறு மேய்ப்புப்பணிகளை மிகச் சிறப்பாக ஆற்றியவர் என்று பாராட்டியுள்ளார்.

குறிப்பாக, அண்மை ஆண்டுகளில் கர்தினால் ஹம்மஸ் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட அமேசான் பகுதி திரு அவைக்கு, தன்னையே அர்ப்பணித்திருந்தார் என்று குறிப்பிட்டுள்ள திருத்தந்தை, 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் தேதி டாம்கிளாடியோ அவர்கள், "ஏழைகளை மறக்கவேண்டாம்" என என்னிடம் கூறியதை, என்றென்றும் எனது நினைவில் உயிர்த்துடிப்புடன் வைத்திருக்கிறேன் என்று கூறியுள்ளார்.

கர்தினால் கிளாடியோ ஹம்மஸ் அவர்கள் உயிரிழந்த செய்தியை தான் மிகுந்த கவலையோடு பெற்றேன் என்றும் கூறியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கர்தினால் ஹம்மஸ் அவர்களின் இறுதி வழியனுப்பும் திருவழிபாட்டில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் அப்போஸ்தலிக்க ஆசீரை வழங்குவதாகத் தெரிவித்துள்ளார். கர்தினால் ஹம்மஸ் அவர்கள், காலநிலை மாற்றம், வறுமை, பூர்வீக இனத்தவர் பாதுகாப்பு உட்பட, பல்வேறு துறைகளில் சமூக ஆர்வலராகச் செயல்பட்டவர்.

கர்தினால் ஹம்மஸ் அவர்களின் மறைவோடு திரு அவையில் மொத்த கர்தினால்களின் எண்ணிக்கை 207 ஆகவும், இவர்களில் புதிய திருத்தந்தையைத் தேர்ந்தெடுக்கும் தகுதியுடைய எண்பது வயதுக்குட்பட்ட கர்தினால்களின் எண்ணிக்கை 116 ஆகவும் மாறியுள்ளன. ■

## நாங்கள் பயங்கரவாதிகள் அல்ல – போராடும் நைஜீரிய அருள்பணியாளர்கள்

அருள்பணியாளர்கள், பயங்கரவாதிகள் அல்ல; அரசு நைஜீரிய மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டும் மற்றும் நாட்டில் நீதி கடைப்பிடிக்கப்படவேண்டும் என்ற விளம்பரத் தட்டிகளுடன், 700க்கும் மேற்பட்ட நைஜீரிய அருள்பணியாளர்கள் அமைதிப் பேரணி ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.




கடந்த ஜூன் 25 ஆம் தேதி, சனிக்கிழமையன்று நைஜீரியாவின் கடுனாவில் கடத்தப்பட்டு கொலைசெய்யப்பட்ட அருள்பணியாளர் விட்டஸ் போரோகோ அவர்களுக்கு ஜூலை 01 ஆம் தேதி, வெள்ளியன்று நிறைவேற்றப்பட்ட அடக்கச்சடங்கு திருப்பலியில் பங்குபெற அந்நாட்டின் பல பகுதிகளிலிருந்து வந்திருந்த நூற்றுக்கணக்கான அருள்பணியாளர்கள் அமைதிப் பேரணி ஒன்றை நடத்தி, இன்னும் எமக்கு ஓர் அரசு இருக்கின்றதா? என்ற கேள்வியை எழுப்பினர்.

இத்திருப்பலியில் மறையுரையாற்றிய கடுனா பேராயர் மேத்யூ அவர்கள், நைஜீரியாவில் உறுதியற்றதன்மை அதிகரித்து வருகின்றது என்றும், வன்முறைத் தாக்குதல்களுக்குப் பலியாகுவோம் என்ற அச்சத்தில் அந்நாட்டினர் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர் என்றும், நடுவண் அரசும், இவ்வன்முறை விவகாரத்தைத் தடுத்து நிறுத்த இயலாமல் இருக்கின்றது என்றும் கூறியுள்ளார்.

நைஜீரியாவில் தாக்குதல்களும் கொலைகளும் தொடர்ந்து இடம்பெற்று வருவதால் அந்நாட்டினர், தங்களின் சொந்த நாட்டிற்குள்ளேயே கைதிகளாக வாழ்ந்து வருகின்றனர் என்றுரைத்த பேராயர் மேத்யூ அவர்கள், இவ்வாண்டில் தனது உயர்மறைமாவட்டத்தில் குற்றக்கும்பல்களால் மூன்று அருள்பணியாளர்கள் கொலைசெய்யப்பட்டுள்ளனர் என்று கவலை தெரிவித்தார். கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர், கொல்லப்பட்ட அருள்பணி. அகாதே பாகோ அவர்களின் சடலத்தைக் கண்டுபிடிக்க முடியாததால், அவரது உடலின்றியே அடக்கச்சடங்கு, நிறைவேற்றப்பட்டது மிகுந்த வேதனையளிக்கின்றது என்றும், பேராயர் மேத்யூ அவர்கள் தன் மறையுரையில் கூறியுள்ளார். ஜூன் 25 ஆம் தேதி, சனிக்கிழமையன்று, கடுனாவில் அருள்பணியாளர் விட்டஸ் போரோகோ மற்றும், ஜூன் 26 ஆம் தேதி, ஞாயிற்றுக்கிழமையன்று அருள்பணியாளர் கிறிஸ்டோபர் ஆகிய இருவரும் கடத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டுள்ளனர். ■

*நம் வாழ்வின் குடும்ப உறுப்பினர்களே!*

# துளித்துளியாய்-3

2025 ஆம் ஆண்டு பொன்விழாக் காணும் ‘நம் வாழ்வு’ வார இதழ் இன்னும் ஏற்றம் பெற அடித்தளம் அமைக்கும்பொருட்டு, ‘நம் வாழ்வு’ வாசகர்களாகிய உங்களின் உயரிய நிதி பங்களிப்புடன் நிரந்தர வைப்பு நிதி ஏற்படுத்தி, அதன் எதிர்காலத்தை ஒளிமயமானதாக்க முயற்சித்து, கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.15 இலட்சத்தை வங்கியில் நிரந்தர வைப்பு நிதியாக சேமித்துள்ளோம். இதனை நீங்கள் அறிவீர்கள். நற்செய்தி அறிவிப்புப் பணியில் இந்த அச்சு ஊடகத்தின் செயல்பாட்டிற்கு வலிமை சேர்க்க தங்களால் இயன்ற பங்களிப்பைச் செய்து நம் வாழ்வுக் குடும்பத்தின் அங்கத்தினர்களாக, நம் வாழ்வின் புரவலர்களாக, கொடையாளர்களாக துணை நிற்கின்ற உங்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

இம்மூன்றாம் ஆண்டில், சென்னை - மயிலை உயர் மறைமாவட்டத்தின் ஆதம்பாக்கம் பங்குத்தந்தை அருள்பணி. **சின்னப்பா** அவர்கள் (ரூ.10000- இரண்டாவது முறையாக) செலுத்தியுள்ளார். அவருக்கும் ஆதம்பாக்கம் பங்கு மக்களுக்கும், நன்றி. சென்னை இராயபுரம் புனித பேதுரு பங்கைச் சேர்ந்த பணி நிறைவுப்பெற்ற பேராசிரியர் திரு. **பெர்னார்டு அவர்களுக்கும் அவர்தம் மனைவி திருமதி. வேர்ஜில் D. சாமி (ரூ.25000)** அவர்களுக்கும், சேலம், சடையம்பாளையம் பங்குத்தந்தை அருள்பணி. **இருதயசெல்வம்** (ரூ.5000) அவர்களுக்கும் சிரம் தாழ்த்தி, என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனைக் கண்ணுறும் நீங்கள், நற்செய்தி அறிவிப்புப் பணிக்கான உங்கள் பங்களிப்பை தாராளமாக தந்து உதவும்படி இரு கரம் கூப்பி பணிவன்புடன் வேண்டுகிறேன். அதற்காகவே இந்தத் ‘துளித் துளியாய்’ என்ற புரவலர் திட்டம். ஆயிரம் பேரிடமிருந்து ஆயிரம் ரூபாய் திரட்டும் திட்டம். வாசகர்களாகிய நீங்கள்தான் ஒரே சொந்தம். உங்கள் நலனுக்காக செபிப்பதற்கு எங்கள் கரங்களும் உங்கள் உரிமைக்காக குரல் கொடுக்க எங்கள் கரங்களில் உள்ள பேனாவும் எந்நாளும் எந்நேரமும் தயாராகவே இருக்கும். இவ்வாண்டிற்கான உங்களுடைய பங்களிப்பைத் தந்து உதவும்படி பணிந்து வேண்டுகிறேன்.

**NAM VAZHVU PUBLICATION SOCIETY** என்ற பெயரில் நீங்கள் உங்கள் காசோலையை அனுப்பலாம்.

**Account No.:0149 0530 0000 6344**
**Name: NAM VAZHVU PUBLICATION SOCIETY**
**IFSC code: SIBL0000149, South Indian Bank, Mylapore**

என்ற கணக்கிற்கு நேரடியாக நீங்கள் பணம் செலுத்தலாம். **குடந்தை ஞானி, ஆசிரியர்.**

| | | | |
|---|---|---|---|
| 357. | திரு. கிறிஸ்துராஜ் மரிய நேசம், கந்தன்சாவடி, சென்னை | (39271) | ரூ.1000 |
| 358. | திரு. அருள்சாமி, கோபிசெட்டிபாளையம், ஈரோடு | (6041) | ரூ.300 |
| 359. | அருள்சகோதரி மேரி கிறிஸ்டோபர் FBS, மாதாகோட்டை, தஞ்சை | (7672) | ரூ.1000 |
| 360. | திருமதி. ஏஞ்சலாமேரி, சுப்ரமணியபுரம், திருச்சி | (63318) | ரூ.1000 |
| 361. | திரு. இருதயராஜ், கம்பம், தேனி | (73938) | ரூ.1000 |
| 362. | திரு. தாமஸ், கீழையூர், நாகப்பட்டினம் | (66473) | ரூ.1000 |
| 363. | திரு. ரிச்சர்ட் எசேக்கியல், கன்னூர், பெங்களூர் (தாயின் நினைவாக) | (47058) | ரூ.1000 |
| 364. | திருமதி. சுந்தரி தெரசா, ஓஜிபாளையம், ஈரோடு | (39080) | ரூ.1000 |
| 365. | திரு. செல்வராஜ், அயனாவரம், சென்னை | (63964) | ரூ.500 |
| 366. | அருள்திரு. **இருதயசெல்வம்,** பங்குத்தந்தை, புனித செபாஸ்டின் ஆலயம், சடையம்பாளையம், ஈரோடு | (10536) | ரூ.5000 |
| 367. | திரு. கெய்சர், ஸ்டேட் பாங்க் காலனி, தூத்துக்குடி | (68956) | ரூ.3000 |
| 368. | திரு. **பெர்னார்டு & விர்ஜில் D. சாமி,** இராயபுரம், சென்னை | (69391) | ரூ.25000 |
| 369. | திரு. மைக்கேல் அல்போன்ஸ், பீலமேடு, கோயம்புத்தூர் | (63773) | ரூ.1000 |
| 370. | திரு. குணமணி, இராயப்பேட்டை, சென்னை | (69253) | ரூ.1000 |
| 371. | அருள்பணி. **சின்னப்பா காரசாலா,** பங்குத்தந்தை, புனித மாற்கு ஆலயம், ஆதம்பாக்கம், சென்னை | (74112) | ரூ.10000 |
| 372. | திரு. உபகாரம், ஆதம்பாக்கம், சென்னை | (25826) | ரூ.2000 |
| 373. | திரு. ஜோசப் மாத்யூ, ஆதம்பாக்கம் பங்கு (சந்தாதாரர் அல்ல) | | ரூ.2000 |
| 374. | திரு. ஹென்றி ராபர்ட், மேற்கு வேளச்சேரி, சென்னை | (38109) | ரூ.5000 |
| 375. | திரு. அருள், ஆதம்பாக்கம், சென்னை | (38108) | ரூ.2000 |
| 376. | திருமதி. கிளாரா, மந்தவெளி, சென்னை | (52730) | ரூ.1000 |
| 377. | பெயர் வெளியிட விரும்பாத நம்வாழ்வு சந்தாதாரர், அரக்கோணம் | | ரூ.1500 |
| | **மொத்தம்** | | ரூ. 66,300/- |

**இதுவரை சேர்ந்துள்ள உங்களின் பங்களிப்பு நிரந்தர வைப்புத் தொகையாக ரூ. 1,31,300/-**

## ஜுலை 3 இல் கொண்டாடப்பட்ட 'இந்தியக் கிறிஸ்தவர் தினம்'

கி.பி 52 இல் திருத்தூதர் தோமாவால் இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்ட இயேசு கிறிஸ்து மற்றும் அவரது நற்செய்தியைக் கொண்டாடும் நாளே 'இந்தியக் கிறிஸ்தவர் தினம்' என்று கர்தினாலாகத் தேர்வுசெய்யப்பட்டுள்ள ஹைதராபாத்தின் பேராயர் அந்தோணி பூலா கூறியுள்ளார்.

ஜுலை 3 ஆம் தேதி, ஞாயிறு, புனித தோமையின் பெருவிழாவன்று கொண்டாடப்பட்ட இந்தியக் கிறிஸ்தவ தினத்தை முன்னிட்டு இவ்வாறு கூறியுள்ள பேராயர் அந்தோணி பூலா அவர்கள், இந்நாள் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கவேண்டியதன் கடமையை கிறிஸ்தவர்களுக்கு எடுத்துக்காட்டுகிறது என்றும் கூறியுள்ளார்.



இந்த ஆண்டு இந்தியத் துணைக்கண்டத்திற்கு நற்செய்தியை முதன்முதலில் கொண்டுவந்த புனித தோமாவின் 1950 ஆம் ஆண்டு நினைவு நாள் என்றும், இந்தூர் ஆயர் சாக்கோ தொட்டி மேரிக்கல் அவர்களும் ஊடகங்களுக்குப் பேட்டியளித்தபோது தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தியக் கிறிஸ்தவ தினம் என்பது, நாட்டிலுள்ள கிறிஸ்தவர்களின் ஒற்றுமை மற்றும் இந்தியத்தன்மையைக் கொண்டாடுவதையும், அவர்களின் மத நம்பிக்கையைக் கடைப்பிடிப்பதற்கும், அதனை வெளிப்படுத்துவதற்குமான உரிமையைக் கொண்டாடுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது என்று இந்தியக் கிறிஸ்தவத் தலைவர்களும் இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்தியக் கிறிஸ்தவ தினத்தைக் கொண்டாடுவது என்பது, இந்தியாவில் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைக் கொண்டாடுவதற்கான ஒரு மக்கள் இயக்கமாக மாற வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது என்று அதிகாரப்பூர்வ இணையதளத்திலும் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

இயேசு கிறிஸ்துவின் சீடர்களில் ஒருவரான புனித தோமை, கி.பி. 52 இல் இந்தியாவின் தென்மேற்கு கடற்கரைக்கு வந்து, தென்கிழக்கு கடற்கரையான இன்றைய தமிழ்நாட்டில் கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்து மறைசாட்சியாகக் கொல்லப்பட்டார். ஜுலை 3 ஆம் தேதி அவரது பெருவிழா கொண்டாடப்படுகிறது. ■

## திருப்பீட அலுவலகப் பணிகளில் பெண்களுக்கு முக்கியத்துவம்

வத்திக்கானில் நடைபெற்ற நேர்காணல் ஒன்றில், புதிய ஆயர்களைத் தேர்வு செய்யும் பணியில் ஈடுபடுத்தப்படும் ஆயர்கள் பேராயத்திற்கு இரண்டு பெண்களை நியமிக்க உள்ளதாக திருத்தந்தை பிரான்சிஸ் அறிவித்துள்ளார்.



கடந்த ஜுன் மாதத்தில் ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்தின் அமெரிக்க பத்திரிகையாளர் பிலிப் புள்ளேளா மேற்கொண்ட நேர்காணலில், திருப்பீடத்தில் பெண்களின் பங்கேற்பு குறித்து அவர் கேள்வி எழுப்பியபோது இவ்வாறு தெரிவித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வருங்காலத்தில், சில திருப்பீடத்துறைகளை வழிநடத்தும் பொறுப்பு, பொதுநிலையினரிடம் ஒப்படைக்கப்பட வாய்ப்புகள் இருப்பதாக, தான் கருதுவதாகவும் கூறியுள்ளார்.

தற்போது, நிர்வாகத் தலைமையகத்திற்கு துணைத் தலைவர் ஒருவர் இருக்கிறார் என்றும், இப்போது, ஆயர்கள் பேராயத்தின், ஆயர்களைத் தேர்ந்தெடுக்கும் ஆணையத்திற்கு, இரண்டு பெண்கள் செல்கிறார்கள் என்றும், இந்த வழியில் அவர்களுக்கான வாய்ப்புகள் திறக்கப்பட்டுள்ளன என்றும் திருத்தந்தை தெரிவித்துள்ளார். பொதுநிலையினர், குடும்பம் மற்றும் வாழ்வு திருப்பீட அவை, கலாச்சாரத் திருப்பீட அவை, கத்தோலிக்கக் கல்வி பேராயம், வத்திக்கான் நூலகம் போன்ற சில திருப்பீடத் துறைகளை வழிநடத்துவதற்கு வருங்காலத்தில் பொதுநிலையினர் நியமிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார். கடந்த ஆண்டு, வத்திக்கான் நகர் நிர்வாகத் தலைமையகத்தில் இரண்டாவது இடத்தில் அருள்சகோதரி ரஃபேலா பெட்ரினியை நியமித்து, அந்தப் பதவியை வகிக்கும் முதல் பெண்மணி என்ற பெருமையைப் பெற்றதை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்த நேர்காணலின்போது நினைவு கூர்ந்துள்ளார்.

அருள்சகோதரிகள் பிரான்செஸ்கா டி ஜியோவானி, நதாலி பெக்வார்ட், அலெஸ்ஸாண்ட்ரா ஸ்மெரில்லி, மற்றும் பொதுநிலையினரான பார்பரா ஜட்டா, நட்டாசா கோவேகர், கிறிஸ்டியான் முர்ரே ஆகிய பெண்களும் திரு அவைச் சார்ந்த பல்வேறு பொறுப்புகளில் தற்போது பணியமர்த்தப்பட்டுள்ளனர். ■

# சர்னா மதத்தை அங்கீகரிக்க வேண்டும்

இந்திய கத்தோலிக்கத் திரு அவையின் தலைவர்கள், ஆதிவாசிகள் அல்லது மலைவாழ் மக்களின் சமயமான சர்னா ஒரு தனி சமயமாக அல்லது மதமாக கருதப்பட வேண்டுமென்றும், அதற்கு நாடு முழுவதும் இருக்கின்ற மலைவாழ் மக்கள், ஆதிவாசிகள் ஒன்று சேர்ந்து குரல் கொடுக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தி வருகின்றனர். சர்னா சமயத்தை பின்பற்றும் இந்த மக்கள் பெரும்பாலும் இயற்கையை தெய்வமாக நினைத்து வணங்கி வருகிறார்கள். பல ஆண்டுகளாக தங்களது மதத்தை ஒரு தனி மதமாக அங்கீகரிக்க வேண்டுமென்று அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துவருகிறார்கள்.




இதை முன்னிட்டு ஜூன் மாதம் 30 ஆம் தேதி இந்தியத் தலைநகரான டெல்லியில் போராட்டத்தையும் நடத்தினார்கள.

பெரும்பாலும் ஜார்க்கண்ட், ஒடிசா, அசாம் இது போன்ற மாநிலங்களில் அதிக அளவில் பழங்குடி மக்களும், ஆதிவாசிகளும் வாழ்ந்து வருகிறார்கள். இதுவரை இந்திய நாட்டில் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், சீக்கியம், பௌத்தம் மற்றும் ஜெயின் இவை மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட மதங்களாக இருக்கின்றன. ஏதாவது ஒரு படிவத்தை பூர்த்தி செய்ய வேண்டும் என்றால் இந்த ஆறு மதங்கள் மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கின்றன. இம்மதங்களைச் சாராதவர்கள், பிறமதம் என்றோ அல்லது இம்மதத்தைச் சாராதவர்கள் என்றோதான் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கிறது.

எனவே தங்களின் சர்னா சமயத்தை அங்கீகரிக்கவேண்டும் என்று மக்கள் போராடி வருகிறார்கள். ஆதிவாசி செஞ்சல் அபியான் என்ற குழுவானது ஏறக்குறைய 250 மலைவாழ் மக்கள் குழுவை கொண்டதாக இருக்கின்றது. நாட்டின் ஐம்பது மாவட்டங்களிலிருந்து மலைவாழ் மக்கள் இக்குழுவில் இருக்கிறார்கள்.

இக்குழுவின் தலைவர் செல்கான் முருமுரு, ‘எங்களுக்கு தேவையானது எல்லாம் ஒன்று தான். எங்களின் மதத்தை தனி மதமாக அங்கீகரிக்கவேண்டும். இதற்காகவே பல வருடங்களாக நாங்கள் போராடி வருகிறோம். எங்கள் மதத்தை மதிப்பது எங்களை மதிப்பது போன்றது’ என்று கூறினார். CBCI யின் முன்னாள் செய்தி தொடர்பாளர் அருள்பணியாளர் பாபு ஜோசப், ‘இம்மக்களுக்கு அவர்களின் கோரிக்கை கிடைக்க வேண்டும் என்பதுதான் இந்தியக் கத்தோலிக்கத் திரு அவையின் முழு விருப்பம். ஆனால், இவர்களிடையே ஒற்றுமை இல்லை என்பது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. பல அரசியல் கட்சிகள் இவர்களிடமிருந்து இயற்கை வளங்களை பெற்றுக் கொள்வதற்காகவே இவர்களை பிரித்து வைத்திருப்பதுபோல் தோன்றுகிறது. இவர்கள் அனைவரும் ஒரே குடையின் கீழ் இணைந்து போராடுகின்றபோது எந்த அரசாங்கமும் இவர்களுக்கு எதிராக, இவர்களின் கோரிக்கைக்கு எதிராக செல்லமுடியாது. மேலும், பல பழங்குடி ஆதிவாசி மக்கள் கிறிஸ்தவ மதத்தை பின்பற்றுவதால் அவர்கள் இப்பட்டியலின் கீழ் இடம்பெறுவதில்லை. யார் எந்த மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர்கள் ஆதிவாசிகள், பழங்குடிகள், மலைவாழ் மக்கள் என்பதை அரசாங்கம் மறந்துவிடக்கூடாது’ என்று UCA செய்தி நிறுவனத்திடம் கூறினார். ■

# திருத்தந்தையின் புதன் பொது மறைக்கல்வியுரை தற்காலிகமாக நிறுத்திவைப்பு

இத்தாலியில் கோடை விடுமுறை தொடங்கியிருப்பதால், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் ஜூலை மாத புதன் பொது மறைக்கல்வியுரைகள் மற்றும் பெரும்பாலான அவரது நடவடிக்கைகள் குறைக்கப்பட்டுள்ளன. ஆயினும், திருத்தந்தையின் இந்த ஜூலை மாத நடவடிக்கைகளில், இம்மாதம் 24 ஆம் தேதி முதல் 29 ஆம் தேதி வரை கனடா நாட்டில் திருத்தூதுப் பயணம் மேற்கொள்கிறார்.



ஜூலை மாதத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள திருத்தந்தையின் புதன் பொது மறைக்கல்வியுரைகள், மீண்டும் ஆகஸ்ட் 3 ஆம் தேதி தொடங்கும் என்று திருப்பீட செய்தித்தொடர்பகம் அறிவித்துள்ளது.

அதேநேரம், ஞாயிறு நண்பகலில் வத்திக்கானின் புனித பேதுரு வளாகத்தில் கூடியிருக்கும் மக்களுக்கு திருத்தந்தையின் வழக்கமான மூவேளை செப உரைகள் இடம்பெறும். ■

# பிறந்த ஊரான விரகாலூரில் ஸ்டான் சுவாமிக்கு அஞ்சலி

**அமைச்சர் கே.என் நேரு பங்கேற்பு - மணி மண்டபத்திற்கு அடிக்கல் - நினைவேந்தல் பொதுக்கூட்டம்**

அருள்பணி. **ஆரோக்கிய அமலன், சே.ச.**

அருள்தந்தை ஸ்டான் சுவாமி அவர்கள் பழங்குடி மக்களின் உரிமைக்காய் தன் வாழ்வை அர்ப்பணித்து, தன் உயிரை தியாகம் செய்துள்ளார் என்பது, வரலாறு பேசும் உண்மை. அவர் நம்மை விட்டு பிரிந்து ஓராண்டு காலம் நிறைவு பெறும் இந்நிலையில், முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, அவரது சொந்த ஊரான திருச்சி மாவட்டம், விரகாலூரில் ஜூலை 5 அன்று, மனித உரிமை காப்பாளர் கூட்டமைப்பு, கிறிஸ்தவ நல்லெண்ண இயக்கம் மற்றும் விரகாலூர் மண்ணின் மைந்தர்கள் முயற்சியிலும், முன்னெடுப்பிலும் சிறப்பாக நடைபெற்றது.



அன்று காலை 7.30 மணிக்கு அருள்தந்தை ஸ்டான் சுவாமி அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுத் திருப்பலி சென்னை மறைமாநில இயேசு சபை தலைவர் அருள்பணி. செபமாலை ராஜா சே.ச. தலைமையில், சுமார் 30-க்கும் மேற்பட்ட அருள்பணியாளர்கள் பங்கேற்ற கூட்டுத்திருப்பலி நடைபெற்றது. ஸ்டான் சுவாமி கண்ட உரிமைக்கான, சமூக நீதிக்கான, அரசு பாசிச பயங்கரவாதம்மற்றும்கார்ப்பரேட்டுகளுக்கு எதிரான கனவு நம் வழியாக செயலாக்கம் பெற வேண்டும் என்றும், ஸ்டான் சுவாமி தனக்குள் எழுப்பிய கேள்வியான 'ஏன் இப்படி இருக்கக்கூடாது?' என்ற கேள்வியை நாம் ஒவ்வொருவரும் எழுப்ப வேண்டும் என்றும் அருள்பணி. சந்தனம் சே.ச. மறையுரையில் சிந்திக்க அழைத்தார்.

திருப்பலி நிறைவில் ஸ்டான் சுவாமியின் நினைவுப் பொருட்களாக, விரகாலூர் ஆலயத்தில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அவர் கடைசியாக பயன்படுத்திய திருச்சிலுவை மற்றும் துண்டுக்கு வணக்கம் செலுத்தப்பட்டது.

ஆலயத்திற்கு வெளியே ஸ்டான் சுவாமி நினைவுத்தூண் சதுக்கம் அமைக்கப்பட்டு, பொதுமக்கள் அஞ்சலி செலுத்த, செபத்துடன் திறந்து வைக்கப்பட்டது.

'I am not a silent spectator' என்ற ஸ்டான் சுவாமியின் ஆங்கிலப் புத்தகம், பேராசிரியர் தேவசகாயம் அவர்களின் தமிழ் மொழி பெயர்ப்பில், 'நான் மௌன சாட்சி அல்லன்' என்ற புத்தகம் திண்டுக்கல் வைகறை பதிப்பகத்தால் அச்சிடப்பட்டு, அருள்பணி. செபமாலை ராஜா சே.ச. வெளியிட, விரகாலூர் பங்குத்தந்தை ஹென்றி புஷ்பராஜ், ஸ்டான் சுவாமியின் அண்ணன் திரு. இருதயராஜ், சகோதரி மற்றும் அருள்சகோதரி கிளேர் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டனர். வைகறைப் பதிப்பக இயக்குனர் ஸ்டீபன் மார்டின். சே.ச. மற்றும் பேரா. தேவசகாயம் நூலை அறிமுகம் செய்தனர். திருச்சி வளனார் கல்லூரி செயலர் கே. அமல், தமிழக ஆயர் பேரவையின் பணிக்குழு செயலர்கள், குழந்தை நாதன், மார்டின், கிரிஸ்டன் போனிபாஸ், புள்ளம்பாடி வட்டார அதிபர், பேதுரு மேல்நிலைப்பள்ளி இராபர்ட் செல்வன் உடனிருந்து, சிறப்பித்தனர்.

நினைவேந்தல் பொதுக்கூட்டம் மாலை 4.30 மணிக்கு விரகாலூர் ஆலய வளாகத்தில் நடந்தது. பாசிச சக்திகளுக்கு எதிராக ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்ட அனைத்து கட்சியின் சார்பிலும், சிவில் சமூகத்தின் சார்பிலும் மாநில அளவிலான தலைவர்கள் கலந்துகொண்டு உரையாற்றினர். பாசிச அடக்குமுறைக்கு எதிரான அனைத்து சக்திகளையும் ஒன்றிணைக்கும் குவியம் ஸ்டான் சுவாமி என்றும், பொய் குற்றச்சாட்டுகளால் பீமாகொரேகான் வழக்கிலும் மற்ற பிற வழக்கிலும் சிறைப்படுத்தப்பட்டுள்ள சிந்தனையாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், மனித உரிமைச் செயல்பாட்டாளர்கள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் என்றும், கிறித்தவர்கள் அரசியல்படுத்தப்பட வேண்டிய நெருக்கடி நிலை உருவாகியுள்ளது என்றும், ஸ்டான் சுவாமியின் நீதிமன்ற காவல் சித்ரவதை மற்றும் கொலைக்கு நீதி வேண்டும் என்றும், வலியுறுத்தி பேசினர்.



தொடக்கவுரையில் திரு. ஹென்றிடிபேன், ஸ்டான் சுவாமி விவகாரத்தில் தி.மு.க. வின் நிலைப்பாடு கிறிஸ்தவ மக்களுக்கு மட்டுமல்லாமல்; அனைத்து மனித உரிமை போராளிகளுக்கும் ஒரு உந்துசக்தியாக இருந்ததாகக்கூறி, தமிழக முதல்வர் ஸ்டான் சுவாமியின் திருச்சாம்பலுக்கு அஞ்சலி செலுத்தியதற்கு, மனித

உரிமை காப்பாளர் கூட்டமைப்பு சார்பாக நன்றி தெரிவித்து, ஸ்டான் சுவாமிக்கு தமிழக அரசின் சார்பில் மணி மண்டபம் அமைக்க வேண்டும் என்றும், கருப்புச்சட்டமான ஊபா சட்டத்தை



திரும்பப்பெற, தி.மு.க. நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வர வேண்டும் என்றும், இரண்டு கோரிக்கைகளை முன்வைத்தார். அதன் பின்பு, தமிழக அரசின் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. கே.என். நேரு தனது சிறப்புரையில், தி.மு.க. ஆட்சியில் இரண்டு கோரிக்கைகளும் கண்டிப்பாக நிறைவேற்றப்படும் என்றும், அதற்கான நடவடிக்கைகளை தமிழக முதல்வருடன் கலந்து ஆலோசித்து செய்வதாக உறுதியளித்தார். மணி மண்டபத்திற்கான நினைவுக்கல்லை செங்கல்பட்டு மறைமாவட்ட முதன்மை குரு பாக்கியரெஜிஸ் அவர்கள் மந்திரிக்க, அமைச்சர் அவர்கள் பொதுமக்களுக்கு அதை காட்சிப்படுத்தினார்.

திராவிட விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி, விடுதலைச் சிறுத்தைகள் மாநில துணை பொதுச் செயலாளர் வன்னியரசு, தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கம் தலைவர் வி.பி.குணசேகரன், சுயாட்சி இந்தியத் தேசிய தலைவர் கிறிட்டினாசாமி, சி.பி.எம் மாநிலக்குழு உறுப்பினர் ஸ்ரீதர், சி.பி.ஐ மாநிலக்குழு உறுப்பினர் இந்திரஜித், எஸ்.டி.பி.ஐ மாநிலச் செயலாளர் அபுபக்கர் சித்திக், தமிழ் புலிகள் பொதுச்செயலாளர் பேரறிவாளன், தமிழ் தேச மக்கள் முன்னணி வழக்கறிஞர் கென்னடி, தமிழ்நாடு வழக்கறிஞர் தோழமை சந்தனம், மக்கள் சிவில் உரிமைக் கழகம் மாநில செயலாளர் வழக்கறிஞர் ஜான் வின்சென்ட், மனித உரிமை செயல்பாட்டாளர் வழக்கறிஞர் எம். ஏ. பிரிட்டோ, மனித உரிமை காப்பாளர் கூட்டமைப்பு ஆசீர், உலகத் தமிழர் பாசறை வழக்கறிஞர் எழிலரசு இளங்கீரன் கருத்துரை வழங்கி, சிறப்பித்தனர். சமம் குடிமக்கள் இயக்க வழக்கறிஞர் சி.சே. இராஜன் சிறப்பாக கூட்ட நிகழ்வை நெறியாளுகை செய்தார். குடந்தை மறைமாவட்ட முதன்மை குரு அமிர்தசாமி நிறைவு செபம் சொல்லி, ஆசி வழங்கினார்.

திண்டுக்கல் சக்தி கலைக் குழுவின் பறையிசையும், ம.க.இ.க. கோவன் குழுவினரின் குரலிசையும் பொதுக்கூட்ட வளாகத்தை அர்த்தமுள்ள வகையில் அதிரச்செய்தது.

இயேசுவின் விடுதலை இறையியலும், இஞ்ஞாசியாரின் ஆன்மீகமும், காரல் மார்க்சின் அரசியல் அறிவும், பெரியாரின் பகுத்தறிவும், அம்பேத்கரின் சமூகநீதியும் சங்கமம் ஸ்டான் சுவாமி. நம் காலத்தில் உயர்த்திப் பிடிக்க வேண்டிய தீச்சுடர்.


## ஸ்டான் சுவாமி மணிமண்டபம் விரகாலூரில்

அருள்தந்தை **ஸ்டான் சுவாமி** அவரது நினைவாக மணிமண்டபம் அமைக்கப்படவுள்ளதால் தங்களால் இயன்ற பொருளுதவி தந்து உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**Bank Details**
Account Name: Seven Dolour's Church
Bank : Indian Overseas Bank
Account No : 3610 0100 0003 169
IFSC Code : IOBA0003610

**மேலும் விபரங்களுக்கு:**
அருள்பணி. P. ஹென்றி புஷ்பராஜ் - 82483 48505

## மணமகள் தேவை

வேலூர் மாவட்டம் ஆர்.சி. கிறித்துவர் வயது 30, M.Sc., Bio-Tech., படித்து, தனியார் கம்பெனியில் ரூ.50,000/- சம்பளத்தில் பணிபுரியும் மணமகனுக்கு B.Ed., அல்லது வேறு பட்டப்படிப்பு படித்த நல்ல மணமகள் தேவை.

**தொடர்புக்கு**
98656 24733 / 75986 56388

## மணமகன் தேவை

தஞ்சாவூர் மாவட்டம், அம்மாபேட்டை சேர்ந்த மணமகள், வயது 33, MBA படித்துள்ள மணமகளுக்கு, நல்ல குணமுள்ள திருமணம் ஆகாத, நல்ல குடும்பத்தைச் சேர்ந்த மணமகன் தேவை.

**தொடர்பு கொள்ளவும்**
அப்பா (Joseph) : 97901 17713

## மணமகள் தேவை

திருச்சி மாவட்டம், துறையூரைச் சேர்ந்த மணமகன், வயது 39, M.Sc., (CS) படித்து தற்போது சென்னையில் Construction Business செய்துவரும் நபருக்கு, நல்ல குணமான, திருமணம் ஆகாத வரனுக்கு, கடவுள் பக்தியுடைய திருமணமாகாத நல்ல குடும்ப பெண் தேவை.

**தொடர்பு கொள்ளவும்**
அம்மா: 88833 80677 / அக்கா : 99655 82778




### இந்திய இளைஞர்களின் கேள்விக்கு என்ன பதில்???

# ‘அக்னிபத்’ யோஜ்னா

## ஆக்கவா? அழிக்கவா?

அருள்பணி. **ம. டைட்டஸ் மோகன்,** இத்தாலி

தங்களுக்கு எதிராக நடக்கும் அநீதிகளை எதிர்த்து மக்கள் போராடிவிடக்கூடாது என்பதற்காகவே எப்பொழுதும் திசை திருப்புதல் செயல்களைச் செய்தே வலம் வருகிறது - மோடி தலைமையிலான வலதுசாரி ஆட்சி.

தாராளமயக் கொள்கை மூலம் பெருமுதலைகளுக்கு சேவகம் செய்து கட்சி நிதி, தனி நன்கொடையைப் பெருக்கி, நாட்டிற்கு அநீதி இழைப்பது; அதை எதிர்க்கும் மக்களை சாதி, மத அடிப்படையில் பிளவுபடுத்தி, மக்களுக்குள் மோதல்களை வளர்ப்பது... சிறுபான்மை மக்களை எப்போதும் அச்சத்தின் பிடியில் இறுக்கிப் பிடிப்பது, இப்படியே தொடர்கிறது இவர்களின் தற்போதைய புல்டோசர் அரசியல்.

**அக்னி வெயிலாய் ‘அக்னிபத் யோஜ்னா’**

சுரண்டப்பட்ட இயற்கையால் அக்னி வெயில் ஒருபுறமெனில், 4 வருட ஒப்பந்த அடிப்படையில் இந்திய இராணுவத்தின் முப்படைகளிலும் சேர “அக்னிபத் யோஜ்னா” திட்டத்தை மத்திய அரசு கடந்த ஜூன் 14 ஆம் தேதி வெளியிட்டது. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் நெஞ்சில் பால் வார்க்க வேண்டிய இந்திய அரசு நஞ்சை வார்த்துள்ளது. இத்திட்டத்தில் சேரும் நபர்கள் அக்னி வீரர்களாம். ஆம், எதிர்காலம் குறித்த கேள்விகளை, ஐயங்களை வயிற்றில் நெருப்பாய் சுமந்துகொள்ளும் வீரர்கள்.

**இத்திட்டத்தில் கூறப்பட்டிருக்கும் அம்சங்கள் என்னென்ன?**

4 வருட பணியில் 6 மாதம் பயிற்சி; 4 வருடங்களுக்குப் பின், இவ்வீரர்களில் 25 விழுக்காட்டினர் வரை மட்டுமே இந்திய இராணுவத்தில் நிரந்தரமாக மேலும் 15 வருட ஒப்பந்தத்தில் சேர்க்கப்படுவர்.




பதினேழரை வயது முதல் 21 வயதிலான ஆண், பெண் இருபாலரும் இத்திட்டத்தில் இணையலாம்.

இந்த வருடம் மட்டும் வயது வரம்பு 23.

10 மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்ச்சி அவசியம்;

உடற்தகுதியைப் பொறுத்தவரை இராணுவத்தில் சேருவதற்கு இப்போது நிர்ணயிக்கப்பட்டிருக்கும் உடற்தகுதிகளே பொருந்தும்.

இத்திட்டத்தின் மூலம் சேரும் வீரர்களுக்கு முதல் வருடம் மாதம் 30 ஆயிரம் ரூபாய்.

பின் ஒவ்வொரு வருடமும் சம்பள உயர்வு. கடைசி வருடமாகிய 4 ஆவது வருடம் 40 ஆயிரம் ரூபாய் மாதச்சம்பளம்.



அதாவது, கிட்டத்தட்ட கடைசி வருடம் மட்டும் வருட சம்பளம் 6.92 லட்சம் ரூபாய்.

இந்த சம்பளத்தில் 30% பிடித்தம் செய்யப்பட்டு, சேவா நிதியாக மத்திய அரசின் பங்களிப்புடன் (அதே 30% அளவிலான தொகை) பணி நிறைவின்போது, ஒவ்வொரு வீரர்களுக்கும் தலா ரூ. 11.7 லட்சம் வரிப்பிடித்தமின்றி வழங்கப்படும்.

இதர ஓய்வூதியம் இல்லை.

இந்த 4 வருட பணிக்காலத்தில், ஏதாவது இராணுவ சண்டையில் காயங்கள் ஏற்பட்டால் அதற்கு 46 லட்சம் ரூபாய் வரை காயத்தை பொறுத்து நிவாரணமாக வழங்கப்படும்.

பணிக்காலத்தில் வீர மரணம் அடையும் அக்னிபத் வீரர்களின் குடும்பத்தினருக்கு ரூ. 1 கோடியும், அவர்கள் பணி புரிந்திருக்க வேண்டிய காலத்துக்கான ஊதியமும் வழங்கப்படும்.

மொத்தம் 45 ஆயிரம் பேர் இந்த திட்டத்தின் கீழ் இராணுவத்தில் சேர்க்கப்படவுள்ளனர். இத்திட்டத்திலிருந்து 4 ஆண்டுகள் நிறைவு செய்து வெளியேறும் அக்னி வீரர்களுக்கு மத்திய பாதுகாப்புத்துறை, மற்றும் உள்துறையில் 10 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கப்படும் எனவும், இரு துணை இராணுவப் படைகளில் சேரும் 'அக்னிபத்' வீரர்களுக்கு வயது வரம்பு சலுகையும் அளிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அறிவித்த சில நாட்களிலே அவசர அவசரமாக, இத்திட்டத்தின் கீழ், ஜூன் 24 ஆம் தேதி முதல் விமானப்படை புதிய நியமனங்களை தொடங்கும் என்று, விமானப்படை தலைமை தளபதி ஏர் சீஃப் மார்ஷல் வி.ஆர். சௌத்ரி கூறியுள்ளார். அதன்படி இராணுவ ஆள்சேர்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. ஏறக்குறைய ஏழரை இலட்சம்பேர் இம்முகாம்களில் பங்கேற்றுள்ளனர்.



ஏன் இந்த அவசரம்? என்கிற உணர்வு இயல்பாகவே பல கேள்விகளை நம்முள் எழுப்புகிறது.

**ஆதரவும் - எதிர்ப்பும் போராட்டமும் - அடக்குமுறையும்**

இத்திட்டம் அறிவிக்கப்பட்டது முதல் பீகார் மாநிலத்தில் பல ஆயிரம் இளைஞர்கள் போராடி வருகின்றனர். பீகாரில் தொடங்கிய இந்தப் போராட்டம் ஹரியானா, உத்தரப்பிரதேசம், பஞ்சாப், டெல்லி, தெலுங்கானா போன்ற மாநிலங்களிலும் பரவியுள்ளது. ரயில் பெட்டிகள் எரிக்கப்பட்ட சம்பவங்களும் நடைபெற்றுள்ளன. இத்திட்டம் குறித்து போலியான செய்திகளைப் பரப்பியதாக 35 வாட்ஸ் அப் குழுக்களுக்கு மத்திய அரசு கடந்த ஜூன் 19 அன்று தடை விதித்தது. இளைஞர்களை போராட்டத்தில் பங்கேற்க தூண்டியதாக ஆந்திராவின் பல்நாடு மாவட்ட நரசராவ்பேட்டை நகரில் உள்ள பயிற்சி நிறுவன உரிமையாளர் அவுலா சுப்பாராவை தெலுங்கானா போலீசார் கைது செய்துள்ளனர்.

ஒருபோதும் இத்திட்டத்தை வாபஸ் பெறமுடியாது என்று கூறி, வேலைவாய்ப்புக்காக போராடும் இளைஞர்களை 'குற்றவாளிகள்' என்றும், போராடியவர்களுக்கு பணி வழங்க இயலாது என்றும் மிரட்டுவது பாஜகவிற்கு கைவந்த கலைதானே! போர் வீரர்களாக மாற நினைத்த இளைஞர்களை போராட்டக்களத்திற்கு அழைத்து செல்வதை வரலாறு மன்னிக்காது.

இத்திட்டம் குறித்து பேசிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், அக்னிபத் இந்திய இராணுவத்தை, இந்திய மக்களைப் போலவே இளமையாக மாற்றிடும். வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும். இந்திய இராணுவத்தை உலகத்தரம் வாய்ந்த இராணுவமாக மாற்றும் என்கிறார்.

கடற்படை தலைமைத் தளபதி அட்மிரல் ஆர். ஹரி குமார், "இத்திட்டம் பாதுகாப்புத்துறையில் ஒரு மாற்றத்தை உருவாக்கும் நடவடிக்கை" என்கிறார்.

தூத்துக்குடி காமராஜ் கல்லூரியில் வ.உ.சி - யின் 150வது பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டு பேசிய தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, "சனாதன தர்மத்தை உலகறியச்

செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். நாம் இப்போது அந்த நிலையை நோக்கி நகர்ந்து வருகிறோம்... 'ஒரே பாரதம் உன்னத பாரதம்' என்ற நோக்கில் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு, அரசு செயல்பட்டு வருகிறது. இளைஞர்களுக்காக வெளிப்படைத் தன்மையுடன் கொண்டு வரப்பட்டுள்ள அக்னிபாதை திட்டம் ஒரு வரப்பிரசாதம். இதன்மூலம் இளைஞர்களிடம் நாட்டுப்பற்று, தன்னம்பிக்கை, நல்லொழுக்கம் உருவாகும். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, சுய தொழில் தொடங்கும் வகையில் பொருளாதார ரீதியாக அந்த இளைஞர்கள் உயர்வார்கள். அக்னிபாதை திட்டத்தை தவறாக புரிந்துகொண்டு, நாட்டின் பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கும் வகையில் சிலர் வன்முறையில் ஈடுபடுகின்றனர். நாட்டின் வளர்ச்சியில் இந்த திட்டம் முக்கிய பங்காற்றும். 2047 இல் அக்னிபாதை திட்டம் உலக நாடுகளுக்கு வழிகாட்டியாக அமையும். எனவே, அக்னிபாதை திட்டம் குறித்த புரிதல் அனைவருக்கும் அவசியம் வேண்டும்" என்றார்.

மோடி அரசு அறிவித்திருக்கும் 'அக்னி பாதை' திட்டம் வரவேற்புக்குரிய ஒன்று என்று குறிப்பிட்டிருக்கும் தமிழ் எழுத்தாளர், பத்திரிகையாளர் சமஸ், "இந்தத் திட்டத்தை எதிர்த்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்று வரும் போராட்டங்கள் இந்தியா எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சனைகளில் ஒன்றான வேலைவாய்ப்பின்மை சார்ந்து நாட்டின் கவனத்தைக் கோருகிறது. தனித்து விவாதிக்கப்பட வேண்டியது அது. வேலைவாய்ப்புக் களமாக ஆயுதப் படைகளைப் பார்ப்பது தவறான பார்வை" என்கிறார்.




அரசியல் தலைவர்கள் தாண்டி, சில தொழிலதிபர்களும் 'அக்னிபத்' திட்டத்திற்கான தங்களின் ஆதரவை தெரிவித்து, அக்னி வீரர்களைப் பணியமர்த்திக்கொள்வதாக தெரிவிக்கின்றனர். ஆனந்த் மகேந்திரா, அத்தகைய பயிற்சி பெற்றவர்களை வேலைக்கு எடுக்கும் வாய்ப்பை மகேந்திரா குழுமம் வரவேற்கிறது என்கிறார்.

ஆர்பிஜி குழுமத்தின் தலைவர் ஹரிஷ் கோயங்கா, "அக்னி வீரர்களை வேலைக்கு எடுக்கும் வாய்ப்பை வரவேற்கிறேன். பிற கார்ப்பரேட் நிறுவனங்களும் இதற்கு முன் வரவேண்டும்" என்று டிவிட்டர் செய்துள்ளார்.

இதற்கிடையில் 'அக்னிபத்' திட்டத்தை எதிர்க்கும் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், காங்கிரஸ் கட்சியினர் டெல்லி ஜந்தர் மந்தரில் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டனர். "இரு முனைகளில் இந்தியா அச்சுறுத்தல்களைச் சந்திக்கும் இந்த வேளையில் 'அக்னிபத்' திட்டத்தை கொண்டுவருவது நமது படையினரின் திறனை குறைப்பதாக உள்ளது. நமது படையின் மாண்பு, பாரம்பரியம், கட்டுக்கோப்பு ஆகியவற்றில் சமரசம் செய்வதை பாஜக நிறுத்திக்கொள்ள வேண்டும்" என ராகுல் காந்தி தனது டிவிட்டர் பக்கத்தில் தெரிவித்தார். பஞ்சாப் மாநில முதலமைச்சர் 'அக்னிபத்' திட்டத்தை திரும்பபெற வேண்டும் என்றார்.

பீகாரில் பாஜகவின் கூட்டணிக் கட்சியான ஐக்கிய ஜனதாதளக் கட்சி தேசியத் தலைவர் ராஜீவ் ரஞ்சன் சிங்: "அக்னிபத் திட்டத்தின் முடிவால் பீகார் உள்ளிட்ட பல மாநிலங்களில் இளைஞர்கள் மத்தியில் அதிருப்தி, விரக்தி மற்றும் இருண்ட எதிர்காலம் (வேலையின்மை) பற்றிய அச்சம் தெளிவாகத் தெரிகிறது. மத்திய அரசு உடனடியாக இதனை மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஏனெனில், இந்த முடிவு நாட்டின் பாதுகாப்புடன் தொடர்புடையது" என்று தெரிவித்துள்ளார்.

### எம் கேள்விக்கு என்ன பதில்?

நிரந்தர வேலை பறிபோகிறது; ஓய்வூதியம் கிடையாது; வேலையில்லா திண்டாட்டம் இன்னும் அதிகரிக்கும் என்கிற எதிர்காலம் குறித்த அச்சங்களோடு இருக்கும் இளைஞர்களின் கேள்விகளுக்கு பாஜக அரசு என்ன பதில் சொல்லப்போகிறது? இத்திட்டத்தை ஆதரித்து பேசியவர்களின் வாதங்களையே எடுத்துக்கொள்வோம்.

**வேலை வாய்ப்பு அச்சம்** : கொரோனா காலகட்டங்களில் சுமார் இரண்டரை ஆண்டுகள் பாதுகாப்புத் துறைக்கு ஒன்றிய அரசால் ஆள் சேர்ப்பு நடத்தப்படவில்லை. இவ்வேலையை நம்பியிருந்த சுமார் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் 23 வயதைக் கடந்து, இராணுவத்தில் சேருவதற்கான தகுதியை இழந்துவிட்டனர். நிரந்தர இராணுவ வீரராக செல்ல வேண்டும் என்ற கனவோடு வலம் வந்த இளைஞர்களுக்கு பேரிடியாக வந்திருக்கிறது இத்திட்டம்.

'தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சிக்கு வந்தால் ஆண்டுக்கு 2 கோடி புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்' என்று, மக்களவைப் பொதுத் தேர்தல் 2014 க்கு முன்னால் வாய்ச்சவுடால் விட்டவர்தானே மோடி. மீண்டும் 2019 இல் ஆட்சிக்கு வந்தபிறகு, ஆண்டுக்கு 2 கோடி புதிய வேலைவாய்ப்புகள், கருப்புப்பணத்தை மீட்டு ஒவ்வொருவருடைய வங்கிக் கணக்கிற்கும் ரூ.15 லட்சம் தருவது

போன்ற வாக்குறுதிகள் எங்கு போச்சு?

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பொருத்தவரையில் நிலைமை இப்போது ‘மோசம்’ என்ற நிலையிலிருந்து ‘படுமோசம்’ என்ற நிலையாகி விட்டது என்கிறார் ப.சிதம்பரம். தேசிய மாதிரி ஆய்வு அமைப்பு, நம் நாட்டில் கடந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவு தீவிர வேலையின்மை தற்போது உருவாகியுள்ளதாக கூறுகிறது.

இத்திட்டத்தால் வெளியேற்றப்படும் 75 விழுக்காட்டினருக்கு அரசு மற்றும் தனியார் துறை வேலைவாய்ப்பில் 10 விழுக்காடு ஒதுக்கீடு வழங்கப்படும் எனக் கூறுகின்றனர்.

பல கோடி எண்ணிக்கையில் அரசு பணியிடங்கள் நிதிபற்றாக்குறை, ஆட்குறைப்பு நடவடிக்கைகள் மூலம் ஒழிக்கப்பட்டு வரும் நிலையில் பாஜக அரசு அறிவிக்கும் 10 விழுக்காடு ஒதுக்கீடு எந்த அளவு சாத்தியமாகும்?

ஃபோர்டு, ஜெனரல் மோட்டார் உள்ளிட்ட பன்னாட்டு தனியார் நிறுவனங்களும், பல உள்நாட்டு கனரக தொழிற்சாலைகளும் மூடு விழா கண்டுவரும் எதார்த்த சூழலில் யாரை ஏமாற்றப் பார்க்கிறார்கள்?

**போதிய ஊதியம் பெறுவதும் கேள்விக்குறி:** ஆண்டுக்கு ரூ. 7 லட்சம் வரையிலும், சம்பாதித்து ஓய்வு பெறும் அக்னி வீரர் அதே ஊதியத்துடன் தனியார் நிறுவனங்களால் வேலைக்கு எடுக்கப்படும் வாய்ப்பு இருக்குமா?

வெறும் பள்ளிக் கல்வியை முடித்த ஒருவருக்கு, எந்த தனியார் நிறுவனம் நல்ல ஊதியத்தில் வேலை வழங்க தயாராக இருக்கும்? இப்போதே பல லட்சம் செலவு செய்து பட்டம் பெற்றவர்கள் 5000, 10000 ரூபாய் சம்பளத்தில் வேலைபார்க்கும் அவலம்.

பாரதத்தில் பக்கோடா விற்றால் தினம் 200 ரூபாய் கிடைக்கும் என, வேலைவாய்ப்பை கொச்சைப்படுத்திய மோடியின் வகையறாக்களுக்கு அக்னிபாதையில் இருந்து வெளியேற்றப்படும் இளைஞர்களின் வலி எப்படி புரியும்?

**ஒப்பீடு செய்து ஏமாற்றுவதா?**: வெளிநாடுகளிலும் அக்னிபாதை போன்று, இராணுவத்தில் 4 ஆண்டுகள் அல்லது அதற்கும் கூடுதலாகவோ, குறைவாகவோ இராணுவத்தில் சேவை ஆற்றுதல் அமலில் இருப்பதாக ஒப்பீடு செய்கிறது இந்தியப் பாதுகாப்புத்துறை. உலகில் பல்வேறு நாடுகளில் குறுகிய காலத்திற்கு இராணுவத்தில் ஆட்சேர்ப்பு இருப்பது என்பது உண்மைதான். இதற்காக சட்டமே இயற்றப்பட்டுள்ளது.

**உதாரணத்திற்கு சில.**

இஸ்ரேலிய பாதுகாப்புப் படையில் ஆண்கள் மூன்று ஆண்டுகளும், பெண்கள் சுமார் இரண்டு ஆண்டுகளும் பணியாற்றுவது கட்டாயம். தென் கொரியாவில் உடற்தகுதியுடைய ஆண்கள் அனைவரும் இராணுவத்தில் 21 மாதங்களும், கடற்படையில் 23 மாதங்களும், விமானப்படையில் 24 மாதங்களும் பணியாற்றுவது கட்டாயம். ஆனால், ஒலிம்பிக் அல்லது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்லும் வீரர்களுக்கு இதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இப்போட்டிகளில் பதக்கம் வெல்ல முடியாத வீரர்கள் மீண்டும் வந்து இராணுவத்தில் பணியாற்ற வேண்டும். சுவிட்சர்லாந்தில் 18 வயது முதல் 34 வயது வரையுள்ள ஆண்களுக்கு இராணுவ சேவை கட்டாயம்.

இந்தச் சட்டத்தைக் கடந்த 2013 ஆம் ஆண்டு, சுவிட்சர்லாந்து வாக்கெடுப்பின் மூலம் முடிவுக்கு கொண்டுவர முயற்சி செய்தது.

பிரேசிலில் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கு இராணுவ சேவை கட்டாயம். இவையனைத்திலும் உற்று கவனிக்க வேண்டிய விஷயம் என்னவெனில், மேற்கண்ட நாடுகளில் வேலை இல்லா கால நிவாரணம் என்ற சமூக பொறுப்பு அரசுகளால் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

எனவே, அது தனிப்பட்ட இளைஞர்களின் மனநிலையை அல்லது தனக்கு பிடித்த வேலை தேடும் பொறுமையை பாதிக்காது. ஆனால், இங்கு அப்படி அல்ல; இங்கு வேலையின்மை விகிதம் 7.8 விழுக்காடு. நமது மக்கள் தொகையுடன் ஒப்பிட்டால் சுமார் 10 கோடி. கோடிகளில் புரளும் அரசியல் தாதாக்களுக்கு இவ்வுண்மை புரியாதது ஏனோ?

**சூனியமாகும் இளையோரின் எதிர்காலம்:** இராணுவத்தில் நான்காண்டு ஒப்பந்த அடிப்படையில் சேர்வதால் இளைஞர்களுக்கு எதிர்காலத்தில் திருமண வரன்கள் அமைவதில்கூட சிக்கல்கள் ஏற்படும். மேகாலயா ஆளுநர் சத்யபால் மாலிக் அவர்களின் இக்கூற்று எதார்த்தமானது. தகுந்த வேலை, போதிய ஊதியம் இல்லாதவருக்கு பெண் கொடுக்க பலரும் முன்வருவதில்லை. அதிலும் குறிப்பாக, ஆண்களைவிட பெண்களின் எண்ணிக்கைக் குறைவாக உள்ள இக்காலச்சூழலில் இதுவும் மிகப்பெரிய சவாலே!

**குத்தகை மூலம் தனியாருக்கு திறன் தாரை வார்ப்பு:** பாதுகாப்புத்துறையில் 100 விழுக்காடு அந்நிய முதலீடு, இராணுவ தளவாட உற்பத்தியில் 74 விழுக்காடு அந்நிய முதலீடு போன்றவற்றின் மூலம் இராணுவத்தை தனியார்மயமாக்கும் வேலைகளைக் கடந்த 2014 ஆம் ஆண்டு முதலே பா.ஜ.க செய்து வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் மேலும் இராணுவத்துறையை கார்ப்பரேட்களின் நலனுக்காக திறந்து விடுவதும், காவிகளின் செல்வாக்கை இராணுவத்தில் அதிகப்படுத்துவதும் தொடரும் என்பதில் மாற்றில்லை.

ரயில்வே, வங்கி, அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் தற்போது தனியார் கட்டுப்பாட்டின்கீழ் ஒப்பந்த முறையில் ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். குத்தகை மூலம் இராணுவத்திற்கு ஆள் எடுக்கும் அரசு இனிவரும் காலங்களில் முப்படைகளுக்கும் ஒப்பந்த முறையில் ஆட்களை தேர்வுசெய்வதை தனியாருக்கு நிச்சயம் கொடுக்கும்.

இந்த அக்னி வீரர்கள் நாளை உள்நாட்டு தரகு முதலாளிகளின் தனியார் நிறுவனத்தின் ஒப்பந்த ஊழியர்களாகவோ அல்லது வெளிநாட்டு கார்ப்பரேட் கம்பெனிகளின் ஒப்பந்த ஊழியர்களாகவோ இருப்பார்கள். இராணுவ தளவாட தயாரிப்பு, பாதுகாப்பு கவசங்கள் மற்றும் உணவு ஆகியற்றை வழங்கும் உரிமையை தனியார் நிறுவனத்திற்கு கொடுத்ததன் மூலம், கொள்ளை இலாபம் சம்பாதித்து வருகின்றன அந்தத் தனியார் நிறுவனங்கள்.

தற்போது இராணுவ வீரர்களையும் தனியார் நிறுவனங்கள் ஒப்பந்தத்திற்கு எடுத்தால் மேலும் தனது இலாபத்தை செழுமைப்படுத்தும் என்பதே வெள்ளிடைமலை.

### எச்சரிக்கை

### 2025 - ஆர்.எஸ்.எஸ் நூற்றாண்டு நோக்கி

கூடுதலாக பாஜகவின் இன்னொரு சூழ்ச்சியையும் நாம் மறந்துவிடக்கூடாது.

2025 - ஆர்.எஸ்.எஸ் துவங்கியதன் நூற்றாண்டு. அதற்குள் இந்தியாவை இந்து ராஷ்டிரமாக அறிவித்துவிட வேண்டும் என்கிற முனைப்புடன் காய்களை நகர்த்தி வருகிறார்கள். ஏற்கனவே மோடி ஆட்சியின் கீழ் காவல் துறை, சி.பி.ஐ, அமலாக்கத்துறை, நீதித்துறை, தேர்தல் ஆணையம், ரிசர்வ் வங்கி, பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள், பேராசிரியர்கள் என, அனைத்து துறைகளிலும் ஆர்.எஸ். எஸ் பணியாளர்கள் இதுவரை இல்லா அளவிற்கு நிரப்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இராணுவமும் அதற்கு விதிவிலக்கல்ல.

இராணுவத்திற்குள் ஊடுருவி அதைக் கைப்பற்ற வேண்டும் என்பது ஆர்.எஸ்.எஸ்-இன் நீண்ட காலத்திட்டம். ஆர்.எஸ்.எஸ் நிறுவனர்களுள் ஒருவரான மூஞ்சே, 1935 ஆம் ஆண்டிலேயே இராணுவத்தை இந்திய மையப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தின் பெயரில், மத்திய இந்து இராணுவக் கல்விக் கழகத்தை நாசிக்கில் நிறுவினார். மூஞ்சே தொடங்கிய இராணுவப் பள்ளியைப் போல, கடந்த 2020 ஆம் ஆண்டு, உத்தரப்பிரதேசத்திலும் ஆர்.எஸ்.எஸ் புதிதாக தனது இராணுவப் பள்ளியைத் தொடங்கி நடத்தி வருகிறது.

கடந்த 2018 இல் பீகாரில் நடந்த கூட்டமொன்றில் பேசிய ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பகவத் “இக்கட்டான சூழலில் போருக்கு வீரர்களைத் தயார்படுத்த இராணுவத்திற்கு 6 அல்லது 7 மாதங்கள் ஆகும். நம்முடைய நாட்டிற்கு தேவையென்றால், அரசியலமைப்பு சட்டம் அனுமதித்தால், நம்மை கேட்டுக்கொண்டால் மூன்றே நாட்களில் ஆர்.எஸ்.எஸ் தொண்டர்களை இராணுவமாகத் தயார்படுத்தி விடுவோம். அதுதான் நம்முடைய திறமை” என்றார்.

இராணுவத்தை ஆர்.எஸ்.எஸ் மையப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தை அன்றே அவர் வெளிப்படுத்தியிருந்தார்.

ஹரித்துவார் மாநாட்டில், முஸ்லீம்களை இனப்படுகொலை செய்துவிட்டு, இந்தியாவை இந்து ராஷ்டிரமாக அறிவிக்க வேண்டும் என்று, காவி கும்பல் அறைகூவல் விடுத்ததையும் நினைவில் கொள்வோம்.

2002 குஜராத் இனப்படுகொலைப் போல, நாடு தழுவிய அளவில் சிறுபான்மை மக்களுக்கு எதிராக இனப்படுகொலையை நடத்த ஆர்.எஸ்.எஸ் இனி முயற்சித்தால் அதனை இராணுவத்தைக் கொண்டே இக்கொடுமை அரங்கேறும் நாள் தொலைவில் இல்லை.

நாடு முழுவதும் புதிதாக 100 இராணுவப் பள்ளிகள் தொடங்கப்படும் என்று, ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கடந்த ஆண்டு அறிவித்திருந்தார். இதன் முதல் கட்டமாக, இந்தியா முழுவதும் புதிதாக 21 இராணுவப் பள்ளிகளைத் தொடங்க ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சகம் கடந்த மார்ச் 27 ஆம் தேதி அன்று, அனுமதியளித்துள்ளது.

இதையெல்லாம் உற்று கவனிக்க வேண்டிய அவசரமும், அவசியமும் உள்ளது. இறுதியாக, பேரா. அருணன் சொல்வது போன்று, “முஸ்லீம்களை ஒடுக்க வேண்டியது, அவர்களிலிருந்து ஒருவரை குடியரசுத் தலைவராக்கி மறைக்க வேண்டியது! தலித்துகளை ஒடுக்க வேண்டியது, அவர்களிலிருந்து ஒருவரை குடியரசுத் தலைவராக்கி மறைக்க வேண்டியது, பழங்குடியினரை ஒடுக்க வேண்டியது, அவர்களிலிருந்து ஒருவரை குடியரசுத் தலைவர் வேட்பாளராக்கி மறைக்க வேண்டியது”.

இன்னும் எத்தனை நாளைக்கு இந்த கபட நாடகத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டுமோ? ■





# அயலகக் கிறித்துவர் தமிழ்ப்பணிகள்

## 5. வீரமாமுனிவர் (8.11.1680 - 4.2.1747)

பேரா. முனைவர் பாக்யமேரி

### வீரமாமுனிவர் (8.11.1680 - 4.2.1747)

வீரமாமுனிவர் எழுதிய சதுரகராதிப்படி "மா" என்பது செல்வம் என்றும் பொருள்படும். முனிவரது இயற்பெயர்களுள் ஒன்றாகிய **"யோசேப்பு"** (Giuseppe = Joseph) என்பதை **"வளன்"** என்று முனிவரே தமிழ்ப் படுத்துவதாலும், "வளம்" (வளன்) என்பதற்கு சதுரகராதி அழகு, வலி, மாட்சிமை என்று பொருள் கூறுவதாலும் "வீரமாமுனிவர்" என்னும் பெயரில் வரும் "மா" என்பது மாட்சிமையைக் காட்டி, வளம் என்பதையும் சுட்டி, முனிவரது இயற்பெயராகிய "யோசேப்பை" குறிக்கலாம். மூல மொழியாகிய எபிரேயத்தில் இப்பெயர் **"யிஹோ ல்ஹோசிஃப்"** (Yihoh Lhosif) என்னும் இரு சொற்களாலானது. அதற்கு **"கடவுள் வளமுறச் செய்க"** என்பது பொருள். இக்காரணம் முன்னிட்டு அவர் "வீரமாமுனிவர்" என்னும் பெயரை ஏற்க "அனுமதி" தந்திருக்கலாம். ஆக, ஒரு பக்கம் இயற்பெயராகவும் மறுபக்கம் காரணப் பெயராகவும் அமைந்த இப்பெயரே, முனிவருக்கு உரிய பெயராக அவர்காலம் தொட்டு இன்றுவரை வழங்கிவருகிறது.

### முனிவர் என்னும் சிறப்புப் பெயர்

தமிழில் முனிவர் என்னும் சிறப்புப் பெயர் **"சிவஞான முனிவர்"** என்னும் சிவ அடியார் ஒருவருக்கு மட்டுமே இருந்தது. அதன் பிறகு தமிழில் புலமை பெற்ற ஓர் இறையடியாருக்கு முனிவர் என்னும் சிறப்புப் பெயர் இருக்கின்றது எனில் அது, வீரமாமுனிவருக்கே சிறப்பாக வழங்கப்பட்டு வருகிறது. இப்பெயர் வீரமாமுனிவர் வாழ்ந்த காலத்திலேயே வழக்கத்திற்கு வந்துவிட்டதைத் தேம்பாவணிப் பாயிரப் பதிகமும் புறவுரையும் சுட்டிக்காட்டுகின்றன.



**மறைமொழி வாயினன் மலிதவத்து இறைவன்**

**நிறைமொழிக் குரவன் நிகரில் கேள்வியன்**

**வீரமா முனிஎன்போன் வியன்தமி ழாக**

என்கிறது தேம்பாவணிப் பதிகம்.

முத்துச்சாமிப் பிள்ளை தரும் தகவல்படி, முனிவர் தேம்பாவணியை 1726 இல் இயற்றினார். தேம்பாவணி உரை 1729 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8 ஆம் நாள் முடிந்ததாக உரை முடிவிலே குறிப்பிடப்படுகிறது. எனவே, 1726 க்குப் பின்னரும் 1729 க்கு முன்னரும் வீரமாமுனிவர் என்ற பெயர் முனிவருக்கு வந்துவிட்டது என முடிவுசெய்யலாம்.

### தெருட்குரு என்னும் சிறப்புப் பெயர்

முனிவருக்குத் "தெருட்குரு" என்றொரு சிறப்புப் பெயரும் இருந்ததாகத் தெரிகிறது. "தெருள்" என்னும் சொல்லுக்கு **"சீரிய அறிவு"** என்று பொருள். வீரமாமுனிவர், சதுரகராதிக்கும் முன்னர் தொன்னூல் விளக்கம் என்னும் நூலினை எழுதினார். இந்நூல் குற்றம் குறைகள் நீக்கப்பட்ட சிறப்பான நூலாக இருந்ததால் கலைவல்லோர் வீரமாமுனிவருக்குத் தெருட்குரு என்னும் சிறப்புப் பெயரினைத் தந்தனர்.

### வீர ஆரிய வேதியன் என்னும் சிறப்புப் பெயர்

வீரமாமுனிவர் சதுரகராதி என்னும் அகராதி ஒன்றினை எழுதியுள்ளார். ஆகவே அவரைத் **"தமிழ் அகராதித் தந்தை"** என்று அழைக்கின்றனர். இந்நூலின் இறுதியில்,

**வீரஆரியன் எனும் வேதியன்**

**தாராய் முடித்த சதுரக ராதியே**

என்னும் செய்யுள் காணப்படுகின்றது. "ஆரியன்" என்பதற்கு அறிவுடையவன், குரு, புலவன்... என சதுரகராதி பொருள் கூறுகிறது. "வீர" என்பது Costanzo (Constant) என்னும் இயற்பெயரின் மொழிபெயர்ப்பு. "வேதியன்" என்பது முனிவர், குரு என்பன போல மறைநூல் ஆசிரியனைச் சுட்டும். "ஆரியன்" என்றால் புலவன். ஆகவே, "வீராரிய வேதியன்" என்பதற்கு "சமய (மறை) தொழில் புரியும் வீரன் என்ற புலவன்" எனப் பொருள் கூறலாம்.

ஆகவே, "வீராரிய வேதியன்" என்ற பெயர் வீரமாமுனிவர் என்பதை வேறு வடிவத்தில் சுட்டுகிறது எனலாம். அன்றியும் சதுரகராதியின் ஒரு பகுதியாகிய தொடையகராதியில் "ஆரியம்" என்பதற்கு 'அழகு' என்று முனிவர் பொருள் கூறுவதோடு, பெயரகராதியில் "வளம்" என்பதற்கு (அழகு) என்றும் பொருள் காண்பதாலும், வீரம் (Costanzo = Constant) என்பதையும் ஆரியம் (Giuseppe = Joseph) என்ற வளனையும் கூட்டி அவர்தம் இயற்பெயரைச் சுட்டுவதாகத் தெரிகிறது என்று **அறிஞர் ச. இராசமாணிக்கம்** கூறுகிறார்.

## திருமதுரைச் செந்தமிழ்த் தேசிகர் என்னும் சிறப்புப் பெயர்

வீரமாமுனிவர் எழுதிப் புதுச்சேரியில் அச்சான **தொன்னூல் விளக்கம்** என்னும் நூலின் முன்பக்கத்தில், "திருமதுரைச் செந்தமிழ்த் தேசிகரும் தைரியநாத சுவாமிகளும் ஆகிய வீரமாமுனிவர் திருவாய் மலர்ந்தருளிய ஐந்திலக்கணத் தொன்னூல் விளக்கம், மூலமும் உரையும்'' எனக் காணப்படுகின்றது. இதில் வருகின்ற "செந்தமிழ்த் தேசிகர்" என்பது வீரமாமுனிவர் மீது பதிப்பாசிரியர் கொண்ட மதிப்பைச் சுட்டுவதாகத் தெரிகிறது.

## இஸ்மத் சந்நியாசி என்னும் சிறப்புப் பெயர்

வீரமாமுனிவர் இந்துஸ்தானி, பாரசீகம் முதலான மொழிகளையும் கற்றிருந்தார். ஆகவே மதுரையை ஆண்டுவந்த சந்தாசாகிபு என்னும் இஸ்லாமிய மன்னன் வீரமாமுனிவரைத் தனக்குத் திவானாக வைத்துக்கொண்டார். வீரமாமுனிவர் மீது மதிப்பும் அன்பும் கொண்ட சந்தாசாகிபு "**தூய முனிவர்**" என்று பொருள்படும் "**இஸ்மத் சந்நியாசி**" என்ற பட்டத்தை வீரமாமுனிவருக்குக் கொடுத்ததாக முத்துச்சாமிப் பிள்ளை அவர்கள், வீரமாமுனிவரின் வரலாற்றில் கூறுகிறார்.

## மலர்களின் தந்தை என்னும் சிறப்புப் பெயர்

தமிழ் இலக்கியத்திலும் இலக்கணத்திலும் தேர்ந்த வீரமாமுனிவர், பூக்கள் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர் என்றும் பூந்தோட்டம் அமைப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார் என்றும் தெரிகிறது. நல்ல பூந்தோட்டம் போட மேல்நாட்டிலிருந்து பூ வித்துக்களை வரவழைத்த போது, அவை நீண்ட பிரயாணத்தால் வீரியத்தை இழந்துவிட்டன என்று வீரமாமுனிவரின் நண்பர் **லூயி நோயேல் தெ பூர்சே** (Louis Noel de Bourses) என்னும் மறைப்பணியாளர் கூறுகிறார். அவரே வீரமாமுனிவரை "**மலர்களின் தந்தை**" என வேடிக்கையாக அழைக்கிறார்.

## தமிழ் மொழியின் தாந்தே என்னும் சிறப்புப் பெயர்

1680 இல் பிறந்த வீரமாமுனிவருக்கு மூன்றாம் நூற்றாண்டுப் பிறப்புவிழா 1980 இல் இத்தாலியில் அவர் பிறந்த ஊராகிய காஸ்திலியோனே தெல்லே ஸ்டிவியரே என்னும் இடத்தில் கொண்டாடப்பட்டது. அப்போது முனிவருக்குச் சிலை நிறுவி, நினைவுப் பதக்கமும் மலரும் வெளியிடப்பட்டன. அவ்விழாவின்போது தம் மண்ணின் மைந்தர் வீரமாமுனிவருக்குத் "**தமிழ் மொழியின் தாந்தே**" (II Dante della lingua Tamil) என்னும் பட்டம் அளித்து மக்கள் சிறப்பித்தார்கள். ஆகவே தமிழ்நாட்டில் வீரமாமுனிவர் என்று அழைக்கப் பெறுவது போல், முனிவர் பிறந்த ஊரில் "**தமிழ் மொழியின் தாந்தே**" என்று அழைக்கப்படுகிறார்.

"**வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு**" எனத் தமிழர் பெருமைப்படுவதுபோல, இத்தாலி நாட்டில் Divina Commedia (தெய்வீக இன்பிலக்கியம்) என்னும் தலைசிறந்த நெடும்பாடலை யாத்த புலவராகிய தாந்தே அலிகியேரி (Dante Alighieri)க்கு இணையாகத் தேம்பாவணி என்னும் தீஞ்சுவைக் காவியத்தையும் பரமார்த்த குருவின் கதையாகிய நகைச்சுவை இலக்கியத்தையும் ஆக்கிய வீரமாமுனிவரைத் தமிழுக்குத் தாம் அளித்தமை பற்றி அவ்வூரார் பெருமைப்படுகின்றனர்.

## வீரமாமுனிவரின் இறப்பு

வீரமாமுனிவரின் வாழ்வையும் பணியையும் விரிவாக ஆய்ந்துள்ள முனைவர் ச. இராசமாணிக்கம் வீரமாமுனிவரின் இறப்புப் பற்றிய செய்தியைக் கீழ்வருமாறு தருகின்றார்:

1742 இல் மதுரைப் பணித்தளம் விட்டுச்சென்ற வீரமாமுனிவர், கடற்கரையில் 1745 வரை பணிபுரிந்தபின், 1746-47 ஆண்டுகளைக் கேரள நாட்டிலுள்ள அம்பலக்காட்டில் அமைந்த குருமடத்தில் செலவழித்து, 1747 ஆம் ஆண்டு பெப்ருவரி நான்காம் நாளில் தமது 67 ஆம் வயதில் உயிர்துறந்தார். **திப்பு சுல்தான் காலத்தில் நடந்த வேதகலாபனையில் பல கிறித்துவ நிறுவனங்கள் இடம் தெரியாமல் அழிந்து போயின.** வீரமாமுனிவரது கல்லறைக்கும் அந்தக் கதி நேர்ந்திருக்கிறது. தமிழுக்கு இவ்வளவு தொண்டு செய்த பெரியார், தமிழ்நாட்டை விட்டுக் கேரள நாடு சென்று செத்ததும், அங்கு அவரை அடக்கம் செய்த கல்லறையும் தெரியாத நிலையில் இருப்பதும், தமிழ் மக்களுக்கு வருத்தமளிக்கும் செய்திகள். நிற்க, சிலர் இவர் **மணப்பாட்டில்** இறந்தார் என்றும், வேறு சிலர் **மணப்பாறையில்** உயிர் துறந்தார் என்றும் கூறுவது வரலாற்றுச் சான்றுக்குப் புறம்பானது. 1746-47 ஆண்டுகளில் கேரள நாட்டு **அம்பலக்காட்டில்** முனிவர் வாழ்ந்தார் என்பதையும், அங்கே மரித்தார் என்பதையும் அக்கால அதிகாரப்பூர்வமான அறிக்கையின் வாயிலாக உறுதியாக அறியலாம் எனத் தெரிவிக்கின்றார்.

■

# போட்டி எண் 11-க்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பா [1] | வ | ம் | ளு | க | ங் | நீ [8] | ஆ [16] | கா [2] | ண |
| ம் | சொ [18] | ச | இ [3] | றை | யா | ட் | சி | ட் | ஆ [10] |
| ழு | ல் | ச் | அ [6] | ன் | பு | ள் | | | |
| வா [24] | ல | ய | இ [20] | அ [19] | ன் | ஆ [23] | மை | ரு | பெ [14] |
| க [15] | ப் | றை | ர | வ | அ [26] | உ [7] | ல | க | த் |
| ட | ப | இ [22] | க் | ரோ | மா [5] | ட் | சி | யி | ல் |
| வு | டா | ம் | க | டு | வோ | ணி | து [12] | | கா |
| ளு | த | நா [25] | ம் | | ப [4] | ரி | ந் | து | ங் |
| க் | தை | த் | ர் | வா [11] | தை | ந் | த [13] | ய | ழ |
| கு | க் | நோ | ர் | தி | எ [9] | | | தூ [17] | மு [21] |

**இடமிருந்து வலம்:** 1. பாவம் - உரோ 6:14 / 2. காண - உரோ 1:11 / 3. இறையாட்சி - உரோ 14:17 / 4. பரிந்து - உரோ 8:34 / 5. மாட்சியில் - உரோ 5:2 / 6. அன்பு - உரோ 13:9 / 7. உலகத் - உரோ 5:12

**வலமிருந்து இடம்:** 8. நீங்களும் - உரோ 15:7 / 9. எதிர் நோக்கு - உரோ 8:24 / 10. ஆட்சி - உரோ 6:14 / 11. வார்த்தை - உரோ 10:8 / 12. துணிவோடு - உரோ 15:15 / 13. தந்தை - உரோ 4:16 / 14. பெருமை - உரோ 4:2

**மேலிருந்து கீழ்:** 15. கடவுளுக்கு - உரோ 3:28 / 16. ஆசி - உரோ 12:14 / 18. சொல்லப்படாததை - உரோ 15:21 / 19. அவரோடு - உரோ 6:8 / 20. இரக்கம் - உரோ 9:18

**கீழிருந்து மேல்:** 17. தூயது - உரோ 7:12 / 21. முழங்கால் - உரோ 14:11 / 22. இறையச்சம் - உரோ 3:16 / 23. ஆள் - உரோ 2:11 / 24. வாழும் - உரோ 14:14 / 25. நாம் - உரோ 12:5 / 26. அன்பு - உரோ 12:9

## குறுக்கெழுத்துப் போட்டி - 11 இல் வெற்றி பெற்றவர்கள்

**முதல் பரிசு:** 1. ஜெபமாலை மேரி செபாஸ்டின், சேலம் 2. B. இருதயராஜ், தஞ்சாவூர்

**இரண்டாம் பரிசு:** 1. A. சவரிமுத்து, கரூர், 2. A. லில்லி கிளாரா மேரி, சிவகங்கை 3. C. பர்த்தலோமியோ, தர்மபுரி 4. A. உபகாரசாமி, விழுப்புரம்

**மூன்றாம் பரிசு:** 1. M.S. பாஸ்டின், மதுரை 2. L. பிராங் ரோஸ்வெல்ட், தூத்துக்குடி 3. K. சௌமியா, மாதவரம், 4. Sr. மேக்கரிஸ் பெத்தானியா, தஞ்சாவூர்

## சரியான விடை எழுதியவர்கள் - பரிசை விட உங்களின் பங்கேற்பு மிகவும் பாராட்டுக்குரியது.

Sr. செல்வியா அமலா, கோக்குடி / செல்வி. ரமணிதாமஸ், மயிலாப்பூர் / R. எல்பீன் ரீட்டா, புதுச்சேரி / R. எலிசா தனராஜ், தென்காசி / G. பூபாலன், மதுரை / M. அமலோற்பவம், திண்டுக்கல் / M. J. சிலுவை ராஜேஸ்வரி, நெல்லை / ச. மெர்சி கிரேஸ், வேலூர் / Sr. பௌலின் சூசை, குளூனி கான்வென்ட் சேலம் / மேரி மெட்டில்டா, சென்னை / தனம் பெர்னான்டோ, சென்னை / லில்லி ஓசன்னா, சிவகங்கை / ஜீலி பிரான்சிஸ், திருவள்ளூர் / சின்னப்பன், திருச்சி / சுகந்தி, கன்னியாகுமரி / P. அல்போன்ஸ் ராஜேந்திரன், திருச்செந்தூர் / J. ஜோஸ்பின் மேரி ஹெய்லி, கோவை / A. அந்தோனி ஜோஸ், பம்மல் / செ. அந்தோணிராஜ் ஜாஸ்மின், சேலம் / T. S. மணி, தென்காசி / R. S. இரபேல், மதுரை / S. சந்தியாகு, சேலம் / Sr. M.

அருள்சீலி, கன்னியாகுமரி / C. ஸ்டெல்லா மேரி, கன்னியாகுமரி / ஆரோக்கியமேரி குமுதா, திருச்சி / S. அந்தோணி ஸ்டீபன், சென்னை / அ. ஜோஸ்பின் மேரி, விக்கிரமசிங்கபுரம் / C. மேரி ராணி, பம்மல் / R. ஆரோக்கியசாமி, திருச்சி / A. லியோ பீட்டர், திருப்பூர் / R. அல்போன்சா, திருநெல்வேலி / M. தாமஸ் மரியசந்திரன், பாண்டிச்சேரி / J. ஜஸ்டின் செல்வி, சென்னை / Sr. சகாய கிளாரா, வேளாங்கண்ணி / D. வளன் அரசு, கோவில்பட்டி / J. கிளாரா, மந்தைவெளி / Sr. புஷ்பராணி, கன்னியாகுமரி / ஜோஸ்பின் ஆக்னஸ், கோயம்புத்தூர் / A. அந்தோனி, திருச்சி / தனசாமி, திருச்சி / V. ஜோஸ்பின், புதுச்சேரி / S. ஜான் மரியதாஸ், தஞ்சாவூர் / S. லியோ, குடந்தை / Sr. அந்தோனியம்மாள், கொம்மடிகோட்டை / A. ஸ்டீபன் இருதயராஜ், திருச்சி / A. குழந்தைசாமி, ஈரோடு / அமலதாசன், ஊரப்பாக்கம் / Sr. சீரோன், நெல்லை / G. ஃப்ளோரா, பூந்தமல்லி / எஸ். வேளாங்கண்ணி, காஞ்சிபுரம் / Sr. செபஸ்டி, விழுப்புரம் / Sr. மைக்கேல் சம்மனசு, திருவாரூர் / Sr. இன்ஃபென்ட்டா மேரி, கன்னியாகுமரி / Sr. கேத்ரீன், மதுரை / A. நிக்கோலஸ், திருச்சி / Sr. R. ஜெயமணி, நித்மலா நிக்கேத்தன் மதுரை / S. டெல்பின் அகஸ்டின், வீரவநல்லூர் / S. செல்லம்மாள், தூத்துக்குடி / S. அந்தோனிசாமி, சூரமங்கலம் / Sr. ரோசரி மேரி, வீரவநல்லூர் / Sr. அமலோற்பவமேரி, கள்ளக்குறிச்சி / Sr. லில்லி இசபெல்லா மேரி, மதுரை / M. ஜான் கிராஸ், சேலம் / C. ஆரோக்கியசாமி, திருச்சி / G. அந்தோனி ரெஜிஸ், முடிச்சூர் / ம. ஜோஸ்பின் மேரி பாப்பு, தேனி / G. சார்லஸ், புதுச்சேரி / Sr. ரால்ஃப், Sr. கிளாடியஸ், Sr. நேசபாய், ஆழ்வார்பேட்டை சென்னை / Sr. ரூபெல்லா மேரி, நெல்லை / Sr. இரஞ்சிதம், மதுரை / T. சோபியா பீட்டர், தூத்துக்குடி / P. எமிலி, தஞ்சாவூர் / V. மரிய லீமா ரோஸ், நெல்லை / S. சாமி ராஜ், தஞ்சாவூர் / S. டென்சன், சாத்தான்குளம்/ T. ஸ்டெல்லா கிறிஸ்டஸ், கொடுங்கையூர், சென்னை / R. சவரிமுத்து, சிவகங்கை / Sr. மேரி வயோலா, திண்டுக்கல் / Sr. மேரி அல்போன்சா, கன்னியாகுமரி / S. சூசைஅருள், துரைப்பாக்கம், சென்னை / M. மேரி அருள்மொழி மனோகரன், சிவகாசி கிழக்கு / K. ஜான்மரிய வியான்னி, தர்மபுரி / S. ஆப்ரகாம், சேலம் / V. பானுமதி, மதுரை / சாலமோன் தனபாக்கியம், திருச்சி / Sr. நேசம், பழங்காநந்தம், மதுரை / S.ரோசாலி மேரி, கடலூர் / R. சின்னப்பன், ஈரோடு / S. அமல்ராஜ், கயத்தாறு / Sr. பாத்திமா, வேலூர் / சேசம்மாள், சென்னை / வசந்தி நெல்சன், நாகர்கோவில் / பமிலா அருள்செல்வன், காலடிப்பேட்டை, சென்னை / S. ஆரோக்கியமேரி, ஜெயங்கொண்டம் / எஸ். ஹென்றிதாஸ், கடலூர் மாவட்டம் / A. ப்ளோரா, முகப்பேர், சென்னை / R. ஆரோக்கியமேரி, திருச்சி / M.A. சாந்தா ஆரோக்கியசாமி, சிவகங்கை / A. மார்த்தாள்மேரி, இராயப்பன்பட்டி / A. டேவிட் ஜான்தாஸ், மாதவரம், சென்னை / புஷ்பா கெய்சர், தூத்துக்குடி / Sr. அப்போலின், மதுரை / I. பீட்டர்செல்வராஜ், மதுரை / A. விக்டோரியா, கோவை / J. மில்டர் தாமஸ் பிரான்சிஸ், கன்னியாகுமரி / A. மைக்கேல், தஞ்சாவூர் / Bro. ச. தஸ்நேவிஸ்ராஜ், புதுக்கோட்டை / Y. அற்புதசீலி, திண்டுக்கல் / Y. ஜூடித் பெட்ரிஷியா, கொட்டிவாக்கம், சென்னை/ Sr. லில்லி தாமஸ், திருச்சி / Y. அமலி புஷ்பம், ஈரோடு / K. லூர்துராஜன், தி.மலை / A.N.S. பாத்திமா, திருச்சி / R. ராஜமாணிக்கம், திருச்சி / அந்தோனி மரியராஜ், வெங்கமேடு / M. ரெலின் ஜோசப், இராமநாதபுரம் / A. அருள் மைக்கேல், கோயம்புத்தூர் / அ. கேத்ரீன், திண்டுக்கல் / பெ. ஜெரால்டு ராஜேஷ்,பட்டாபிராம், சென்னை / பி. அனஸ்தாசி, அரியலூர் / ராஜம் காட்வின், கன்னியாகுமரி / Sr. விக்டோரியா, திருச்சி / Sr. நிர்மலா, பஞ்சம்பட்டி / A.M ஆரோக்கிய ராணி, அழகாபுரம், சேலம் / A. நிர்மலா லாரன்ஸ், கோவைபுதூர் / வென்சி பெலிக்ஸ், முகப்பேர், சென்னை / I. சேவியர், தஞ்சாவூர் / I. ஸ்டெல்லா, தஞ்சாவூர் / Sr. தெரசிட்டா, அருள் இல்லம், தென்காசி / K. மேரி கிளாரா, விழுப்புரம் / Sr. செசீலியா திபூர்சியஸ், பவானி, ஈரோடு / கலைமணி தாமஸ், தூத்துக்குடி / ஜெசிந்தா பிரிட்டோ, சென்னை / R. ஞானபாய் செல்வப்பிரகாசி, தென்காசி / மரியஜான் டோமினிக், சென்னை / S. ஏஞ்சலா, ஈரோடு / A . ஆரோக்கிய அலெக்ஸ், தென்காசி / சகோ. எய்டன், திருச்சி / S. சேவியர் ரோச், ராஜகீழ்ப்பாக்கம், சென்னை / K.S. ஜேசுதாஸ், கிருஷ்ணகிரி / நோஸ்மாண்ட், மதுரை / J. ததேயுஸ் கரோலின், திருப்பூர் / G.S. பாத்திமா, திருச்சி / Sr. பெர்டீனாமேரி, ,பாண்டிச்சேரி / Sr. அமலா, சத்தியமங்களம் / மேரி கிறிஸ்டினாள், ஜெயங்கொண்டம் / S. நேவிஸ் திமோத்தா, இராமநாதபுரம் / அ. சவரியம்மாள், ஜம்புரோபுரம், மதுரை / Sr. வெரோனிக்கம், விழுப்புரம் / S. சேவியர் மணி, கன்னியாகுமரி / Sr. செலின் தெரஸ், திண்டுக்கல் / L. ஆரோக்கியமேரி, பள்ளபாளையம் / R. ஜஸ்டின், திருச்சி / M. ஜோசப், போத்தனூர் / ரோஸ்லெட்மேரி, வில்லிவாக்கம்,சென்னை / P. விஜயகுமார், புதுச்சேரி / Sr. செல்வராணி, செய்யூர், காஞ்சிபுரம் / இ. செசிலி ரோஸ், புதுக்கோட்டை / C.M.A.M. பிரகாசம், திருவில்லிபுத்தூர் / G. பிரகாசி, திருச்சி / R. ஸ்தனிஸ்லாஸ், திருவாரூர் / A. வின்சென்ட், மேலப்புதூர், திருச்சி / சுவாமிநாதன், திருநெல்வேலி / எலிசபெத் மேரி, தூத்துக்குடி / J. இஸபெல்லா, தஞ்சாவூர் / S. அருளானந்தம், தென்காசி / Y. சோபினி, வேளச்சேரி சென்னை / J. ஆன்டோநெட், திருச்சி / A. மரியசெல்வம், வானகரம், சென்னை.



# புதிய மறைக்கல்விப் பாடத்திட்டம்-3 ஒரு சிறப்புப் பார்வை

அருள்பணி. **ஜார்ஜ் சின்னப்பன் ச.ச**

தமிழக ஆயர் பேரவையின் மறைக்கல்விப் பணிக்குழு

முப்பணி மையம், திண்டிவனம்

**முன்னுரை**

பல ஆண்டுகளாக தமிழகத் திரு அவையில் பயன்படுத்தப்பட்ட பழைய மறைக்கல்விப் பாடத்திட்டம், இந்தியத் திரு அவையிலேயே பலரும் பாராட்டும் மிகச்சிறந்த பாடத்திட்டம் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. மனித மைய இறையியலை அனைவரும் புரிந்துகொள்ளும் விதத்தில், இறைவார்த்தையின் ஒளியில் வழங்கப்பட்ட இப்பாடத்திட்டம், இன்று இந்தியாவின் பல மறைமாவட்டங்களில், அவரவர் தாய் மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு, கற்பிக்கப்பட்டு வருவது தமிழகத் திரு அவைக்குப் பெருமை சேர்க்கும் விடயமாகும். அப்படிப்பட்ட தரமான, அற்புதமான மறைக்கல்வியை மாற்றத்தான் வேண்டுமா? என்ற கேள்வி எழாமல் இல்லை. ஆனால், அதே சமயம் மாறிவரும் ஆன்மீக, உளவியல், சமூக, பொருளாதார, அரசியல், பண்பாடு, பன்முகத்தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளும்போது, புதிய ஒருங்கிணைந்த மறைக்கல்விப் பாடத்திட்டம் தவிர்க்க முடியாத ஒன்றாக அமைவதில் வியப்பொன்றுமில்லை.

புதிய மறைக்கல்விப் பாடத்திட்டத்தில் மாற்றம் பெறுவது புதிய வழிமுறைகளும், அணுகுமுறைகளுமேயொழிய, மறைக்கல்வியின் கருப்பொருளாகிய இயேசு கிறிஸ்து அல்ல; அவர் “நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்.” ஆகவே, இயேசு கிறிஸ்து அனுபவிக்கக்கூடிய, வாழக்கூடிய, அறிவிக்கக்கூடிய வழிமுறைகளையும், எடுத்துக்காட்டாக இன்றைய ஊடகத் தலைமுறைக்கு இயேசுவை ஊடகம் வழியாக அறிவிப்பது காலத்தின் தேவை மட்டுமல்ல; கட்டாயமும் கூட.

## 1. புதிய பாடத்திட்டத்திற்காக ஆய்வுப்பணி

புதிய மறைக்கல்விப் பாடத்திட்டம் என்பது ஒரு கனவுத்திட்ட அளவில் இருந்தபோது,

1. எப்படித் தொடங்குவது?
2. எங்கே தொடங்குவது?
3. எப்படிச் செயல்படுத்துவது?
4. யாரை வைத்து தொடங்குவது?
5. என்ன முறையைப் பயன்படுத்துவது?
6. இலக்கு மக்களாக யாரைத் தேர்ந்தெடுப்பது?
7. துணைக்கருவிகளை எவ்விதம் தயாரிப்பது?
8. பயமற்ற தேர்வு முறையை எவ்வாறு உருவாக்குவது?
9. ஊடக மறைக்கல்வியாக எப்படி மாற்றுவது?
10. புதிய பாடத்திட்டத்தை மகிழ்வான அனுபவமாக எவ்வாறு அளிப்பது?
11. புதியப் பாடத்திட்டம் யாருக்கு?
12. ஆசிரியர்களுக்கா? பெற்றோருக்கா? மாணவர்களுக்கா? அல்லது மூவருக்குமா?

என்ற கேள்விகளின் பட்டியல் சுழன்றடித்தது. புதிய மறைக்கல்வி பாடத்திட்டம் என்ற கனவு திட்டத்தை முன்னெடுக்க, தமிழக மறைக்கல்விப் பணிக்குழு மிகவும் கவனத்தோடும், அச்சத்தோடும், அக்கறையோடும் மேற்கொண்ட ஆரம்பக்கட்ட ஆய்வுப்பணிகள் ஏராளம். ஆகவே, புதிய மறைக்கல்விப் பாடத்திட்டத்தை முன்னெடுக்க, சம்பந்தப்பட்ட மறைக்கல்வி ஆசிரியர், பெற்றோர், மாணவர்களின் கருத்துகளையும், பரிந்துரைகளையும் கேட்க, நாற்பது வினாக்கள் அடங்கிய 20,000 மறைக்கல்வி வினாத்தொகுப்புகளைத் தமிழகம் முழுக்க அனுப்பினோம். அவர்கள் அனுப்பிய விடைகளைத் தொகுத்து, அவர்களின் கருத்துகள், எதிர்பார்ப்புகள், ஏக்கங்கள், பரிந்துரைகள் என்று அனைத்தையும் ஆவணப்படுத்தினோம். ஆயிரக்கணக்கில் வந்து குவிந்த அவர்களின் அருமையான, தரமான பரிந்துரைகளை அடிப்படையாக வைத்து, மறைக்கல்வி மாதிரியையும் (Catechetical Model), கற்பிக்கும் முறையையும் (Catechetical Methodology) உருவாக்கினோம். இதனடிப்படையிலே, இப்பெரும்

முயற்சிக்கு இலக்குக்கூற்று (Vision Statement), பணிக்கூற்று (Mission Statement), நோக்கம் (Objectives), செயல்திட்டம் (Lines of Action) என்பதை வரையறை செய்தோம்.

## 2. புதிய மறைக்கல்விப் பாடத்தின் பிரிவுகள்

ஆசிரியர்களின் பரிந்துரைகளுக்கேற்ப, ஒருங்கிணைந்த மறைக்கல்வி மாதிரியை உருவாக்கிய பின்பு, அதைக் கற்பிக்கும் வழிமுறையை மிகக் கவனமாக உருவாக்கினோம். அதனடிப்படையில், முதல் ஐந்து வகுப்புகளுக்கானப் பாடங்களைத் தெரிவு செய்து அதனை,

1. மகிழ்வான மறைக்கல்வி
2. விவிலிய மறைக்கல்வி
3. கத்தோலிக்கத் திரு அவையின் மறைக்கல்வி
4. அனுபவ மறைக்கல்வி
5. தியானிக்கும் மறைக்கல்வி
6. கலைவழி மறைக்கல்வி
7. செயல்வழி மறைக்கல்வி
8. ஊடகவழி மறைக்கல்வி
9. வாழ்வாகும் மறைக்கல்வி
10. நம்பிக்கை வளர் மறைக்கல்வி
11. அருளடையாள மறைக்கல்வி

என்று பதினொரு பிரிவுகளாகப் பிரித்தோம்.

## 3. புதிய மறைக்கல்விப் பாடத்திட்டத்தில் கொட்டிக்கிடக்கும் முத்துக்கள்

மேற்கண்ட பதினொரு பிரிவுகளும் மறைக்கல்வி அனுபவத்தை அள்ளிக்கொடுக்கும் அட்சயப் பாத்திரம் என்றால், அப்பிரிவுகளில் கொட்டிக்கிடக்கும் மறைக்கல்வி முத்துக்கள் ஏராளம்! ஏராளம்!

1. சிறு வயது மாணவர்களுக்கான தியான முறை.
2. இதயத்திலிருந்து செபிக்கும் கற்றல் கலை.
3. ஆடிப்பாடி மகிழச் சுவையான மறைக்கல்விப் பாடல்.
4. மனதைக் கவரும் பழைய ஏற்பாட்டுக் கதைகள்.
5. பழைய ஏற்பாட்டு நிகழ்வுகளோடு இயேசுவைத் தொடர்புபடுத்தும் புதிய ஏற்பாட்டு நிகழ்வுகள்.
6. மாணவர்களின் இதயங்களைத் தொடும் புனிதர்களின் வாழ்க்கை வரலாறு.
7. திரு அவை மீது அன்பு கொள்ள அதனை வழிநடத்திய அற்புத திருத்தந்தையர்களின் வாழ்க்கை வரலாறு.
8. பாட மையச்சிந்தனையை வலுப்படுத்தும், எளிமைப்படுத்தப்பட்ட இரண்டாம் வத்திக்கான் சங்க சிந்தனை முத்துக்கள்.
9. ஆசிரியர், பெற்றோர், மாணவர் எளிதில் புரிந்துகொள்ள கத்தோலிக்கத் திரு அவையின் மறைக்கல்விப் படிப்பினைகள்.
10. மாணவர்கள் எளிதில் புரிந்துகொள்ள திருத்தந்தையர்களின் திருமடல் சிந்தனைகள்.
11. மையச்சிந்தனையை விட்டு விலகாத சமூக மாமனிதர்களின் சவாலான வாழ்க்கை நிகழ்வுகள்.
12. பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு, புனிதர்கள், திருத்தந்தையர், கத்தோலிக்கத் திரு அவையின் படிப்பினைகள், சமூக மாமனிதர்கள் ஆகியோர் ஏற்படுத்தும் சவால்களும், அவைக்கு பதிலளிக்கும் மாணவர்களின் தன்னார்வு வினாக்களும்.
13. படித்தவுடன் இதயங்களை ஊடுருவும் விவிலிய இறைவார்த்தைகள்.
14. இறையுணர்வை ஏற்படுத்தும் அடிப்படை கத்தோலிக்க செபங்கள்.
15. பாடச்சிந்தனையை ஆழப்படுத்தும் புனிதர் பொன்மொழிகள்.
16. அவற்றிக்கு இணையான மாமனிதர் நன்மொழிகள்.
17. சமய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தும் பிறமத பொன்மொழிகள்.
18. வகுப்புச் செயல்பாட்டை ஊக்கப்படுத்தும் இதயம் தொடும் கதைகள்.
19. வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் எளிய, சிறிய நாடகங்கள்.
20. விளையாடி மகிழ பொருளுள்ள குழு விளையாட்டுகள்.
21. வழிபாட்டை வாழ்வாக்கும் மாணவர்களுக்கான திருவழிபாட்டு பாடல்கள்.
22. கலைவழிமறைக்கல்வியைத்திறனாய்வுசெய்ய உதவும் நடைமுறை கலந்துரையாடல்கள்.
23. கற்றதைச் செயல்படுத்த வீடு, பங்கு, பள்ளி, சமூகம் என்ற நான்கு தளங்கள்.
24. இத்தளங்களில் செயல்படுத்த வேண்டிய எளிய, சிறிய, பொருளுள்ள செயல்வழி தீர்மானங்கள்.
25. தீர்மானங்களைச் செயல்படுத்தியே தீருவோம் என்ற மாணவர் உறுதிமொழி.
26. தீர்மானங்கள் நிறைவேற்ற உதவும் பெற்றோர் பங்கேற்பு.
27. தீர்மானங்களை நிறைவேற்றினார்களா, இல்லையா என்பதைப் பற்றிய பெற்றோரின் வழிகாட்டுதலும், பரிந்துரைகளும்.
28. மாணவர்களின் கற்றல் திறனை அதிகரிக்க விவிலியத் திரைப்படங்கள், புனிதர் குறும்படங்கள், மறைக்கல்வி காணொளிகள்.
29. ஒட்டுமொத்தப் பாடத்தைப் பற்றியும், நான்கு

தளங்களில் செய்த செயல்களைப் பற்றியும் மாணவர்களின் அனுபவப் பகிர்வு.

30. ஒட்டுமொத்த பாடத்தைத் திருப்பவும், ஆய்வு செய்ய, அழகான, எளிய பாடச்சுருக்கம் கேள்வி - பதில் வடிவில்.

31. மறைக்கல்வி கற்றலை ஆழப்படுத்த புத்தகச் செயல்பாடுகள் மிகவும் வித்தியாசமான முறையில்.

32. ஊடக தலைமுறையினராகிய நமது பிள்ளைகள் ஆர்வத்தோடு பங்கு கொள்ள மறைக்கல்வி செயலிவழி பயிற்சிகள்.

33. மாணவர் கற்றல் திறனை ஆய்வுச் செய்ய தேர்வு பயமற்ற திறனாய்வுப் பகுதிகள்.

34. நம்பிக்கை என்பது வளரக்கூடிய ஒன்று. ஆகவேதான், அதை நம்பிக்கை வளர்க் கல்வி என்று அழைக்கிறோம். நம்பிக்கை வளர்க் கல்வியைத் திறனாய்வு செய்யும் முயற்சியாக,

* அருள்வாழ்வுத் திறனாய்வு
* அருளடையாளத் திறனாய்வு
* ஆழ்ந்துணர் திறனாய்வு
* இன்செயல் திறனாய்வு
* ஈடுபாட்டுத் திறனாய்வு
* ஊடகவழித் திறனாய்வு
* பெற்றோர் பங்கேற்புத் திறனாய்வு என்று ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வளவுதானா? இன்னும் பட்டியல் நீளுமா? என்ற கேள்விக்குப் பதில், பட்டியல் இன்னும் நீண்டு கொண்டே செல்லும். இவ்வளவையும் மாணவர்கள் புரிந்துகொள்ள முடியுமா? கண்டிப்பாக புரிந்துகொள்ள முடியும். ஏனென்றால், அனைத்தும் அவர்கள் மொழியில் (ஊடக மொழியில்) தான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## 4. இலக்கு மக்கள்

சிறுபிள்ளைகளுக்கு இவ்வளவு பெரிய புத்தகமா என்ற கேள்வி எழுவது நியாயமானதே. ஆனால், இப்புத்தகம் தயாரிக்கப்பட்டதன் நோக்கத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இத்தரமான புதிய மறைக்கல்விப் பாடப்புத்தகங்கள், ஆசிரியர்கள் மறைக்கல்வியைத் தெளிவாகக் கற்றுக்கொள்ளவும், ஆசிரியர்களை மையப்படுத்தியும், அவர்களை முதல் இலக்காக கொண்டும் எழுதப்பட்டது. மறைக்கல்வி போதிக்கும் இறைநம்பிக்கையை ஆசிரியர் மட்டுமல்ல; பெற்றோரும் கற்று அதனை வாழ்ந்து காட்டும் சாட்சிகளாக விளங்க, பெற்றோர்களை இரண்டாவது இலக்காக வைத்தே இப்புத்தகம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இப்படியாக ஆசிரியரும், பெற்றோரும் மறைக்கல்வி வழியாகத் தாங்கள் பெற்றுக்கொண்ட இறைநம்பிக்கையை, மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும் மிகப்பெரிய பொறுப்பை பெற்றிருக்கின்றனர். ஆசிரியர்கள், பெற்றோர்களுக்கு அடுத்து, மூன்றாவது இலக்காகவே மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். சுருங்கக்கூறின், இப்புதிய மறைக்கல்விப் பாடத்திட்டம் ஆசிரியர், பெற்றோர், மாணவர் என்ற மூன்று தரப்பினருக்காகவே உருவாக்கப்பட்டிருக்கின்றது.

## 5. புதிய மறைக்கல்விப் பாடத்திட்டத்தின் சிறப்புகள்

1. பாடங்கள் என்ற பழைய நிலையிலிருந்து அன்பு என்ற புதிய முறை உருவாக்கப்பட்டிருக்கிறது.
2. அதிகப் பாடங்கள் என்ற சுமையிலிருந்து, எட்டு பாடங்களே என்ற எளிய முறை அறிமுகம்.
3. கண்ணைக் கவரும் வண்ணப்படங்கள், பெரிய எழுத்துகள், தரமான அட்டை முகப்புகள், காகிதங்கள்.
4. அமர்வுகளை நிரந்தரமாக நடத்தக் கால அவகாசம்
5. பயத்தை உருவாக்கும் தேர்வு முறையை அகற்றி, நம்பிக்கையை வளர்க்கும் திறனாய்வுப் பகுதி அறிமுகம்.
6. மறைக்கல்வியைச் சுமையாக மாற்றாமல், சுகமான அனுபவமாக மாற்றும் அற்புதப் பயிற்சிகள்.
7. மாணவர்கள் மகிழ்ந்து கற்க அருமையான ஊடகக் காணொளிகள், திரைப்படங்கள், குறும்படங்கள்.
8. புதிய முயற்சியாக மறைக்கல்வி செயலியும் (I-Cat-App), அதன் பயிற்சிகளும்.
9. மாதம் ஒரு பாடம் என்கின்ற எளிய முறை.

ஒட்டுமொத்தமாக, ஒவ்வொரு அமர்வும் ஒரு புதிய அனுபவமாக மாற்ற எடுக்கப்பட்டிருக்கும் முயற்சிகள் அனைத்தும் இப்பாடத்திட்டத்தின் சிறப்பு முயற்சிகளே ஆகும்.

## 6. முடிவுரை

ஒருங்கிணைந்த புதிய மறைக்கல்விப் பாடத்திட்டம் தமிழகத் திரு அவைக்குக் கடவுள் வழங்கியிருக்கும் சிறந்த கொடை என்றால் அது மிகையாகாது. இம்முயற்சி வெறும் அறிவோடு நின்றுவிடாமல், அனுபவமாக மாற வேண்டும். ஆகவே, ஆசிரியர், பெற்றோர் இருவரும் கைகோர்த்து, மாணவர்களின் இறைநம்பிக்கையை வளர்க்கும் பணியில் இணைந்து செயல்படுவது காலத்தின் கட்டாயம். இதைச் சுமையாகக் கருதாமல், நாளைய சமூகம் வளம் பெற, நலம் பெற, சுகமான இறையனுபவமாகக் கருதி இதைச் செயல்படுத்துவது நமது முதன்மையானப் பணியாகும். ■



# தமிழ் தெரியாத் தமிழ் குழந்தைகள்

முனைவர் **இ. ஜெ. சுந்தர்**

"எல்லாத் தடங்கல்களையும், கடந்து தமிழ் என்றும் வாழும்" என்று கூறுவது பழைய பொய்யாகும். இதுவரை தமிழ் பல இன்னல்களைக் கடந்து தன்னை நிலைநிறுத்திக் கொண்டாலும், இன்றுள்ள சூழலில் தமிழை அழியவிடாமல் காப்பது சவாலுக்குரியதாகவே உள்ளது.

இன்று உலகமயமாக்கலின் விளைவாக இன்னும் 100 ஆண்டுகளில் 99% மொழிகள் அழியுமென்றும், ஆண்டுக்கு 10 மொழிகள் அழிந்து வருகின்றன என்றும், ஆய்வுகள் தெளிவாகக் குறிப்பிடுகின்றன.

அழியும் இந்திய மொழிகளாக 42 மொழிகளை யுனெஸ்கோ பட்டியலிட்டுள்ளது. (காண். தினமணி 19.02.2018 - இந்தியாவில் அழியும் நிலையில் 40 மொழிகள்) தமிழ் செம்மொழி என்பதாலோ, கீழடியில் தமிழின் பழமையை மெய்ப்பிப்பதாலோ, புர்ஜ் கலிபாவில் தமிழை ஒளிர விடுவதாலோ தமிழ் உணர்வாளர்கள் மகிழலாம். ஆனால், அழிவிலிருந்து தமிழைக் காப்பாற்ற இவை துணை நிற்கா.

தமிழுக்கு இந்தியாலும், ஆங்கிலத்தாலும் நேரும் ஆபத்தைவிட பெரும் ஆபத்து தமிழர்களாலேயே நிகழ்ந்து கொண்டிருக்கிறது. எதிர்காலக் குழந்தைகள் தமிழ் பேசவும், எழுதவும் முடியாதவாறு ஓர் ஆபத்தான கல்விச்சூழல் தடுக்க முடியாதபடி வளர்ந்து கொண்டிருக்கிறது.

ஆங்கில மோகம் கொண்ட தமிழ்ப் பெற்றோர்களின் பலவீனத்தைப் பயன்படுத்திக்கொண்டு செழிக்கும் மழலையர் பள்ளிகள், மெட்ரிகுலேஷன் பள்ளிகள், சிபிஎஸ்சி பள்ளிகள் முதலியன தமிழ்க் குழந்தைகள் மீது ஓர் அமைதியான பண்பாட்டுப் படையெடுப்பை நிகழ்த்தி வருகின்றன.

நூறாண்டுகளாக மறைமலையடிகள், திரு.வி.க. பாரதியார், பாரதிதாசன், பாவாணர், பெருஞ்சித்திரனார் உள்ளிட்ட எண்ணற்ற தமிழ்ச் சான்றோர்களும், தமிழுக்காக இன்னுயிர்நீத்த நூற்றுக்கணக்கான தியாகிகளும், அரும்பாடுபட்டு வளர்த்த தமிழுணர்வை இப்பள்ளிகள் தவிடுபொடியாக்கி வருகின்றன. ஏறத்தாழ ஒரு கோடி மாணவர்களைத் தமிழ் படிக்கவிடாமலோ அல்லது தமிழைப் புறந்தள்ளி வைத்தோ தமிழ் மண்ணிலேயே தமிழர்களை அந்நியர்களாக்கி வருகின்றன.

தமிழ் மண்ணில் பள்ளி நடத்தும் இவர்கள், தமிழில் பேசினால் மாணவர்களுக்கு அபராதம் விதிப்பது கொடுமையிலும் கொடுமை. சில ஆண்டுகளுக்கு முன்னர் சென்னை நகரப்பள்ளியொன்றில் தமிழில் பேசியதற்காக மாணவர்களைக் குப்பை பொறுக்கச் செய்ததும், அதனை மேற்பார்வை செய்ய தமிழாசிரியர்களை நியமித்து சிறமைப்படுத்தும் தமிழ் உணர்வாளர்கள் நெஞ்சில் வேல்பாய்ச்சிப் போராட வைத்தன. போராட்டத்திற்குப் பணிந்து, திருந்தியது போலப் போக்குக்காட்டின இப்பள்ளிகள். ஆனால், இன்று இதுபோன்ற நிகழ்வுகள் மேலும் தீவிரமடைந்துள்ளன.

"என் மகனுக்குத் தமிழ் தெரியாது. ஆனால், ஆங்கிலமும், இந்தியும் சரளமாகப் பேசுவான்" என்று பெருமையடித்துக்கொள்கிற பெற்றோர்களால் விளைந்த கொடுமை இது. தாழ்வு மனப்பான்மையின் உச்சத்தில் உள்ள கிராமப்புற மக்களும் தங்கள் பிள்ளைகளை வலுக்கட்டாயமாக

ஆங்கிலப் பள்ளிகளில் சேர்த்து, அடுத்த தலைமுறையை "மம்மி டாடி" கலாச்சாரத்தில் ஆழ்த்திவரும் அவலத்தின் விளைவு இது. அநாகரியத்தை நாகரிகமாகக் கருதுவோரின் இந்த அறியாமையை வைத்து வணிகம் நடத்துகின்றனர் இந்தக் கல்வி வணிகர்கள்.

தமிழறிஞர்களின் இடையறாப் போராட்டத்தின் விளைவாக அரசு 10 ஆம் வகுப்பு வரை தமிழ் படிப்பதைக் கட்டாயமாக்கினாலும், இதிலிருந்து தப்பிக்கக் கல்வி வணிகர்கள் சிபிஎஸ்சி பள்ளிகளை உருவாக்கி வருகின்றனர். எனவே, தனியார் மெட்ரிக் பள்ளிகளின் எண்ணிக்கையைவிட சிபிஎஸ்சி பள்ளிகள் புற்றீசல்கள் போலப் பெருகி வருகின்றன.



2011 இல் வெறும் 29 ஆக இருந்த சிபிஎஸ்சி பள்ளிகள் இன்று 1417 ஆக வளர்ந்துள்ளன.

சென்னையில் மட்டும் 219 பள்ளிகள் உள்ளன. திராவிட அரசுகள் மும்மொழிக் கொள்கையை எதிர்த்து இருமொழிக் கொள்கையை உயர்த்திப் பிடித்ததைக் கேலிக்குரியதாக்கி 3 ஆவது மொழியாக இந்தியை இப்பள்ளிகள் கட்டாயமாகக் கற்பித்து வருகின்றன. இந்த பள்ளிகளை நடத்துகிறவர்கள் மார்வாடிகளோ, குஜராத்திகளோ அல்லர்; பலரும் பச்சைத் தமிழர்கள் என்பதே வேதனைக்குரியதாகும். அதிலும் தமிழ் உணர்வுள்ள குடும்பத்தினரின் வாரிசுகளே இப்பள்ளிகளில் சிலவற்றை நடத்துகின்றனர் என்பதைக் கேள்வியுறும்போது நெஞ்சம் புண்ணாகிறது.

கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் தமிழைப் புறந்தள்ளி அவமதிப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன. அங்கு 20க்கும் மேற்பட்ட மாணவர்கள் விரும்பினால் மட்டுமே தமிழ் கற்பிக்கப் படுகிறது. அதுவும் பகுதிநேர ஆசிரியர்களே நியமிக்கப்படுகின்றனர். வாரத்திற்கு 2 அல்லது 3 வகுப்புகள் மட்டுமே தமிழ்ப்பாடம் நடத்த அனுமதி. மேலும், 2 ஆம் வகுப்பு வரை சமஸ்கிருதம் கட்டாயப் பாடம். 9 முதல் 12 வரை அதுவே விருப்பப்பாடம்.

சிபிஎஸ்சி மெட்ரிக் பள்ளிகளில் மிகக் குறைந்த ஊதியத்தில் வெறும் வயிற்றுப் பிழைப்புக்காகப் பாடம் நடத்தும் தமிழாசிரியர்களின் வகுப்புகள், மாணவர்கள் வெறுக்கும் வண்ணமே அமைந்துள்ளதாக குற்றச்சாட்டு எழுகிறது. இந்நிலை மற்ற பள்ளிகளிலும் தொடர்கிறது.

தமிழ் உணர்வும், தமிழ்த் தேர்ச்சியும்மிக்கத் தமிழாசிரியர்களால்தான் தமிழ்ப் பற்றாளர்களும் சமூகச் சிந்தனையாளர்களும் கடந்த காலங்களில் உருவாகினர். கடனுக்காகத் தமிழ் கற்பிக்கும் தமிழாசிரியர்களின் போக்கும் தமிழ் படிக்கும் மாணவர்களிடம் தமிழ்மேல் வெறுப்பு வளர்ந்தமைக்குக் காரணமாகும். தமிழ்ப் பாடங்கள் சுமை உள்ளதாகவும், சுவை குன்றியதாகவும் இருக்கும் நிலையும் தமிழைத் தள்ளிவைக்க இன்னொரு காரணமாகும்.

இவற்றின் விளைவாக ஆங்கிலத்தில் சிந்திக்கும் குழந்தைகள் பெருகி வருகின்றனர். வீட்டில் தமிழ் பேசாத, தமிழ் இதழ்களோ, தமிழ் நூல்களோ படிக்க முடியாத, தமிழ்க் குழந்தைகளின் எண்ணிக்கை மிகுந்து வருகிறது. ஒரு குழந்தையிடம் இன்னொரு தமிழ்க் குழந்தை ஆங்கிலத்தில் பேசுவதே இயல்பாகிவிட்டது.

தமிழ்மொழியின் அழிவு தமிழ் இனத்தின் அழிவு என்பதை உணராவிட்டால் நம் மொழியும், இனமும் அழிவதை யாராலும் தடுக்க முடியாது.

கடற்கோள்களால் நகரங்கள் அழிந்தால் மீண்டும் புதிய நகரங்களை உருவாக்கிக் கொள்ளலாம். ஆனால், மொழி அழிந்தால் அதனை மீட்கவே முடியாது. உலகின் மூத்த மொழிகளாக விளங்கி வழக்கொழிந்த இலத்தீன், கிரேக்கம், எபிரேயம், எகிப்தியம், சமஸ்கிருதம் முதலியன மீண்டும் உயிர்த்தெழ வழியே இல்லை. இந்நிலை தமிழ் மொழிக்கு வராமல் தடுத்தே ஆகவேண்டும்.

கல்வி மொழியாக, அலுவல் மொழியாக, வழிபாட்டு மொழியாகத் தமிழ் உயர்வு பெறுவதுதான் தமிழை வாழ வைக்கும் வழியாகும்.

தமிழக அரசு நினைத்தால் இதனை உறுதியாகச் சாதிக்க முடியும். ஆனால், மாநில அரசு ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதால் கல்வி ஒன்றிய அரசின் பட்டியலில் இருப்பதால் இம் முயற்சிகள் நீர்த்துப் போகின்றன. எனவே, கல்வி மாநிலப் பட்டியலுக்கு வருவது இன்றியமையாதது.

தமிழக மாநிலத்தில் சுயாட்சி வரும்போதுதான் தமிழ் மொழியை முழுமையாக வாழவைக்கும் வல்லமை கிடைக்கும் என்பதே மெய்ப்பொருளாகும்.

அதுவரை தமிழக அரசு சமரசமின்றித் தங்கள் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வியைத் தீவிரப்படுத்த வேண்டும். அமைச்சர்களும், உயர் அரசு அதிகாரிகளும் தங்கள் பிள்ளைகளை முன்மாதிரியாக அரசு நடத்தும் பள்ளிகளில் மட்டுமே சேர்க்க வேண்டும். தமிழ்ப் பெற்றோர் தன்மானத்துடன், வீட்டில் தம் குழந்தைகள் தமிழில் பேசுவதையும், படிப்பதையும் பெருமையாகக் கருதி அதனை வற்புறுத்த வேண்டும். ■

## அன்புள்ள ஆசிரியருக்கு...

'நம் வாழ்வு' மின்னிதழ் 3-7-22 தேதியிட்டது பொன்னிதழாக, புதுப்பொலிவுடன் ஒளிர்கின்றது. வண்ண வண்ண படங்கள் கோர்ப்பு கண்கவர் Layout உடுத்தி எடுப்பு, மீண்டும் படிக்கத் தூண்டும் ஈர்ப்பு படைப்புகள் அனைத்தும் கலக்கல் கை வண்ணம். ஆளும் வர்க்கத்தினரின் அட்டைகத்தி விளையாட்டாய் அமையப்போகும் புதிய குடியரசுத் தலைவர் தேர்வு-தலையங்கம் தந்த ஆசிரியருக்கு தரவேண்டும் தங்கம் Please accept my tips request உச்சம் தலையில் கொட்டிய உச்ச நீதிமன்றத்தீர்ப்பு - நிபுர் சர்மா தொலைக்காட்சியில் மன்னிப்புக் கோரவேண்டும். தாய் திருநாட்டை எரி தனலாக்கியவர்களை தட்டிக்கேளுங்கள். தந்தையின் இல்லத்தில் தவறு செய்தவர்களைத் தட்டிக்கேட்க, எருசலேம் தேவாலயத்தில் ஏந்திய சாட்டையுடன் வலம் வந்த இறைமகன் இயேசு வல்லமை தர செபத்துடன், வாழ்த்துகின்றேன்.

திரு. **ரெடம்டர்,** தூத்துக்குடி (மின் அஞ்சல்)

'அட்டை கத்திகளும் கொலு பொம்மைகளும்' எனும் வார்த்தை உண்மையான கத்தியால் குத்திக் கிழித்து துவைத்து, தோரணம் கட்டி, தொங்க வைத்து விட்டீர்களே. இதைவிட சாட்டையடி கொடுக்க முடியாது. அதிகாரம் கொண்ட பதவியில் அமர வைக்க மாட்டார்கள். ஆளுநர், குடியரசுத் தலைவர்கள், பாஜக பயன்படுத்தி தூர எறியும் முகமூடிகள். ஒவ்வொரு வரிகளும் அக்னி குண்டுகள். வாழ்க, வளர்க.

திரு. **பூர்ணநாதன்,** தர்மபுரி (மின் அஞ்சல்)

இந்தியாவில் குறைந்து வரும் கிறிஸ்தவம். புள்ளி விவரம் மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளன. இந்த புதிய இந்திய சமத்துவ நாட்டிற்கு வந்த கேடு. நமது மக்கள் விழிப்பாக இருக்க வேண்டிய முக்கியமான நேரம். வருங்கால இளைய சமுதாயம் சவாலாக ஏற்று அச்சுறுத்தலுக்கு விடையளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. **த. இராபர்ட்,** மதுரை (மின் அஞ்சல்)

3.7.22 இல் 'நம் வாழ்வு' பக். 28 இல் மெக்சிகோவில் இரு சேசு சபை குருக்களுடன், ஓர் பொதுநிலையினரும் வேதசாட்சிகளாக கொல்லப்பட்ட செய்தி, இந்த நூற்றாண்டிலுமா இந்நிகழ்வு எத்துனை வேதனை இது. நிகழ்வுக்கு பின்னரும் சபையினர் வீர உறுதி விசுவாச அறிக்கை. விதைக்கப்பட்ட இந்த மூன்று விதைகளும், விண்ணில் ஜொலிக்கும் - செபிக்கும் நமக்காக. உலக அமைதிக்காக திரு அவை வளர, பாதுகாப்பு கிடைக்க இறைவனிடம் பரிந்துரைத்துக் கொண்டிருக்கும் நம்புவோம். அவர்கள் மடியவில்லை விதைக்கப்பட்டுள்ளனர்.

திரு. **அ. ஜோசப் சாமி,** கும்பகோணம்

திருவிவிலியம் அறிவோம் - 7 குறுக்கெழுத்துப் போட்டியில் முதல் பரிசாக தாங்கள் அனுப்பிய புத்தகங்களையும், ரூ.500 ஐயும் பெற்றுக்கொண்டேன். நெஞ்சார நன்றியை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போட்டிகளில் பங்கேற்பது, விவிலியத்தை ஆழமாக அறிந்துணர்ந்து, இறை வார்த்தைப்படி வாழ உதவியாக இருக்கிறது.

திருமதி. **அ. சவரியம்மாள்,** மதுரை

'நம் வாழ்வு'-ன் அசுர வளர்ச்சி கண்டு பெருமிதம் அடைகிறேன். குடந்தை ஞானியின் மேதகு. கர்தினால் பூலாவுடன் எடுத்த நேர் காணல் மிக அருமை. கர்தினாலின் எதார்த்தமான மகிழ்வு தலித் மக்களின் உண்மை நிலையையும், அவரின் சிறுவயது அனுபவங்களின் பகிர்வும், மிஷினரிகளின் உழைப்பு போற்றத் தகுந்தது. புதிய கர்தினாலுக்கு என் அன்பான வாழ்த்துகளும், செபங்களும்.

திருமதி. **செல்வி. ரெஜினா,** கோவை (மின் அஞ்சல்)

'நம் வாழ்வு' ஆசிரியர் ஞானி 'நம் வாழ்வுக்கு' மட்டுமல்ல; நம் அரசியல் வாழ்வுக்கும் ஞானி. 10.7.2022 இல் அவர் எழுதியுள்ள தலையங்கம் சூப்பர். மிகமிகத் தெளிவாகவும், அசட்டு தைரியத்துடன், சனநாயகத்தைக் கபளீகரம் செய்துகொண்டிருக்கும் காவிக் கட்சியைத் தோலுரித்துக் காட்டியுள்ளார். அரசியல் பூகம்பம் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் இலைக் கட்சியினர் தாமரைக் கட்சியிடம் சரணடைந்தால் அவர்கள் காணாமல் போவது மட்டுமல்ல; காவிக்கட்சி தமிழகத்திலும் ருத்தரதாண்டவமாட வழிவகுக்கும். தொடர்ந்து அரசியல் விழிப்புணர்வும் எச்சரிக்கை மணியடித்துக் கொண்டிருக்கும் 'நம் வாழ்வு' ஆசிரியர் குடந்தை ஞானிக்குப் பாராட்டுக்கள்.

அருள்பணி. **க. சாம்சன்,** முள்ளிப்பாடி, திண்டுக்கல் (மின் அஞ்சல்)

# பணி விலகல் குறித்த வதந்திக்கு திருத்தந்தை முற்றுப்புள்ளி

ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்தின் அமெரிக்க பத்திரிகையாளர் பிலிப் புள்ளேளா அவர்களுக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இத்தாலியத்தில் வழங்கியுள்ள ஒன்றரை மணிநேர பேட்டியில், அந்நாட்டில் கருக்கலைப்பு உரிமையை உச்ச நீதிமன்றம் இரத்து செய்து, அந்த உரிமையை தனி மாநிலங்களுக்கு அனுமதியளித்துள்ளதை குறித்த விவகாரத்தை, நீதித்துறை கண்ணோட்டத்திலிருந்து கருத்துச் சொல்வதற்கு அது பற்றி போதுமான அளவு வாசிக்கவில்லை என்று கூறியுள்ளார்.



கருக்கலைப்புக்கு எதிரான தன் கண்டனத்தை மீண்டும் வெளியிட்டுள்ள திருத்தந்தை, ஒரு பிரச்சனையைத் தீர்ப்பதற்கு, ஒரு மனித வாழ்வை அழிப்பது, சட்டமுறையானதா மற்றும் சரியானதா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளதோடு, கருக்கலைப்பை ஆதரிக்கும் கத்தோலிக்க அரசியல்வாதிகளுக்கு அது குறித்த மேய்ப்புப்பணி அணுகுமுறையை எடுத்துரைப்பது முக்கியம் என்பதை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

திரு அவையும், ஆயர் ஒருவரும் தங்களின் மேய்ப்புப்பணி இயல்புகளை இழக்கும்போது, அது ஓர் அரசியல் பிரச்சனைக்கு காரணமாகின்றது என்றுரைத்த திருத்தந்தையிடம், அவர் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகுவது பற்றிய வதந்திகள் குறித்த கேள்விக்கும் பதிலளித்துள்ளார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இத்தாலிய நகரமான அக்குய்லாவுக்குத் திருத்தூதுப் பயணம் மேற்கொள்வது பற்றிய திட்டம் குறித்து குறிப்பிட்ட பத்திரிகையாளர் புள்ளேளா அவர்கள், அந்நகரம், 1294 ஆம் ஆண்டில் திருத்தந்தை 5 ஆம் செலஸ்டின் தலைமைப்பொறுப்பைத் துறந்ததோடு தொடர்புடையது. மற்றும் முன்னாள் திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் அவர்கள், 2009 ஆம் ஆண்டில் அந்நகரைப் பார்வையிட்டபோது தன் (பேராயருக்கான) பாலியத்தை அத்திருத்தந்தையின் கல்லறையில் வைத்தார். அப்போது அவர் தலைமைப்பணியை துறப்பது குறித்து நினைத்திருக்கலாம் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களிடம் கூறினார். இவை, இம்மாதிரி என்னைப் பற்றி நினைக்க வைத்திருக்கலாம். ஆனால், அத்தகைய எண்ணம் ஒருபோதும் மனதில் தோன்றவில்லை, அவ்வெண்ணம் இப்போதைக்கு இல்லை. ஆயினும் பணித்துறப்பு, ஒரு வாய்ப்பாக உள்ளது. எடுத்துக்காட்டாக, திரு அவையை நடத்தமுடியாது என உடல்நிலை அறிவிக்கும் கட்டத்தில், அந்த வாய்ப்பு உள்ளது. நமக்குத் தெரியாது, கடவுள்தான் சொல்வார் என்றும் திருத்தந்தை தெரிவித்துள்ளார். ■



தொடர்புக்கு : 04368 - 236840, 236830, 9655754955, 9585617785.
E.mail : immaculatekkl@gmail.com / Website : immaculatenursingkkl.org

**புதிய புனிதர் 4 – வரலாறு**

# புனித மரிய ரிவியெர்



Sr. மேரி ஆனந்த் DM

இறைமக்கள் இறையன்பிலும், நம்பிக்கையிலும் வளர வழிகாட்டியவர். புனிதமும், தியாகமும், சேவையும் தனதாக்கி அன்பின் நறுமணம் வீசியவர். தைரியத்துடன் நற்பண்புகள் வழி இறைவனை மாட்சிப்படுத்தியவர். பெருமையும் புகழும் விரும்பாமல் தூயவராக வாழ்ந்தவர். நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அன்புடன் பணிவிடை செய்தவர். எப்பொழுதும் நற்கருணை ஆண்டவரின் பிரசன்னம் உணர்ந்தவர். இறைபணி செய்யும் ஆற்றல் நற்கருணையிலிருந்து பெற்றவர். துன்புறும் ஏழைமக்கள் மத்தியில், கனிவின் கரமாக கடந்து சென்றவர். பதவியில் பணிவும், உயர்வில் தாழ்ச்சியும், துன்பத்தில் துணிவும், கோபத்தில் பொறுமையுடனும் செயல்பட்டவர். செல்வாக்குப் பெற்றிருந்தும் எளிமையாக வாழ்ந்த இறை நம்பிக்கையாளரே புனித மரிய ரிவியெர்.



மரிய ரிவியெர் பிரான்ஸ் நாட்டில் 1768 ஆம் ஆண்டு, டிசம்பர் 19 ஆம் நாள் ஜீன் ரிவியெர் என்பவரின் நான்கு குழந்தைகளில் மூன்றாவது குழந்தையாகப் பிறந்தார். கிறிஸ்து பிறப்பு திருநாள் தினம் அன்று திருமுழுக்குப் பெற்றார். 1770 ஆம் ஆண்டு, ஒரு விபத்துக்குள்ளாகி இடுப்பு, கணுக்கால் உடைந்து நடக்க முடியாமல் துன்புற்றார். தாய், மரிய ரிவியெரை தினமும் ஆலயம் அழைத்து சென்று திருப்பலியில் பங்கேற்று மகள் உடல்நலம் பெற அன்னை மரியாவின் திருச்சொரூபம் முன் இறைவேண்டல் செய்வது வழக்கம். 1774 ஆம் ஆண்டு, ஊன்றுகோலின் உதவியுடன் ஓரளவு நடந்தார். நாட்கள் செல்லச் செல்ல முழுமையாக குணமடைந்து, எவ்வித உதவியின்றி நடந்தார். குழந்தைப்பருவம் முதல் பாட்டியின் அரவணைப்பிலும், தூயவராகவும், நம்பிக்கை மிகுந்தவராகவும், தைரியசாலியாகவும், சகோதரப்பாசத்திலும் வளர்ந்தார்.

மரிய ரிவியெர் இறைவனுக்கு தனது வாழ்வை அர்ப்பணித்தார். 1785 ஆம் ஆண்டு, பிராடெல்லஸில் உள்ள சிஸ்டர்ஸ் ஆஃப் நோட்டர் டாம் என்ற துறவு சபையில் சேர விண்ணப்பித்தபோது, அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. இறை சிந்தனைக்கும், சொல்லுக்கும், செயலுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்தார். 1786 ஆம் ஆண்டு, தனது சொந்த ஊரில் ஒரு பள்ளிக்கூடம் நிறுவி, குழந்தைகளுக்கு கல்வி கற்பிப்பதில் கவனம் செலுத்தினார். 1789 ஆம் ஆண்டு, பிரெஞ்சு புரட்சி ஆரம்பமானது. பிரெஞ்சு புரட்சியின்போது, திரு அவையின் அதிகாரம் பெருமளவு குறைந்து, அரசின் அதிகாரம் வலுப்பெற்றபோது இயேசுவின்மீது மிகுந்த நம்பிக்கைகொண்டார். நற்கருணையை வாழ்வின் ஆற்றலாகவும், வல்லமையாகவும், புகலிடமாகவும் மாற்றிட ஆவல் கொண்டார்.

பிரெஞ்சு புரட்சிக் காலத்தில் திருப்பலி நடத்த குருக்களின் பற்றாக்குறை ஏற்பட்டபோது, செப வழிபாடு நடத்தினார். இறைமக்களுக்கு இறைவார்த்தையும், திரு அவையின் மறையுண்மைகளையும் எடுத்துரைத்தார். புனித பிரான்சிஸ் சேவியர், புனித பிரான்சிஸ் ரெஜிஸ் ஆகியோர்மீது பக்திகொண்டு, அவர்களின் துணை வேண்டினார். 1794 ஆம் ஆண்டு, அவரால் நடத்தப்பட்ட கல்வி நிறுவனத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்தபோது, துய்ட்ஸ் என்ற நகருக்கு குடிபெயர்ந்தார். அங்கு அருள்தந்தை லூய்கி என்பவரின் உதவியுடன் இறைபணியை மீண்டும் தொடர்ந்தார். இறை திருவுளம் கண்டறிந்து, தன்னுடன் 4 பெண்களை இணைத்து 1796 ஆம் ஆண்டு, மற்றுமொரு துறவு சபையை நிறுவினார். துறவு சபைக்கென்று விதிமுறைகள் உருவாக்கி முறையாக பின்பற்றினார்.

பிரெஞ்சு புரட்சிக் காலத்தில் பாதிக்கப்பட்ட பெண்கள், குழந்தைகள், நோயாளிகள், ஆதரவற்றோர், ஊனமுற்றோர் ஆகியோருக்கு உதவினார். குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும் கல்வி கற்பிப்பதில் தனிக்கவனம் செலுத்தினார். புரட்சிக்காலத் துன்புறுத்தலை பொருட்படுத்தாமல் விடாமுயற்சியோடும், துணிவுடனும் மக்களின் நலனுக்காக உழைத்தார். வீடுகளில் மகிழ்ச்சியின்றி சோர்வுடன் வாழ்ந்தவர்களைச் சந்தித்து, இறையன்பும், இரக்கமும், தைரியமும் பகிர்ந்தார். நற்கருணை ஆண்டவரை ஆன்ம உணவாக உட்கொண்டு, இறைஞானமும், அறிவாற்றலும் பெற்று, இதயத்தில் இறைவனுக்கு இடமளித்து, கிறிஸ்துவின் போதனைகளைக் கற்பித்தார்.

1814 ஆம் ஆண்டு, கைவிடப்பட்டோருக்கு மறுவாழ்வு மையம் நிறுவினார். ஏழைகளுக்கு உதவிகள் செய்து அவர்களின் நல்வாழ்வுக்கு உழைத்தார். எதிர்பாராமல் நோயினால் பாதிக்கப்பட்டார். இடைவிடாமல் இறை பிரசன்னத்திலும், இறை அன்பிலும், பிறரன்பிலும், அமைதியிலும் வாழ்ந்து 1838 ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 3 ஆம் நாள் இறந்தார். 1853 ஆம் ஆண்டு, திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர் இறைஊழியராக அறிவித்தார். 1982 ஆம் ஆண்டு, திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பால் அருளாளராக அறிவித்தார். 2022 ஆம் ஆண்டு மே திங்கள் 15 ஆம் நாள், திருத்தந்தை பிரான்சிஸ் புனிதர் நிலைக்கு உயர்த்தினார்.

## ❖ இந்த வாரப் புனிதர்கள் ❖

Sr. மேரி ஆனந்த் DM



### ஜூலை 17 புனித அலெக்சி(யு)ஸ்

புனித அலெக்சி(யு)ஸ் உரோமையில் 4 ஆம் நூற்றாண்டில் பிறந்தார். வளனார் என்ற மெய்யடியாரிடம் கல்வியும், சாத்திரங்களையும், கலைகளையும் கற்றார். ஏழைகள்மீது தீராத பாசம் கொண்டு, தனது செல்வங்களை அனைவருக்கும் வழங்கினார். பக்தியிலும், அறிவிலும் வளர்ந்து விண்ணக வாழ்வில் நாட்டம் கொண்டார். உலகைத் துறந்து, கடவுளை தனதாக்கிட மண்ணாசை, பொருளாசை, உடலாசைகளை முற்றிலும் துறந்தார். இறைவன் துணைநாடி, கற்பு நெறியுடன் வாழ்ந்தார். பெற்றோர் அவருக்கு திருமணம் செய்து வைத்த நாளன்று தவம் மேற்கொள்ள, வீட்டில் யாரிடமும் சொல்லாமல் எடேஸ்ஸா நகருக்கு போய், அங்கு 17 ஆண்டுகள் கடுந்தவம் புரிந்து, மக்களுக்கு நன்மைகள் செய்தார். அவரது பெயரும், புகழும் நாடெங்கும் பரவியபோது, தவம் குலைந்துவிடும் என்று அஞ்சி, தனது வீட்டில் தன்னை வெளிப்படுத்தாமல் வீரர்களின் துன்புறுத்தலை ஏற்று இறந்தார். இறந்தவுடன் இயேசு தூதர்களுடனும், மரியாவுடனும் வந்து, புனிதருக்குரிய மகுடம் அணிவித்து, விண்ணகம் அழைத்து சென்றார்.

### ஜூலை 18 புனித ஃபிரட்ரிக்

புனித ஃபிரட்ரிக் 780 இல் ஃபிரிஸ்லாந்தில் பிறந்தார். இறையன்பிலும், பிறரன்பிலும் வளர்ந்து திருநூல் கற்க ஆர்வம் கொண்டு, உட்ரெக்ட் நகர் சென்றார். ஆயர் ரிக்ஃபிரிட் கரங்களால் குருவானார். வால்செரன் பகுதியில் கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு கிறிஸ்துவின் விழுமியங்களையும், நலம் தரும் நற்செய்தியையும் போதித்தார். சமூகத்தில் நிலவிய தவறுகளையும், ஒழுக்கமற்றவர்களின் வாழ்வையும், சுட்டிக்காட்டியபோது மக்களின் எதிர்ப்பையும், துன்புறுத்தலையும் சந்தித்தார். 816 ஆம் ஆண்டு உட்ரெக்ட் மறைமாவட்ட ஆயரானார். 829 ஆம் ஆண்டில் மைன்ஸில் நடந்த ஆயர் மன்றத்தில் கலந்துகொண்டு, இறைஞானம் மிகுந்த வார்த்தைகளை பேசினார். இவரது பணிகளை விரும்பாதோர் இவர்மீது பொய்குற்றம் சுமத்தியபோது, இறையருளால் அமைதி காத்தார். 838 ஆம் ஆண்டு, ஜூலை 18 அன்று திருப்பலி நிறைவேற்றி, கடவுளுக்கு நன்றி கூறியபோது, எதிரிகள் இரண்டு பேர் அவரை வெட்டிக் கொலை செய்தனர்.

### ஜூலை 19 புனிதர்களான ஜஸ்தா மற்றும் ருஃபீனா

ஸ்பெயின் நாட்டில் புனித ஜஸ்தா 268 ஆம் ஆண்டும், ருஃபீனா 270 ஆம் ஆண்டும் செல்வத்தில் ஏழைகளானாலும், இறையன்பின் செல்வந்தர்களாக பிறந்தனர். மண்பாத்திரம் தொழில் செய்து, கிறிஸ்தவ விழுமியங்களுக்கு நற்சான்று நல்கி, அனைவருக்கும் உதவி செய்தனர். வேற்றினத்து தெய்வத்தை வழிபட்டவர்கள் தங்கள் தெய்வத்திற்கு வழிபாடு செய்ய மண்பாத்திரம் கேட்டபோது ஜஸ்தா, ருஃபீனா இரண்டு சகோதரிகளும் மறுத்தனர். வேற்றினத்தார் இவரது மண்பாத்திரங்களை உடைத்து வீட்டிற்கு தீவைத்து துன்புறுத்தினர். இறுதியில் ஆளுநன் டயோஜெனியனுஸ் முன் நிறுத்தி, கிறிஸ்துவை மறுதலிக்கக்கூறி இரும்பு கம்பியால் அடித்தனர். கிறிஸ்துவின்மீது கொண்ட நம்பிக்கையில் உறுதியாய் இருந்ததால் சிறையில் அடைத்து, உணவின்றி துன்புறுத்தினர். ஜஸ்தா இறந்தபோது, அவரது உடலை கிணற்றில் வீசினர். ருஃபீனாவை தலைவெட்டி கொலை செய்தனர்.

### ஜூலை 20 புனிதர்களான எலியாஸ் & ஃபிளேவியன்

புனிதர்களான எலியாஸ் மற்றும் ஃபிளேவியன் இறை நம்பிக்கையின் வீரர்கள். எலியாஸ் அரபு நாட்டில் பிறந்து, துறவு மடத்தில் கல்வி கற்று விசுவாசத்தில் வளர்ந்தார். 457 ஆம் ஆண்டு, பாலஸ்தீனம் சென்று யுத்திமுஸ் என்பவரின் அரவணைப்பில் வாழ்ந்தார். ஜெரிக்கோ என்ற குழுமத்தை நிறுவினார். குருத்துவம் வழி இறைதிருவுளம் நிறைவேற்றினார். 494 இல் எருசலேம் மறைத்தந்தையானார். அந்தியோக்கு மறைத்தந்தை ஃபிளேவியன் என்பவருடன் தோழமை உறவு கொண்டிருந்தார். இரண்டு மறைத்தந்தையர்களும் ஓரியல்பு கோட்பாடு எதிராகக் குரல் கொடுத்தனர். பேரரசர் முதலாம் அனஸ்தாசியுஸ் ஓரியல்பு கோட்பாட்டை ஆதரித்தார். பேரரசர், எலியாஸ் மற்றும் ஃபிளேவியன் இருவரையும் ஓரியல்பு கோட்பாட்டை ஏற்றுக்கொள்வதாகக்கூறி, ஆவணத்தில் கையொப்பமிட சொன்னார். மறுத்த எலியாஸ், ஃபிளேவியன் இருவரையும் 516 இல் அய்லாவிற்கு நாடு கடத்தியபோது, வழியில் ஃபிளேவியன் இறந்தார். அய்லாவில் எலியாஸ் இறந்தார்.

### ஜூலை 21 புனித பிரின்டிசி லாரன்ஸ்

புனித பிரின்டிசி லாரன்ஸ் நேப்பிள்ஸில் 1559, ஜூலை 22 ஆம் நாள் பிறந்தார். மொழித்துறையில் முதல் மாணவரானார். 16 ஆம் வயதில் வெரோனாவில் கப்புச்சின் சபையில் சேர்ந்தார். மெய்யியல், இறையியல் பயின்று 1596 இல் குருவானார். பல்வேறு இடங்களில் விவிலியம், இறையியலை ஞானத்துடன் மறையுரை நிகழ்த்தினார். தனது சொல்லாலும், செயலாலும், திறமையாலும் நற்செய்தி அறிவித்தார். திருத்தந்தை 8 ஆம் கிளமெண்ட் அழைப்பு பெற்று, யூத மக்களிடையே கிறிஸ்தவ மறை உண்மைகளை அறிவித்து, எண்ணற்ற யூதர்களை மனம் மாற்றினார். 1601 இல் உரோமை பேரரசர் 2 ஆம் ருடால்ஃப் அரசவையில் குருவாக செயல்பட்டார். திருச்சிலுவையின் வல்லமையால் எதிரிகளை வென்றார். 1602 ஆம் ஆண்டில் அச்சபையின் அகில உலக தலைவரானர். திருத்தந்தையின் தூதுவராக பவாரியர் அரசவையில் பணியாற்றினார். இறைமாட்சிக்காக பணி செய்த லாரன்ஸ் 1619 ஆம் ஆண்டு, ஜூலை 22 ஆம் தேதி இறந்தார்.

### ஜூலை 22 புனித மகதலா மரியா

புனித மகதலா மரியா கலிலேயாவில் கெனசரேத்துச் சமவெளியின் தெற்கு பகுதியில் மகதலா நகரில் பிறந்தார். இயேசு இவரிடமிருந்து ஏழு பேய்களை ஓட்டினார். இயேசுவின் அளவற்ற அன்பும், இரக்கமும் பெற்று தூயவரானார். இயேசுவுக்கு பணிவிடை செய்த பெண் சீடர்கள் பட்டியலில் முதலிடம் பெற்றவர். இயேசுவின் இறையாட்சி பணியில், சிலுவையில் அறையப்பட்ட போதும், மகதலா மரியா உடனிருந்தார். தனது சொத்துகளை இயேசுவின் காலடியில் அர்ப்பணித்தவர். இயேசுவை கல்லறையில் அடக்கம் செய்தபின், அவருடைய உடலில் நறுமணத் தைலம் பூச யாக்கோபின் தாய் மரியா மற்றும் சலோமி ஆகியோருடன் சென்றார். “என் ஆண்டவரை யாரோ எடுத்துகொண்டு போய்விட்டனர்” என்று கூறி, கல்லறைக்கு வெளியே நின்று அழுது கொண்டிருந்தார். உயிர்த்த இயேசுவை முதலில் பார்த்து, அவரோடு பேசியவர். இயேசுவை ரபூனி என்றழைத்தவர்.

# ஆண்டின் பொதுக்காலம் 17 ஆம் ஞாயிறு

தொநூ 18:20-32, கொலோ 2:12-14, லூக் 11:1-13

## திருப்பலி முன்னுரை

இன்று நாம் பொதுக்காலத்தின் 17 ஆவது ஞாயிறு வழிபாட்டினை சிறப்பிக்கின்றோம். இன்றைய நற்செய்தியில், ஆண்டவர் இயேசுவின் சீடர்கள், தங்களுக்கு செபிக்க கற்றுத்தருமாறு அவரிடம் கேட்கின்றனர். ‘செபம்’ என்பது கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே நடக்கும் ஒரு உரையாடல். அந்த உரையாடல் நம்பிக்கையை அடித்தளமாக கொண்டு தந்தைக்கும், மகனுக்கும் நடக்கும் உரையாடல் போல இருக்க வேண்டும் என்பதை, ஆண்டவர் இயேசு கிறிஸ்து ‘தந்தையே’ என்றழைத்து நமக்கு எடுத்துக்காட்டுகிறார். இங்கு அற்புதமான ஓர் நிகழ்வு என்னவென்றால், செபத்தில் நாம் இறைவனிடம் அனைத்தையும் கேட்போம். ஆனால், இங்கே சீடர்கள் செபத்தையே இறைவனிடமிருந்து கேட்கிறார்கள். ஆண்டவர் இயேசு, செபம் என்பது தேவைகளின் தொகுப்பாக மட்டும் இருப்பது அல்ல; மாறாக, நம்மீது இரக்கம் காட்டும்படி, நமக்கு எதிராக குற்றம் செய்பவருக்கு மன்னிப்பு தரும்படி, சோதனைகளிலிருந்து விடுதலைதரும்படி, தந்தைக் கடவுளிடம் மன்றாட வேண்டும் என்பதை செபமாக தருகிறார். இவை அனைத்திற்கும் மேலாக விண்ணுலகில் உமது திருவுளம் எப்படி இருக்கிறதோ அதுபோன்று மண்ணுலகிலும் இருக்கவேண்டும் என்று, செபிக்க அறிவுறுத்துகிறார். ஆண்டவர் இயேசு இன்றைய நற்செய்தியில், விடாமுயற்சியுடன் பலமுறை நீங்கள் தந்தைக் கடவுளிடம் கேட்டுக்கொண்டே இருந்தால், கேட்பதை பெறுவீர்கள் என்று, சொல்லுகிறார். அப்படிச் சொன்னவர் மற்றொரு கருத்தையும் முன்வைக்கிறார். பல நேரங்களில் நாம் செபிப்பது கிடைப்பதில்லை. ஏனெனில், நாம் நமது விருப்பத்திற்கு ஏற்றவாறு ஆண்டவரிடம் செபிக்கிறோம். ஆண்டவரோ, அவர் விருப்பத்திற்கு ஏற்றவாறு நமக்குத் தருகிறார். எனவே, ஆண்டவரிடம் செபங்களை முன்வைக்கும் நாம், ஆண்டவரே உமது விருப்பப்படியே எங்களுக்குத் தாரும் என்று மன்றாடுவோம். இதற்கான வரத்தை இத்திருப்பலியில் வேண்டுவோம்.

## முதல் வாசக முன்னுரை

சோதோம், கொமோரா நகர்களை இறைவன் அழிக்க நினைக்கிறார். ஆபிரகாம் நீதிமான்கள் பொருட்டு அதை அழிக்காமல் விட்டுவிடுவீரா எனக்கேட்க, ஆண்டவரோ, பத்து நீதிமான்கள் இருந்தால்கூட நகர்களை அழிக்கமாட்டேன் என்று கூறுவதை இம்முதல் வாசகத்தில் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

நமது பாவங்களால் நாம் அடிமை வாழ்வுக்கு ஆளானோம். நமது பாவங்களை மன்னித்து நமது அடிமை வாழ்வின் கடன்பத்திரத்தை ஆண்டவர் இயேசு கிறிஸ்து சிலுவையில் அறைந்துவிட்டார் என்று கூறும் இவ்விரண்டாம் வாசகத்தைக் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1. **எல்லாம் வல்லவரே!** உம் திரு அவையை வழிநடத்தும் திருப்பணியாளர்கள் மற்றும் பொதுநிலையினருக்கு நல்ல உடல் உள்ள நலனைத் தாரும். இவர்கள் காலத்தின் தேவைக்கேற்ப உமது பணிகளை விரைந்து செய்திட வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. **இரக்கமுள்ள கடவுளே!** நவீனம் என்ற பெயரில் சோதோம் கொமோரா நகர்களைப்போல மாறி வரும் எம் தாய் திருநாட்டின் மீது உமது இரக்கத்தை பொழிவீராக. தங்களது குற்றங்களை உணர்ந்து, நாட்டு தலைவர்களும், மக்களும் மனம்மாற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. **எங்கள் விண்ணகத் தந்தையே!** எமது பங்கின் இளையோர்கள் உம் திருமகன் இயேசு கிறிஸ்து கற்றுத்தந்த இறையாட்சியின் விழுமியங்களுக்கு ஏற்ப வாழ்ந்து, நீர் விரும்பும் நீதிமான்களாக இவர்கள் உருமாற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. **என்றும் வாழ்பவரே!** எங்கள் செபங்கள் தேவைகளின் தொகுப்பாக மட்டும் அமைந்து விடாமல், உம் திருமகன் இயேசு கிறிஸ்து கற்றுத் தந்ததுபோல, எங்களுக்கு எதிராக இருப்பவர்களுக்கும் செபிக்கும் உள்ளத்தை பெற்றிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
5. **நலம் தருபவரே!** மருத்துவமனைகளில், வீடுகளில் நோயினால் பாதிக்கப்பட்டு, மருத்துவர்கள் கைவிட்ட நிலையிலும், உம்மீது நம்பிக்கை கண்களைப் பதியவைத்திருக்கும் இவர்களுக்கு நலம் தந்து, நீர் வழி நடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம். ■

24.07.2022

நம் வாழ்வின்



‘ஞாயிறு’ தோழன்

அருள்பணி. P. ஜான் பால்

# ஆண்டின் பொதுக்காலம்
## 17 ஆம் ஞாயிறு

தொநூ 18:20-32, கொலோ 2:12-14, லூக் 11:1-13

# விரல் தொடும் குரல்!

செபம் அல்லது இறைவேண்டல். இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் என்னில் நிறையக் கேள்விகள் எழுவது உண்டு: எதற்காக நாம் செபிக்க வேண்டும்? கடவுள் எல்லாவற்றையும் அறிந்தவர் என்றால், அவர் நம்மைப் பாதுகாப்பவர் என்றால், அந்த வேலையை அவர் சரியாகச் செய்யலாமே! நாம் தினமும் அவரிடம், 'என்னைக் காப்பாற்று!' என்று, நினைவுபடுத்திக்கொண்டே இருக்க வேண்டுமா? கடவுள் தம்மிடம் செபிப்பவர்களைப் பாதுகாக்கிறார், செபிக்காதவர்களை அழிக்கின்றார் என்றால், அவரின் கடவுள் குணம் நம் செபத்தால் வரையறை செய்யப்பட்டதா? தம்மைப் புகழாதவர்களை அவர் பழிவாங்குகின்றார் என்றால், மனிதரைப் போலத்தானே அவரும் செயல்படுகிறார். இல்லையா? நம் வாழ்வில் நடக்கும் எல்லாம் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுவிட்டன. அப்படி இருக்க நம் செபம் நம் வாழ்வின் போக்கை எப்படி மாற்ற முடியும்? செபிப்பது என்றால், எப்படி செபிப்பது? திரு அவை வரையறுத்துக் கொடுத்த செபங்கள் வழியாகவா? அல்லது நானாக என் மனதின் ஆழத்திலிருந்தா? அமைதியாக செபிப்பது சரியா? சத்தம் போட்டு செபிப்பது சரியா? கடவுள் எல்லா இடத்திலும் இருக்கிறார் என்றால், நான் ஏன் ஆலயத்திற்கு வந்து செபிக்க வேண்டும்? என் வீட்டிலும், நான் பயணம் செய்யுமிடத்திலும், பணி செய்யுமிடத்திலும் இயல்பாக செய்யும் செபத்தை அவர் கேட்க மாட்டாரா?

**நிற்க...**

விடைகளை விட கேள்விகளே நிறைய இருப்பது போலத் தோன்றினாலும், இன்றைய இறைவார்த்தை வழிபாடு சொல்லும் சுருக்கமான விடைகள் இரண்டு அவை:

**ஒன்று :** இறைவேண்டல் அல்லது செபம் என்பது ஒரு உறவு. இறைவனைத் தந்தையாகவும், நம்மையே மகனாகவும், மகளாகவும் பாவித்து ஒருவர் மற்றவரோடு பேசிக்கொள்ளும் உரையாடல் தளமே செபம்.

**இரண்டு :** சிரிப்பு, சிந்தனை போன்ற உணர்வுகள் எப்படி மனித இனத்திற்கு மட்டுமே உரித்தானதோ அப்படியே செபமும், மனித இனத்திற்கு மட்டுமே உரித்தானது. கோழிகள் செபம் செய்வதாகவோ, நாய்க்குட்டிகள் முழங்கால்படியிட்டு இறைவேண்டல் செய்வதாகவோ நாம் பார்த்ததில்லை. ஏனெனில், அவை தங்களின் வரையறையை (லிமிட்) அனுபவிக்க முடியாது. நம்மால் மட்டுமே நம் வரையறையை அனுபவிக்க முடியும். நம்மால் நம் வரையறையை அனுபவிப்பது மட்டுமல்லாமல்; அந்த வரையறையைக் கடந்து சிந்திக்கவும் முடியும். எடுத்துக்காட்டாக, நான் ஒருவரிடம் ரூ.1 லட்சம் கடன் பட்டிருக்கிறேன் என வைத்துக்கொள்வோம். அதை திருப்பிச் செலுத்த இன்றே கடைசி நாள். ஆனால், என்னிடம் இன்று வெறும் 10 ரூபாய் மட்டுமே இருக்கின்றது. இந்த 10 ரூபாய்க்கு மேல் என்னால் ஒரு ரூபாய் கூட இன்று புரட்ட முடியாது என்பது, என் வரையறை அனுபவம். அதே வேளையில், இன்று நான் கடனைத் திரும்ப செலுத்தாததால் நாளை நான் சிறைக்கு அனுப்பப்படுவேன் என்று, நாளை நடப்பதை இன்றே என்னால் சிந்திக்க முடியும். என் வரையறையைக் கடந்து சிந்திக்க என்னால் முடியும்போது, நான் என்னை அறியாமாலே என் மனத்தை இறைவனிடம் எழுப்புகின்றேன். இதுவே இறைவேண்டல்.





அருள்முனைவர் **யேசு கருணாநிதி**

மம்ரே என்ற இடத்தின் தேவதாரு மரங்கள் அருகே ஆபிரகாமை மூன்று மனிதர்கள் சந்தித்ததை கடந்த ஞாயிறன்று வாசிக்கக் கேட்டோம். அந்த நிகழ்வின் தொடர்ச்சியே இன்றைய முதல் வாசகம் (காண். தொநூ 18:20-32). ஆபிரகாமைச் சந்தித்த மனிதர்கள் நேராக சோதோம், கொமோரா நகரங்கள் நோக்கிச் செல்கின்றனர். அந்த இரண்டு

நகரங்களிலும் பாவம் குறிப்பாக, பாலியல் பிறழ்வு பெருகியிருந்ததால், அதை அழிக்கப் புறப்பட்டுச் செல்கின்றனர் இந்த இறைமனிதர்கள். அவர்கள் அவ்விதம் போய்க்கொண்டிருக்க, சோதோம்-கொமோரா அழிவைப் பற்றி கடவுள் ஆபிரகாமுக்கு வெளிப்படுத்துவதும், சோதோம்-கொமோரா நகரங்களின் நீதிமான்களுக்காக ஆபிரகாம் இறைவனிடம் பரிந்து பேசுவதுமே இன்றைய முதல் வாசகம்.

மூன்று தூதர்கள் ஆபிரகாமின் இல்லத்திற்கு வந்திருந்தாலும் (காண். தொநூ 18:2), சோதோம்-கொமோரா நகரங்களை நோக்கிச் சென்ற தூதர்கள் இரண்டுபேர் (காண். தொநூ 19:1) மட்டுமே. மூன்றாம் நபராகிய கடவுளே அல்லது அவரின் தூதரே இப்போது ஆபிராமுடன் உரையாடுபவர். ஆபிரகாம் நீதிமானாகவும், நேர்மையாளராகவும் இருந்ததால், கடவுள் தாம் செய்யவிருப்பதை அவருக்கு வெளிப்படுத்துகின்றார் (காண். தொநூ 18:19). ஆபிரகாம் இறைவன் திருமுன் நின்று கொண்டிருப்பது அவரின் பரிந்து பேசும் செயலையும், இறைவேண்டலையும் அடையாளப்படுத்துகிறது.

"தீயவரோடு நீதிமான்களையும் சேர்த்து அழித்துவிடுவீரோ?" என்று, தொடங்குகிறது ஆபிரகாமின் உரையாடல். இந்தக் கேள்வியின் பின்புலத்தில் இருப்பது முதல் ஏற்பாட்டு தோரா நூல்களின் இறையியல். 'தீயவர்கள் அழிவார்கள். நீதிமான்கள் வாழ்வார்கள்' என்றும் 'தீயவர்களை அழிக்கும் கடவுள் நீதிமான்களை அழிக்க மாட்டார்' என்பதே அந்த இறையியல். ஆக, பாவம் செய்தால் அழிவு. நீதியாக நடந்தால் வாழ்வு. இந்தப் பின்புலத்தில் 50 நீதிமான்கள், 45 நீதிமான்கள், 40 நீதிமான்கள், 30 நீதிமான்கள், 20 நீதிமான்கள், 10 நீதிமான்கள் இருந்தாலும் அந்நகரங்களை அழித்து விடுவீரோ என்று பேரம் பேசுகின்றார் ஆபிரகாம். '10 நீதிமான்கள் இருந்தால்கூட அந்நகரங்களை அழிக்க மாட்டேன்' என வாக்குறுதி தருகின்றார் இறைவன்.

ஆபிரகாமின் இந்த உரையாடல் அல்லது செபம், அவருக்கும் இறைவனுக்கும் இருந்த உறவின் நெருக்கத்தைச் சுட்டிக் காட்டுகின்றது. ஆனால், ஆபிரகாமின் செபம் கடவுளின் மனத்தை மாற்றவில்லை. நகரங்களை அழிப்பதற்காக தூதர்கள் புறப்பட்டுச் செல்கின்றனர். 10 நீதிமான்கள் கூட அந்நகரங்களில் இல்லை என்பதைக் காட்டவே இந்நிகழ்வு எழுதப்பட்டது போல இருக்கிறது.

ஆபிரகாம் கடவுளின் முன்னிலையில் நின்று, இறைவனிடம் பரிந்து பேசினாலும், கடவுளுக்கும் அவருக்கும் இடையே ஒரு திரை இருக்கின்றது. இந்தத் திரை இயேசுவின் இறப்பு மற்றும் உயிர்ப்பின் வழியாக அகற்றப்பட்டுவிட்டது என்கிறது, இன்றைய இரண்டாம் வாசகம் (காண். கொலோ 2:12-14). 'கிறிஸ்துவால் வரும் நிறைவாழ்வு' பற்றி கொலோசை நகரத் திரு அவைக்கு அறிவுறுத்தும் பவுல், திருமுழுக்கின் வழியாக கிறிஸ்துவோடு இறந்தவர்கள், அவரோடு உயிர்பெற்று எழுந்துள்ளார்கள் எனவும் சொல்லிவிட்டு, 'இறப்பு', 'கடன் பத்திரம்' என்ற இரண்டு உருவகங்கள் வழியாக, இறைவனுக்கும், மனிதருக்கும் நடுவே இருக்கும் திரை அகற்றப்பட்டதை விளக்குகின்றார்.

இறப்பு என்பது ஒரு திரை. ஏனெனில், அந்தத் திரைக்குப் பின் என்ன நடக்கும் என்பது நமக்குத் தெரியாது. ஆனால், கிறிஸ்துவை அறிந்தவர்கள் அவரோடு இறப்பதால், அவர் உயிர்ப்பைக் கண்டுகொண்டதுபோல இவர்களும் கண்டுகொள்வார்கள். அதுபோல, கடன் பத்திரம் என்பது ஒப்பந்த விதிகள் கொண்டது. ஒப்பந்தம் கடவுள்-மனித உறவுக்கு நடுவே திரையாக இருக்கின்றது. கிறிஸ்து நம் குற்றங்களை மன்னித்ததால் அந்த கடன் பத்திரம் கிழிக்கப்பட்டு, திரை அகற்றப்படுகிறது.

இவ்வாறாக, முதல் ஏற்பாட்டில் இறைவனுக்கும், மனிதருக்குமிடையே நின்ற திரை கிறிஸ்து வழியாக கிழிக்கப்பட்டதால்தான், நம்மால் கடவுளை 'அப்பா, தந்தையே' என அழைக்க முடிகிறது.

'தந்தையே' எனக் கடவுளை அழைத்து, அவரோடு உரையாடுதல் பற்றியும், அந்த உரையாடலுக்குத் தேவையான காரணிகள் பற்றியும் சொல்கிறது இன்றைய நற்செய்தி வாசகம் (காண். லூக் 11:1-13). இன்றைய நற்செய்தி வாசகம் மூன்று பிரிவுகளாக உள்ளது: (அ) ஆண்டவர் கற்றுக்கொடுத்த செபம்: தந்தையே உமது பெயர் ... (காண். லூக் 11:2-4), (ஆ) வெட்கமில்லாத நண்பர் பற்றிய உவமை (காண். லூக் 11:5-8) மற்றும் (இ) கடவுள் நம் செபங்களைக் கேட்கிறார் என்ற வாக்குறுதி (காண். லூக் 11:9-13).

இயேசு தன் சீடர்களுக்கு செபிக்கக் கற்றுக் கொடுக்கும் நிகழ்வு மத்தேயு நற்செய்தியில் மலைப்பொழிவின் ஒரு பகுதியாக (மத் 6:9-13) இருக்கிறது. ஆனால், லூக்காவில் அப்படி இல்லை. இயேசுவை 'இறைவனிடம் வேண்டிக்கொண்டிருப்பவராக' (11:1) முன்வைத்து, அந்த இறைவேண்டலின் தொடர்ச்சியாக அவர் தன் சீடர்களுக்குச் செபிக்கக் கற்றுக்கொடுப்பதாக எழுதுகின்றார் லூக்கா. 'எங்கள்,' 'விண்ணகத்திலிருக்கும்,' 'உம் திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக,' 'எங்களைத் தீமையிலிருந்து விடுவித்தருளும்' என்னும் சொல்லாடல்கள் லூக்கா எழுதும் செபத்தில் இல்லை. இரண்டு புகழ்ச்சி ('தூயது உம் பெயர்,' 'உமது ஆட்சி வருக,' மூன்று விண்ணப்பம் ('உணவு,' 'மன்னிப்பு,' 'விடுதலை') என

இரண்டு பகுதிகளாக அமைந்திருக்கிறது லூக்காவின் செபம். இறைவனின் மேன்மையை அறிக்கையிடுவதும், அவரிடம் நம் உடல், உள்ள நலனுக்காக வேண்டுவதாகவும் இருக்கின்றது இச் செபம்.

செபத்தைக் கற்றுக்கொடுத்த இயேசு, தொடர்ந்து ஓர் உவமையைச் சொல்கின்றார். இரண்டு நண்பர்கள். ஒரு நண்பருக்கு அப்பம் தேவையாக இருக்கின்றது. அதைக் கடனாகப் பெறுவதற்காக மற்ற நண்பரின் வீட்டுக் கதவைத் தட்டுகிறார். முதலில் எழ மறுக்கும் அந்நண்பர், இந்நண்பரின் விடாத தட்டுதலால், 'நட்பின் பொருட்டு அல்ல; மாறாக, தொல்லையின் பொருட்டு அப்பங்களைக் கடன் கொடுக்கிறார்!' (11:8). இங்கே நாம் பார்க்க வேண்டிய ஒரு கிரேக்க வார்த்தை 'அநைடெய்யா'. இதை 'விடாமுயற்சி,' 'துணிச்சல்,' 'வெட்கத்தை விட்டு' என, மொழிபெயர்க்கலாம். இந்த உவமையில் 'வெட்கத்தை இழந்த' நண்பர் வீட்டிற்குள் உறங்கிக் கொண்டிருப்பவரே. நாளை இந்த நண்பரை அவர் வெளியில் சந்திக்கும்போது, எந்த முகத்துடன் அவரைச் சந்திப்பார்? தன் தூக்கம் மற்றும் சுகத்திற்காக தன் நட்பை அவர் விட்டுக் கொடுத்தது ஏன்?

இந்த உவமையை மட்டும் சொல்லிவிட்டு அது தரும் செய்தியைச் சொல்லாமல் விடுகின்றார் இயேசு.

நண்பர்கள் தங்கள் மேலான நட்பை மறுதலித்தாலும் இறைவன் தன்னிடம் கேட்கும் பிள்ளைகளை மறுதலிக்காதவர் என்பதே பாடம். ஆக, நட்பையும் மிஞ்சுவது இறைவனின் உறவு. நண்பர்கூட உறங்கி விடுவார். ஆனால், "இஸ்ரயேலைக் காக்கும் இறைவன் கண்ணயர்வதுமில்லை, உறங்குவதுமில்லை" (திபா 121:4).

மேற்காணும் உவமை,'விடாமுயற்சிக்கான' எடுத்துக்காட்டாக இருந்தாலும், தொடர்ந்து இயேசு விடாமுயற்சி பற்றி பேசுகின்றார்: 'கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள்' எனச் சொல்லும் இயேசு, 'விடாமுயற்சியுடன்' கேட்கவும், தேடவும், தட்டவும் அழைக்கின்றார்.

அடுத்ததாக, கடவுள் நம் செபங்களைக் கேட்டு, நாம் கேட்பதை நமக்கு அருள்கிறார் எனத் தொடர்கின்றார் இயேசு. 'உங்கள் தந்தை மீனுக்குப் பதிலாக பாம்பையும், முட்டைக்குப் பதிலாக தேளையும் கொடுப்பாரா?' எனக் கேட்கும் இயேசு, 'தீயோர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக்கிறீர்கள்' என்று சுட்டிக்காட்டி, தன் தந்தையை நல்லவராகவும், நற்கொடைகள் அளிப்பவராகவும் முன் நிறுத்துகின்றார். எல்லா நற்கொடைகளிலும் மேலாக இருக்கின்ற 'தூய ஆவியானவரை' கொடையாக அளிப்பார் வானகத் தந்தை.

இவ்வாறாக, 'தந்தையே' என கடவுளை அழைக்கக் கற்றுத் தரும் இயேசு, அந்த அழைப்பில் நாம் கொண்டிருக்க வேண்டிய விடாமுயற்சியையும், அந்த அழைப்பின் கொடையாகிய தூய ஆவியையும் பற்றிச் சொல்கின்றார்.

நட்பு செய்ய முடியாததை செபம் செய்து முடிக்கிறது. நட்புக்காக திறக்காத கதவு நண்பனின் விடாமுயற்சிக்காகத் திறக்கிறது. நட்பை மிஞ்சுகிறது செபம். தந்தையின் விரலை எட்டித் தொட நாம் கொடுக்கும் குரலே செபம்.

நாம் முதலில் கேட்ட கேள்விகளுக்கு விடை என்ன?

### 1. இறைவேண்டல் என்பது ஓர் உறவு

மனிதர்கள் நாம் ஒருவர் மற்றவரோடு உறவு கொள்ள படைக்கப்பட்டாலும், பல நேரங்களில் நம் உறவு நம் வரையறையாக இருக்கிறது. நம் உறவைவிட நாம் மேலெழும்பிச் செல்ல நினைத்தாலும் நம்மால் முடிவதில்லை. மற்றொரு பக்கம், நாம் நம்பியிருக்கும் உறவுகள் நமக்குப் பல நேரங்களில் கை கொடுப்பதில்லை. நம்மை நம்பியிருக்கும் உறவுகளுக்கு நாம் கைகொடுப்பதில்லை. இதில் யாரும் மற்றவர்களைக் குறை சொல்லத் தேவையில்லை. ஏனெனில், நாம்


வேலைக்கு
ஆட்கள் தேவை

45 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள்
வேலைக்குத் தேவை

ஹிந்தி பேசத் தெரிந்தவர்களுக்கு
முன்னுரிமை தரப்படும்

அடிப்படை கணினி மற்றும் ஆங்கில
அறிவு உள்ள பெண்கள் வேலைக்குத்
தேவை. (Photoshop or Coral-Draw
தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை தரப்படும்)

திருமணத்தில் சைவம் மற்றும் அசைவம்
சமைக்கத் தெரிந்த ஆண்கள் தேவை

(சென்னையை சேர்ந்தவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்)

தொடர்புக்கு:
திரு. பெனட் : 78118 44444

எல்லாருமே வரையறைக்குட்பட்டவர்களே. ஆக, வரையறைக்குட்படாதவரின் உறவுதான் செபத்தின் அடித்தளம். இந்த உறவுக்காரர் என்னும் இறைவன் எப்படிப்பட்டவர் என்பதைத்தான் விளக்குகிறது இன்றைய முதல் வாசகமும், நற்செய்தி வாசகமும். தன் உள்ளத்தில் இருப்பதை தன் பணியாளர் ஆபிரகாமுடன் பகிர்ந்து கொள்கிறார் இறைவன். தன் பிள்ளைகள் தட்டியவுடன் கதவைத் திறந்து அப்பம் அளிக்கின்றார் இறைவன். இறைவன் என் தந்தை. அவருக்கும் எனக்கும் உள்ள உறவே செபம். தங்கள் வரையறையை உணர்ந்தவர்களும், கடவுளை தந்தை என ஏற்றுக்கொள்பவர்களும் மட்டுமே செபிக்க முடியும்.

## 2. செபம் என்பது மந்திரக்கோல் அல்ல!

செபம் என்பது அலாவுதீனின் அற்புத விளக்கோ, அலிபாபா குகை வாசலோ, மாயவித்தைக்காரனின் கோலோ அல்ல! செபத்தால் எல்லாவற்றையும் மாற்றி விடலாம் என நினைப்பது சால்பன்று. பிள்ளைக்குரிய திறந்த மனம் செபத்தில் மிக அவசியம். 'எனக்கு அது வேண்டும், இது வேண்டும்' என நம் பிள்ளைகள் நம்மிடம் கேட்கின்றன. ஆனால், அவர்கள் கேட்டது அவர்களுக்குக் கிடைக்கவில்லையென்றாலும் அதை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். நம்மோடு அவர்கள் உறவை முறித்துக்கொள்வதில்லை. வயது வந்தவுடன் சிலர் முறித்துக்கொள்கிறார்கள்! குழந்தைகளாக இருக்கும் வரை நம்மிடம் 'சார்பு எண்ணம்' (dependency) மேலோங்கி இருக்கிறது. இந்த உணர்வுதான் நமக்கு திறந்த மனத்தையும் தருகின்றது. செபத்தில் நாம் எதைக் கேட்டாலும் நம்மிடம் இந்த உள்ளமே இருக்க வேண்டும். அடுத்ததாக, இயேசு கற்றுக்கொடுத்த இறைவேண்டல் என்பது மந்திரம் அல்ல; 100 தடவை இதை எழுதினால் அல்லது சொன்னால் நான் விரும்பியது கிடைக்கும் என நினைத்தல் கூடாது. இந்த செபம் நமக்கும் கடவுளுக்கும் உள்ள உறவை நமக்கு நினைவுபடுத்துகிறது. அவ்வளவுதான்!

## 3. கேளுங்கள் - தேடுங்கள் - தட்டுங்கள்

நம் கடவுள் கொடுப்பவர், கண்டடையச் செய்பவர், திறப்பவர். இந்த வார்த்தைகள் திறந்த காசோலை போன்றவை. நாம் இதை கருத்தாய்ப் பொருள் கொள்ளல் வேண்டும். கடவுள் நம் விண்ணப்பங்களுக்குச் செவிகொடுக்கிறார் என்று இயேசு சொல்கிறாரே தவிர, நாம் கேட்கும் அனைத்தும் கிடைக்கும் என்று நமக்கு உத்திரவாதம் தரவில்லை. நம் கேட்டல், தேடல், தட்டுதல் அனைத்தும் மேலான ஒரு மதிப்பீட்டிற்காக - இறையாட்சிக்காக - இருத்தல் நலம் (காண். 12:31-32). நாம் மட்டுமல்ல; கடவுளும் நம்மிடம் கேட்கின்றார். நம்மைத் தேடி வருகின்றார். நம்மைத் தட்டுகின்றார். நாம் அவரின் கேட்டலுக்கும், தேடலுக்கும், தட்டுதலுக்கும் பதில் தருதல் அவசியம்.

## 4. விடா முயற்சி

முதல் வாசகத்தில் ஆபிரகாம் சோதோம்-கொமோரா நகரங்களுக்காகப் பரிந்து பேசுவதில் மனந்தளரவில்லை. இந்த மனந்தளரா நிலையைத் தான் நண்பர்கள் உவமையிலும், கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள் என்னும் கட்டளை வழியாகவும் சொல்கின்றார். இரண்டு நண்பர்களுக்கிடையே நடக்கும் இந்த கொடுக்கல்-வாங்கலை நமக்கு நாமே ஏன் ஒப்பீடு செய்து பார்க்கக் கூடாது. எடுத்துக்காட்டாக, எதையுமே தள்ளிப் போட்டுக்கொண்டே சோம்பித்திரியும் என் மனத்தோடோ அல்லது விடமுடியாத ஒரு பழக்கத்தோடோ (குடிப்பழக்கம்), 'இல்லை! நான் இனிமேல் சுறுசுறுப்பாக இருப்பேன். குடிக்க மாட்டேன்' என்று சொல்லிக்கொண்டே வந்தால், அந்த மனம் நம் தொந்தரவின் பொருட்டாவது மாறும் என்பது நிச்சயம். விடாமுயற்சி இறைவேண்டலில் மட்டுமல்ல; நம் அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளிலும் இருத்தல் அவசியம்.

## 5. தந்தை உள்ளம்

மண்ணுலகின் தந்தையரே தம் பிள்ளைகள் நன்மை கேட்டால் தீமை செய்யத் துணியாதபோது வானகத்தந்தை இன்னும் எவ்வளவு மேன்மையானவராக இருப்பார்? வானகத் தந்தையின் தாராள உள்ளம் இன்று நமக்குக் கற்றுக்கொடுப்பது 'உறவுகளில் தாராள மனம்.' மற்றொரு வகையில் நாம் வேண்டும் செபங்களும், ஒப்புக்கொடுக்கும் திருப்பலிகளும், மேற்கொள்ளும் திருயாத்திரைகளும் நம் எண்ணங்களை நிறைவு செய்யாதபோது 'வானகத் தந்தை' மறுத்துவிட்டார் என்று இறைவன்மேல் கோபமாக மாறுகின்றதா? ஏமாற்றமாக உருவெடுக்கின்றதா? அல்லது இறைவன் நாம் கேட்கும் நலன்களைவிட மேலானதைத் தருவார் என்ற நம்பிக்கையை உதிக்கச் செய்கிறதா? இறைவேண்டலில் ஏமாற்றம் ஏற்பட்டாலும் பரந்த உள்ளத்தோடு இருப்பதை ஏற்றுக்கொள்ளலாமே!

## இறுதியாக,

'இதுதான் நான்!' என்று இறைவனின் பிரசன்னத்தில் அமர்ந்து, என் இயல்பை, என்னால் இயல்பவைகளை, இயலாதவைகளை அவரிடம் கொண்டுவருவதும், 'அவர் என்னைப் பார்க்கிறார்,' 'நான் அவரைப் பார்க்கிறேன்' என்று ஒருவர் மற்றவரின் கண்கள் பணிப்பதும், எழுவதும்தான் செபம். என் வரையறை இதுதான் என்று என் வாழ்க்கை சொல்ல, அந்த கையறு நிலையிலிருந்து எட்டி என் தந்தையின் விரல் தொட நான் எழுப்பும் என் ஏக்கப் பெருமூச்சே செபம்! விரல் தொடும் குரல் செபம்! அந்த விரல் மேல் நோக்கி இருந்தாலும் கீழ் நோக்கி இருந்தாலும்! ■



# திரு இருதய ஆண்டவர் ஆலயம்

## கோபிசெட்டிபாளையம், ஈரோடு மாவட்டம்
## கோவை மறைமாவட்டம்

# தேர் திருவிழா அழைப்பிதழ்

அன்புடையீர்,

நமக்காய் ஏங்கி தவிக்கின்ற கிறிஸ்துவின் இதயத்தின் அன்பை உணர்ந்தவர்களாய், அந்த இதயத்தில் என்றும் ஒன்றுப்பட்டு வாழும் குடும்பமாய், என்றும் ஏற்றுக்கொள்ளும் இதயத்தில் அர்ப்பணித்தவர்களாய், நன்றியோடு விழா கொண்டாட அழைக்கின்றோம்.

## நிகழ்வன

**17.07.2022** கொடியேற்றம்

**ஞாயிறு** காலை 9.00 மணி **திருப்பலி, கொடியேற்றம்**

அருள்பணி. அந்தோணி லாரன்ஸ் பங்குத்தந்தை, கோபி

**22.07.2022** திருவிழா தயாரிப்பு

**வெள்ளி** மாலை 5.30 மணி **ஜெபமாலை, ஆராதனை திருப்பலி**

அருள்பணி.ஜெரால்டின் ஸ்டீபன் உதவிப்பங்குத்தந்தை, புலியகுளம், கோவை

**23.07.2022** மாலை 5.30 மணி **ஜெபமாலை, ஆராதனை திருப்பலி**

**சனிக்கிழமை** அருள்பணி. டேவிட் அலெக்ஸான்டர் பங்குத்தந்தை, கொளப்பலூர், ஈரோடு மாவட்டம்

**24.07.2022** திருவிழா சிறப்பு

**ஞாயிறு** காலை 9.00 மணி **ஜெபமாலை, கூட்டுப்பாடல்திருப்பலி**

அருள்பணி. இருதய லாரன்ஸ் பேராசிரியர்
நல்லாயன் குருத்துவக்கல்லூரி, கோவை

மாலை 5.30 மணி **ஜெபமாலை, கூட்டுப்பாடல்திருப்பலி**

அருள்பணி. கிளாடியஸ் பங்குத்தந்தை, கொமராபாளையம், ஈரோடு

மாலை 7.00 மணி **தேர்பவனி** இரவு 8.00 மணி **நற்கருணை ஆசீர்**

அனைவரும் வாரீர்! இறையாசீர் பெறுவீர்!!



அன்புடன் அழைக்கும்... அருள்பணி.அந்தோணி லாரன்ஸ்
பங்குத்தந்தை
அன்பியங்கள் – பங்குமக்கள்

Nallavarkalin Nadi Thudippu Nam Vazhvu-Tamil Weekly-Reg.No.TN/CH(C)/383/2021-2023 RNI No.TNTAM/2008/26677
Licenced to Post Without Prepayment WPP No.TN/PMG(CCR)/WPP-108/2021-2023. Published on Every Wednesday. Posted on 13.07.2022 at Patrika Channel, Egmore.



# தூத்துக்குடி
# பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்
## திவ்விய சந்தமரிய தஸ்நேவிஸ் மாதா பேராலய
## 440 ஆம் ஆண்டு பெருவிழா

**25.07.2022 திங்கள் - கொடிப்பவனி**
மாலை 05.00 திருப்பலி
06.00 திருச்சிலுவை சிற்றாலயத்திலிருந்து
காணிக்கைப் பவனி
தலைமை : அருள்பணி. **லெரின் டிரோஸ்**

**26.07.2022 செவ்வாய் - கொடியேற்ற விழா**
காலை 05.00 முதல் திருப்பலி
05.45 இரண்டாம் திருப்பலி
07.00 சிறப்புத் திருப்பலி, கொடியேற்றம்
தலைமை : **மேதகு ஆயர் ஸ்டீபன்**
09.30 திருப்பலி
நண்பகல் 12.00 அன்னைக்கு பொன் மகுடம் அணிவித்தல்
அருள்பணி. **ரூஃபஸ் ஃபர்னான்டோ** சே.ச.,
மாலை 05.30 திருப்பலி

27.07.2022 முதல் 04.08.2022 வரை
நவநாட்களில் தினமும் நடைபெறும் திருப்பலி நேரம்
05.00 AM 05.45 AM , 06.30 AM 07.30 AM
08.30 AM, 09.30 AM, 11.00 AM , 05.30 PM

**31.07.2022 ஞாயிற்றுக்கிழமை**
காலை 07.30 மணிக்கு : **புதுநன்மைத் திருப்பலி**
தலைமை : **மேதகு ஆயர் ஸ்டீபன்**
**11.30 மணிக்கு : மறைமாவட்டத் துறவியருக்கான திருப்பலி**
தலைமை : **மேதகு ஆயர் இவோன் அம்புரோஸ்**
**மாலை 06.15 மணிக்கு : நற்கருணைப் பவனி**
தலைமை : **மேதகு ஆயர் ஸ்டீபன்**

**04.08.2022 - வியாழக்கிழமை**
இரவு 07.00 மணிக்கு : பெருவிழா மாலை ஆராதனை
தலைமை : **மேதகு ஆயர் ஸ்டீபன்**

## தூய பனிமய அன்னையின் பெருவிழா
**05.08.2022 வெள்ளிக்கிழமை**
காலை 04.30 மணிக்கு - முதல் திருப்பலி
05.30 மணிக்கு இரண்டாம் திருப்பலி
07.30 மணிக்கு - **பெருவிழா கூட்டுத் திருப்பலி**
**மேதகு ஆயர் ஸ்டீபன்** (தூத்துக்குடி மறைமாவட்டம்)
09.00 மணிக்கு : தூத்துக்குடி மறைமாவட்ட மக்களுக்காக
பேரருள்திரு. **பன்னீர்செல்வம்,** (மறைமாவட்ட முதன்மைக் குரு)
10.00 மணிக்கு: உபகாரிகளுக்காக திருப்பலி
**மேதகு ஆயர் இவோன் அம்புரோஸ்**
நண்பகல் 12.00 மணிக்கு சிறப்பு நன்றித் திருப்பலி
மாலை 05.00 மணிக்கு : பெருவிழா நிறைவுத் திருப்பலி
**மேதகு ஆயர் அந்தோணிசாமி**
(பாளையங்கோட்டை மறைமாவட்டம்)

**06.08.2022 சனிக்கிழமை**
**கொடியிறக்கவிழா, நன்றியறிதல் நாள்**
காலை 06.30 மணிக்கு - **கொடியிறக்கம்**



இறையாசீர் பெற அன்புடன் அழைக்கும்
அருள்முனைவர் **குமார் ராஜா,** பங்குத்தந்தை
அருள்பணி. **பால் ரோமன்,** உதவிப் பங்குத்தந்தை
அருள்சகோ. **பெல் கிளிண்டன்** களப் பணியாளர்
அடைக்கல அன்னை, அமலவை அருள்சகோதரிகள்,
சவேரியானா இயேசு சபையினர்,
லசால் அருள்சகோதரர்கள்,
பேராலய மேய்ப்புப் பணிக்குழுவினர்,
பக்த சபையினர் இறைமக்கள்,
**தூய பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,**
42, கடற்கரை சாலை, தூத்துக்குடி - 628 001
**Ph. 0461-2320854, 2324854, 82209 47823**
email: officepanimaya@gmail.com
**www.snowsbasilica.com**

Published by **L.Vijay Nirmal Gnani Raj,** Printed by **S. Theesmas** on behalf of **Namvazhvu Publication Society,**
Printed at Lilly Soosai Offset, 16/23, Sami Achari Street, Royapettah, Chennai – 600 014.
Published from 62(153), Luz Church Road, Mylapore, Chennai – 600 004. Editor: **L.Vijay Nirmal Gnani Raj.**